# மேனிலை ஆசிரியர் பனுவல்

# சிறப்புத்தமிழ்

வகுப்பு

XII

**Higher Secondary Teacher Text**
**Tamil - Optional**
**Standard XII**


கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

## HandBook workshop Participants

### Members

**Alipathumma. K,** Kumuli, Idukki

**Jasmine J.,** GTHSS., Chalai, TVM.

**Dr. Karunanidhi M.,** GTHSS., Chalai, TVM.

**Singh M.B,** HSA, (Rtd), GTHSS., Chalai, TVM.

**Dr. Manickaraj K.,** Asst. Prof., University College, TVM.

**Dr. Shanthi P.,** Asst. Prof., University College, TVM.

### Experts

**Dr. Doctor Nazeemdeen,** Prof., (Rtd), Kerala University, TVM

**Dr. Gomathy Nayagam E.,** Guest Lecturer, University of Madras, Chennai.

**Dr. Kanchana,** Prof. & Head (Rtd), University of Kerala, TVM.

**Dr. Nainar M.,** Reader (Rtd), University College, TVM.

**Dr. Parasuraman, T.,** Prof. PILC, Pondicherry.

**Dr. Rajaram S.,** Prof. (Rtd), Tamil University, Thanjavur.

**Dr. Ratnasabapathy P.,** Prof. (Rtd), Chennai.

**Dr. Sethupandian,** Prof., M.K. University, Madurai.

**Dr. Veerappan P.,** Prof. (Rtd), NCERT, Mysore.

**Dr. Vijayalakshmi T.,** Asst. Prof. University of Kerala, TVM.

### Academic Co-ordinator

**Dr. Sahayadhas D.,**
Research Officer, SCERT., Thiruvananthapuram.

*Prepared by:* State Council of Educational Research & Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram -12, Kerala. E-mail:scertkerala@gmail.com

*Type setting by:* SCERT Computer Lab.

©
Government of Kerala
Education Department
2014

அன்பான ஆசிரியர்களே,

அறிவாக்க முறையில் மேம்பட்ட கற்றல் அனுபவங்களையும் அதற்கேற்ற கற்றல் அடைவுகளையும் மாணவர்கள் பெறும் வண்ணம் பாட ஏற்பாடு, பாடநூல் இவற்றிற்கேற்ப வடிவமைக்கப்பட்டதே இந்த ஆசிரியர் பனுவல்.

சிறப்புத்தமிழைப் பயிலும் மாணவர்கள், மொழி, மின்ஊடகங்கள், மனிதகுலம்பாடு இயற்கை, ‘சுற்றுச்சூழல், தொழிலாளர் மேம்பாடு, திரைப்படம் போன்ற துறைகளில் அதிக அறிவைப் பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள பாடநூலை வகுப்பறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்த இப்பனுவல் உதவும். பல்வேறு செயல்பாடுகளும், கற்றல் அடைவுகளுக்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளன. மட்டுமின்றி, ஒவ்வொரு செயல்பாட்டையும் வகுப்பறையில் நடைமுறைப் படுத்துவதோடு அவற்றை எவ்வாறு மதிப்பிட வேண்டும் என்பதையும் இப்பனுவல் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. கற்றலில் பின்தங்கிய மாணவர்களைக் கருத்தில் கொண்டு, செயல்பாடுகளை நடத்திச் செல்ல வேண்டும். உடல்நலக்கல்வி, உடற்பயிற்சிக் கல்வி, தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றையும் வகுப்பறைக்கேற்பச் செயல்படுத்த வேண்டும்.

ஆசிரியர் பனுவலில் உள்ள செயல்பாடுகள் மட்டுமின்றி, ஒவ்வொரு ஆசிரியரின் கற்பனைக்கேற்ப அதிகச் செயல்பாடுகளையும், மாற்றுச்செயல்பாடுகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலாம்.

இப் பனுவலின் உதவியுடன் வகுப்பறைச் செயல்பாடுகளை வெற்றிகரமாக நடத்துவீர்கள் என நம்புகிறேன்.

வாழ்த்துகளுடன்...

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
**இயக்குநர்**
எஸ்.சி.இ.ஆர்.டி.

# உள்ளடக்கம்


1. பாட ஏற்பாடு பொது அணுகுமுறை ................................ 5

2. மதிப்பீட்டு அணுகுமுறை ................................................. 23

அலகு

1. இயற்கையும் சுற்றுச் சூழலும் .......................................... 37

2. வேர்வைத் துளிகள் ............................................................. 54

3. மனிதகுல மேம்பாடு ........................................................... 65

4. மொழியும் சமூகமும் ........................................................... 76

5. அறிவின் வாயில்கள் ........................................................... 86

பின்னிணைப்பு ........................................................................ 97

# மேனிலை வகுப்புப் பாட ஏற்பாடு
# பொது அணுகுமுறை 2013

## முகவுரை

மறுமலர்ச்சிப் பரம்பரையும் இலவசமும் அனைவருக்கும் சார்ந்ததுமான பொதுக் கல்வியை வழிக் கேரளம் ஓர் அறிவுசார் சமூகமாக மாறியுள்ளது. பாடத்திட்டச் சீரமைப்பின் வழியாகவும் படைப்பு சார்ந்த ஈடுபாட்டின் வழியாகவும் சிறந்த கல்வி நம்மால் அடைய முடிந்தது. இத்தகைய ஈடுபாடுகள் கேரளத்தின் கல்வி நிலையை தேசிய அளவில் புகழுடையதாக மாற்றியது.

20 ஆம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளிலேயே சமூகத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு வரவழைக்க நம்மால் முடிந்தது. அனைவருக்குமான இலவசக் கல்விக்குத் தேவையான முயற்சிகளும் எல்லா நிலைகளிலும் நடந்துள்ளன. அரசின் இடையீடு, மிஷனரிகளின் செயல்கள், சமூக மாற்ற அமைப்புகள் முதலானவை பொதுக் கல்வியின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன. சுதந்திரத்திற்குப் பின் வந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு அறிக்கை முதல் 2005-இல் தேசியப் பாடத்திட்டச் சட்ட அமைப்பு வரையிலான தேசிய அறிக்கைகளும் அணுகுமுறைகளும் கேரளத்தின் பாட ஏற்பாடு மாற்றங்களுக்கு வழிகோலின.

டாக்டர் இலக்ஷ்மணசாமி முதலியார் தலைமை வகித்த உயர்நிலைக் கல்விக் குழு உயர்நிலைக் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டது. டாக்டர் டி.எஸ்.கோத்தாரி தலைமையிலான குழு சமர்ப்பித்த கல்வியும் தேசிய வளர்ச்சியும் என்ற அறிக்கை ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரையிலான நிலைகளில் உட்படுத்தப்பட்டது. இக்குழு முதன்முதலாக 10 + 2 + 3 என்ற நிலையை அறிமுகப் படுத்தியது. 1986 இல் தேசியக் கல்வித் திட்டம் இதை அங்கீகரித்தது. இதன் அடிப்படையில்தான் கேரளத்தில் மேனிலைக் கல்வி நடைமுறைக்கு வந்தது. ஆசிரியர் மைய முறையிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட குழந்தை மையச் செயல்முறையிலான பாட ஏற்பாட்டுச் சீர்திருத்தம் 1990-இல் அமைக்கப்பட்டது.

2005-இல் தேசிய பாடஏற்பாடு சட்டக்கூடு (National Curriculum Framework-2005) இந்தியக் கல்வியில் அனேக மாற்றங்களுக்குத் தொடக்கமிட்டது. தொடர்ந்து NCF-2005 இன் அடிப்படையில் பல பாடங்களில் NCEFT-பாடநூல்கள் தயாரித்தார்கள். கேரளத்தில் NCF-2007 உருவாக்கியதோடு பாடஏற்பாடு சீர்திருத்தம் உயர்நிலை வரை கொண்டு வரப்பட்டது. 2009 இல் கல்வி உரிமைச் சட்டமும் மேனிலையோடு தொடர்புடைய P.O.J.லப்பா குழு அறிக்கையும் சீர்திருத்தத்திற்காக அரசு நியமித்த டாக்டர். P.K.அப்துல் அசீஸ் குழு அறிக்கையும் பாட ஏற்பாடு சீர்திருத்தம் தேவையானதென்று குறிப்பிடுகின்றன.

கேரளக் கல்வித்துறை வரலாற்றில் சிறப்பானதொரு காலகட்டமாகும் மேனிலையின் தொடக்கம். P.D.C-யை உயர்கல்வித் துறையில் இருந்து வேறுபடுத்திப் பொதுக் கல்வியின் பகுதியாக இணைத்ததோடு கல்வி பரந்துபட்டது. கேரளத்தில் 1990 ஆம் ஆண்டு மேனிலை இயக்குநர் (H.S.E.D) பணியிடம் உருவாக்கப்பட்டது 31 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேனிலையாக உயர்த்தப்பட்டதோடு மேனிலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் P.D.C பாட அமைப்பின் மொழிப் பாடநூல்களும் NCERT-யின் பிற பாடநூல்களையும் பின்பற்றிக் கேரளத்தில் மேனிலைப்பாட ஏற்பாடு தொடங்கப்பட்டது.

1990-களில் கற்றலிலும் கற்பித்தலிலும் முழுமையான மாற்றம் ஏற்படுத்திக்கொண்டு புதிய பாட ஏற்பாடு ஆரம்பநிலையில் கொண்டுவரப்பட்டது. இதற்கேற்ப செயல்பாட்டு முறையும், செயல்முறைக்கு உட்பட்ட குழந்தை மையக் கல்வியும் தொடர் மதிப்பீட்டு முறையும் தர நிர்ணய முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொடர்ந்து இம்முறை மேனிலையிலும் கொண்டுவரப்பட்டது. ஆனால், முழுமையான பாடஏற்பாட்டு முறை மேனிலைகளில் உட்படுத்தப்படவில்லை. SCERT-யின் தலைமையில் சில பாடங்களுக்குப் பாடநூல்களும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் கையேடும் வினாத்தொகுப்பும் வெளியிடப்பட்டன.

2007-இல் நடைமுறைக்கு வந்த ஒற்றைச் சாளர முறை மேனிலைக்கல்வி நுழைவினை எளிமைப்படுத்தியது. இந்த ஆய்வின் பலனாகத் தேர்வுமுறை, பாடநூல் தேவை, ஊக்கத்தொகை, இணையவழிப் பரிமாற்றம் (Online Transfer) முதலானவற்றின் செயல்முறை மேனிலை அமைப்பைச் சிறப்புடையதாக்கியது.

பல்வேறு வகையிலானதும் புதுமையானதுமான பாடங்கள் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகளைக் கேரளத்திலுள்ள மேனிலைக் கல்வித்திட்டம் தருகிறது. தேசிய பாடத்திட்டச் சட்டக்கூடு 2005 முன்வைப்பதைவிட அதிகமான சிறப்புப் பாடங்களைக் கொண்டு அமைவது கேரளப் பாட ஏற்பாடு என்பது பெருமையுடையதாகும். முதல் மொழிப் பாடமாக ஆங்கிலமும் இரண்டாம் மொழிப் பாடமாக 12-மொழிகளில் ஏதாவது ஒரு பாடமும் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு மாணவனுக்குக் கிடைக்கின்றது. அறிவியலில் 10உம் வணிகவியலில் 4உம் மானுடவியலில் 32உம் உட்பட்ட 46 பிரிவுகள் உள்ளன. கலைப்பாடத்திற்குத் தனிப் பள்ளிகள் செயல்பட்டுவருகிறது.

மேனிலைத் துறையில் சிறப்பானதொரு கல்வி தருவதற்கு அனைத்து ஆசிரியர்களுக்கும் சீர்திருத்தப் பயிற்சி அரசு நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. கற்றல் கற்பித்தல் முறையில் இப்பொழுது உள்ள பிரச்சினைகள்

கலந்துரையாடல் செய்வதற்கும் பாடச் செயல்கள் உருவாவதற்கும் ஆசிரியர் கூட்டங்கள் உதவுகின்றன.

**பாட ஏற்பாட்டுச் சீரமைப்பின் முக்கியத்துவம்**

அறிவு என்பது அடிக்கடி ஏற்படும் மாற்றத்திற்கு உட்படும் பகுதியாகும். அறிவு மண்டலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை உட்கொண்டும் முக்கிய பகுதிகளை உட்கொண்டும் காலந்தோறும் வளர்ச்சியடையும் பாடஏற்பாட்டிற்கு முன்னேற இயலும். இந்த மாற்றமே கேரளப் பள்ளிக்கூடப் பாடஏற்பாட்டைப் பிற இந்திய மாநிலங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

மேனிலை வகுப்புகளில் செயல்பாட்டு அடிப்படையிலான கற்றல் முறை தற்சமயம் உள்ளது என்றாலும் ஒன்றிணைந்த பாடஏற்பாட்டு மாற்றம் நடைபெறவில்லை. சமகால நிகழ்வுகளோடு தொடர்புடையதும் மேனிலை மாணவர்களின் பண்புகளை கருத்தில் கொண்டதுமான பாடஏற்பாட்டு மாற்றம் இப்போது நடந்து வருகிறது. உயர்கல்விக்கான அடிப்படை என்ற நிலையில் மேனிலைக் கல்வியை உலகத் தரம் வாய்ந்ததாக மாற்றுவதே இக்கல்வி முறையின் இலட்சியமாகும். (உலகளாவிய தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டிலுள்ள கல்வியின் தரமன்று). மேனிலை கல்வியை நிறைவு செய்யும் மாணவனுக்கு உலகத்தின் எவ்விடத்திலும் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கான திறன் கிடைக்க வேண்டும். அன்றாட வாழ் வியல் தேவைகளுக்கும் வாழ்வியல் முறைகளுக்குமான திறன்களைப் பெறுவதற்கான அறிவு, அனுபவம் இவற்றின் மொத்தத் தொகையே பாட ஏற்பாடாகும். உலக அளவில் அறிமுகப்படுத்திய சிறந்த கற்றல், கற்பித்தல் மாதிரிகள் நமது மாணவர் களுக்கு கிடைக்கச் செய்தல் வேண் டும். அதற்கான முயற்சி என்ற நிலை யில் ஒருங்கிணைந்த பாட ஏற்பாட்டு மாற்றமே நடைமுறைப்படுத்தப்படு கிறது. பாட ஏற்பாடு கால கட்டத் திற்கு ஏற்ப நவீனப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பாடஏற்பாட்டு மாற்றத்தோடு தொடர்புடைய அரசு ஏற்படுத்திய சிறப்புக் குழுவால் பரிந் துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வி உரிமைச் சட்டத்தில் உள்ள பாடஏற்பாடு, மதிப்பீடு என்பவற்றோடு தொடர்புடைய சட்டங்கள் பாடஏற்பாட்டுச் சீரமைப்பில் உட்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

> ஐந்தாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ள பாடஏற்பாடும் பாடத் திட்டமும், பாடநூல்களும் உடனடியாக SCERT-இன் தலைமையில் சீரமைக்க வேண்டும்.
>
> Prof. P.O.J. Labba Committee

> ஓர் அறிவுசார் சமூகம் என்ற நிலையில் காலகட்டத்தின் சவால்களை எதிர் கொள்ளப் பாடஏற்பாட்டை அடிப் படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டியதும் நவீனப்படுத்த வேண்டி யதும் அவசியமாகும்.
>
> Dr. P.K.Abdul Azees Committee

**கல்வி உரிமைச் சட்டம் - 2009**
**பிரிவு - 29 (அத்தியாயம் - 5)**
**பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்**

1. ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப்பட வேண்டும்.
2. கல்வி அதிகார நிலை 1 ஆம் துணைப் பிரிவின் படி பாடத்திட்டத்தையும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும்போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(a) அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்குப் பொருத்தமாக அமைதல்.
(b) மாணவர்களின் பன்முக வளர்ச்சி.
(c) மாணவர்களின் அறிவையும் திறனையும் புலமையையும் படிப்படியாக வளரச் செய்தல்.
(d) உடல்-உளத் திறமைகளின் முழு வளர்ச்சி.
(e) மாணவ மாணவிகளுக்கு நெருக்கமானதும் குழந்தை மைய மானதுமான செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.
(f) கற்பிக்கும் மொழி மாணவரின் தாய்மொழியில் அமையவேண்டும்.
(g) பயம், மனதைத் தாக்கும் சூழல், ஆதங்கம் போன்றவற்றிலிருந்து மாணவர்களை விடுவித்து, சுதந்திரமாகக் கருத்தை வெளியிட மாணவர்களுக்கு உதவ வேண்டும்.
(h) அறிவைப் பெறுவதற்கும் அதைப் பயன்படுத்துவதற்குமான குழந்தையின் திறனை முழுமையாகவும் தொடர்ந்தும் மதிப்பிடுதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை உறுதி செய்யும் வகையில் பாட ஏற்பாடு அமைய வேண்டும். இந்தப் பின்புலங்களின் அடிப்படையில்தான் பாடஏற்பாட்டின் சீரமைப்பை நோக்க வேண்டும்.

**கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு - (2013) - சிறப்பம்சங்கள்**

- மாணவர்களை மையமாகக் கொண்ட இப்பாட ஏற்பாடு செயல்திறனும் சிந்தனை ஆற்றலும் மதிப்பும் / தகுதியும் கொண்டதாகும்.
- கொள்கைப்பிடிப்பிலும், சிந்தனைத் திறனிலும் சமூகத்தின் உணர்ச்சிப் பாங்கினடிப்படையில் கற்போன் பெறவேண்டிய கற்றல் அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

- தகுதியிலும் மனோநிலையிலும் கற்போன் அடைய வேண்டிய திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது
- அறிவு உருவாக்கம் எனும் கொள்கையைக் கொண்ட பாடத்திட்டம்
- பகர்தல் செயல்பாடுகளில் வேறுபட்ட பொருத்தமான கற்றல் வழிமுறைகளைக் கடைபிடிக்க ஆசிரியருக்கு முழு உரிமை
- கற்றல் பயன், கருத்தாழம், மாணாக்கர்களின் கற்றல் தரம் போன்றவை கண்டறிந்து, பல்வகை கற்றல் – கற்பித்தல் அணுகுமுறைகளைக் கடைபிடித்தற்கான உத்தி, கண்டுபிடித்தல், கருத்து உருவாக்க முறை (concept attainment model), தூண்டிச் சிந்திக்கச் செய்தல் (Inductive method), சிந்தனையை சிந்திக்கச் செய்யும் திறன் பெறல் (Meta cognition), கூட்டுறவுக்கல்வி (Co-operative learning) இணைந்து கற்றல் (Collaborative learning), பிரதிபலிப்புச் சிந்தனை பெறல் (Reflelective learning) முதலியவற்றிற்குத் தனிநபராகவும் குழுக்களாகவும் வாய்ப்பு அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- அனைவருக்கும் இலவசமும் கட்டாயமுமான கல்வி கிடைக்க வேண்டியது போலவே மாணவர்களின் கற்றல் பயன் உறுதிசெய்யப்படுகிறது.
- தொடக்கக் கல்வி முதல் மேனிலைப் பள்ளிக் கல்வி வரை கருத்தில் கொண்ட பாடஏற்பாடு.
- தகவல் தொழில்நுட்பம் (ICT) தனிப் பாடமன்றிப் பாடங்களோடு தொடர்புபடுத்திக் கருத்துப்பரிமாற்றம் மேம்படுவதற்கான ஓர் அம்சமாகப் பயன்படுத்த வேண்டும்.
- மாற்றுத்திறனாளிகளான மாணவர்களுக்குப் பொருத்தமானதும் கற்றல் அணுகுமுறையைக் கடைபிடித்து மதிப்பீடு உருவாக்கப்படுகிறது
- கற்றலின் அடிப்படையிலான முழுமையான நிரந்தரத் தொடர் மதிப்பீடு (CCE) உறுதி செய்யப்படுகிறது.
- ஆரோக்கிய – விளையாட்டுக் கல்வி, கலை, கைவினை கற்றல் (work experience) போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது
- மேனிலைப் பள்ளித் தலத்தில் காலகட்டத்திற்குப் பொருத்தமான பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன.
- கல்வி உரிமைச் சட்டத்தினடிப்படையில் உரிமையிலூன்றிய கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது
- ஆசிரியர்கள் ஓர் இணைப் பாதுகாவலன் எனும் மனநிலைக்கு உயர்ந்து, மாணாக்கர்களுக்குப் பள்ளியிலும், வகுப்பறையிலும் பாதுகாவலரும், நிழல் தருவோருமாக மாறிட வாய்ப்பளிப்பதே இப்பாட ஏற்பாடு.
- ஆசிரியர் கடைபிடிக்கவேண்டிய கோட்பாட்டிற்கு (Code of Professional ethics for School Teachers) உறுதுணை செய்கிறது
- புதுக்காலகட்டத்தின் சோதனைகளைச் சாதனையாக்குவதில் கற்றல் நுணுக்கங்கள் பெறப்படுகின்றன.
- மனிதாபிமானம் கொண்ட தலைமுறையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகுக்கின்றன.
- நடுநிலையும், சமத்துவமும் உறுதிசெய்யப்படுகின்றன.
- இயல்பான கற்றலை உறுதிப்படுத்த மாணவர்களின் உடல், மன அளவிலும் செயல்பாட்டு முறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம், செயல் இவற்றிற்கு ஏற்ற பாடஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) அமைய வேண்டும்.

### பாட ஏற்பாட்டு அணுகுமுறை

கல்வி தொடர்பான உளவியல் மற்றும் தத்துவக் கோட்பாடுகளின் புதிய சிந்தனைகளை உள்வாங்கி நமது பாடஏற்பாடு மேம்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பாட ஏற்பாட்டுச் சட்டம் (NCF) 2005 முன்வைத்துள்ள அறிவு உருவாக்கக் கொள்கையே கேரளப் பள்ளிப் பாடஏற்பாடு 2013க்கும் அடிப்படையாக உள்ளது. அறிவு உருவாக்கக் கொள்கைப்படி கற்றல் என்பது அறிவின் உருவாக்கமாகும்.

ஐம்புலன்களின் வாயிலாகச் சுற்றுப்புறத்திலிருந்து படிப்பதற்கான பிறவித் திறன்களுடன்தான் ஒரு குழந்தை பிறக்கின்றது. உலகத்தைப் புதிய முறையில் காண்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஈடுபடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான வாய்ப்புகள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் முறைசார்ந்த கல்வியின் வழியாகக் குழந்தைக்குக் கிடைக்கின்றது. பாட ஏற்பாட்டுப் பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்புகள் என்னென்னவாக இருக்க வேண்டும்?

- செயல்பாடு அடிப்படையிலானது
- செயல்முறை தொடர்புடையது
- கல்வியை உறுதிப்படுத்துவது
- கற்றல் அடைவுகளைப் பெறுவதற்குப் போதுமானது
- சுற்றுச்சூழலுடன் இணங்கியது
- வளர்ச்சித் துறைகளைக் கருத்தில் கொள்வது
- கற்போரின் இயல்புக்கு ஏற்றது
- கற்றலுடன் மதிப்பீடும் ஒருங்கிணைந்து செல்வது

அறிவு உருவாக்கக் கொள்கையின் அடிப்படையிலான கற்றல் முறையே பாட ஏற்பாட்டிற்கு ஆதாரமானது. கற்போரின் இயல்பான அறிவையும் கருத்துச் சூழலையும் கருத்தில்கொண்டு, முறையான கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுவதன் வாயிலாகச் சுயமான அறிவை உருவாக்கமுடியும் என்பது இவ் வணுகுமுறையின் தனித்தன்மையாகும்.

**கற்றல் அனுபவங்கள்**

வேறுபட்ட வாழ்க்கைச் சூழல்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள அறிவு, திறன், ஆர்வம் என்பன வேறுபட்டவை. இவ் வேறுபாட்டை உள்வாங்கிக் கொண்டு, தனிமனித வேறுபாடுகளையும் பன்முக அறிவையும் கருத்தில்கொண்டு கற்றல் அனுபவங்களை ஏற்படுத்துவது என்பது முக்கியமானது.

**கல்விச் சூழல்**

மாணவனின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு அவர்கள் வித்தியாசமான கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு இயல்கின்ற முறையில் வகுப்பறைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய செயல்பாடுகள் மாணவ, மாணவிகளை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். அதற்கு உதவுகின்ற ஒரு கல்விச் சூழலைத்தான் உருவமைக்க வேண்டும். கல்விச் சூழலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு, மாணவர்களை மையமாகக் கொண்டதும் செயல்பாடுகள் அடிப்படையிலானதும் சூழலுக்குப் பொருத்தமானதுமான கற்றல் உத்திகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உரியது.

**கற்றல் செயல்முறை**

- ஒவ்வொரு மாணவனும் அவனது முன்அனுபவங்களுடன் தொடர்புபடுத்தியே அறிவை உருவாக்குகின்றான். (Knowledge construction)
- தனிமனித நிலையிலும் சரியான சமூக ஈடுபாட்டின் வழியாகவும் அறிவு உருவாக்கம் நடைபெறுகின்றது.
- வேறுபட்ட கற்றல் முறைகள் (Learning styles), கற்றல் வேகம் (Learning pace) ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஐம்புல அனுபவங்களின் (Multi sensory experiences) வழியாகக் கற்பவை கற்றலைப் பயன்மிக்கதாக்குகின்றன.
- சேர்ந்து கற்றல் மற்றும் கூட்டுறவு அடிப்படையிலான கற்றல் சூழ்நிலைகள் வழியாகவும் கற்றல் மேலும் பயனுள்ளதாகின்றது.
- கற்றல் கருவிகள் (Learning materials) ஆர்வமூட்டுபவையாகவும் பயனுள்ளவை யாகவும் இருக்க வேண்டும்.
- கற்றல் அனுபவங்களைச் சுழற்சி (Spiralling) முறையில் வெளிப்படுத்துவதன் மூலமும் கற்றல் சிறப்புடையதாகின்றது.
- கற்றல் செயல்பாடுகளுக்குப் பொருத்தமான நெகிழ்ந்த மனநிலை (Flexibility) உள்வாங்கும் திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் வாயிலாக வேறுபட்ட கற்றல் தேவையுள்ளவர்களையும் ஆர்வமுள்ளவர்களையும் கண்டறியலாம்.
- கற்றல் அடைவுகளை (Learning outcome) உறுதிப்படுத்தும் கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்க வேண்டும்.
- கற்றலும் மதிப்பீடும் இணைந்து நடக்க வேண்டும்.
- உள்ளடக்கம் (content), மாணவனின் கற்றல் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமான கற்றல் முறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தும்போது எல்லோருக்கும் குறிப்பிட்ட கற்றல் அடைவுகளைப் (Learning outcome) பெற முடியும்.
- ஒவ்வொரு மாணவனுடையவும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே கற்றல் செயல்முறைகளைத் தீர்மானிக்கவேண்டும்.

**கற்றல் அடைவுகள்**

கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013இன் ஒரு பகுதியாக ஆர்.டி.இ. முறைப்படி கற்றல் அடைவுகள் என்னும் கருத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கற்பித்தல், கற்றல், மதிப்பீடு ஆகியவற்றைத் துல்லியமாகவும் பயன்பாட்டு நிலையிலும் திட்டமிடக் கற்றல் அடைவுகள் தொடர்பான அறிவு இன்றியமையாதது. பாட ஏற்பாட்டை உருவாக்கும்போது பள்ளிக் கல்வியின் வெவ்வேறு கட்டங்களில் மாணவர்கள் அடையவேண்டிய இலக்குகளாக நாம் கருதுபவைதாம் கற்றல் அடைவுகள், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவ- மாணவிகள் அடையவேண்டிய அறிவு, திறன், ஆர்வம், மனநிலை, ஈடுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நுண்மையான கருத்துகள்தாம் கற்றல் அடைவுகள். இவற்றுள் சில குறுகிய காலஅளவில் அடையக் கூடியனவும் வேறுசில நீண்ட காலஅளவில் அடையக் கூடியனவுமாகும். இவ்வாறாக மாணவ மாணவிகளிடம் உண்டாக வேண்டிய மாற்றங்களை முன்னராகவே நிச்சயிக்க நம்மால் இயலும். பள்ளிக் கல்வியின் வெவ்வேறு கட்டங்களில் மாணவர்கள் பெறவேண்டிய அறிவுகளும் எண்ணங்களும் திறன்களும்தாம் கற்றல் அடைவுகள். அலகுநிலைக் கற்றல் அடைவுகளின் வழியாக ஆண்டு இறுதியிலும் பள்ளிக்கட்டத்தின் இறுதியிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகளாக இவை வளர்ச்சி பெறவேண்டும்.

உற்றுநோக்கல் வாய்ப்பும் அளவிட முடிகின்றதுமான செயல்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே கற்றல் அடைவுகளைத் தேர்வுசெய்ய வேண்டும். ஒவ்வொரு அலகிற்கும் வகுப்பிற்கும் மற்றும் கட்டத்திற்கும் இறுதியில்

மாணவர்கள் பெறவேண்டிய அறிவு, திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்களா என்பதை மதிப்பிடக் கற்றல் அடைவுகளின் பகுப்பாய்வால் இயலும். அதாவது கற்றல் அடைவுகளை அடிப்படையாகக் கொண்டு துல்லியமாகவும் தெளிவாகவும் மதிப்பீட்டுச் செயல்பாடுகளைத் திட்டமிட முடியும்.

கற்றல் அடைவுகள் எளிமையும் தெளிவும் அறிவுப்பூர்வமானவையாகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தாத வண்ணம் கற்றல் அடைவுகளைக் குறிப்பிடல் வேண்டும். மாணவனால் என்னென்ன செய்யமுடியும் என்பவற்றைக் குறிப்பிடுபவைதாம் கற்றல் அடைவுகள் என்ற நிலையில், மாணவனின் பார்வையிலிருந்து கற்றல் அடைவுகளைத் தேர்வுசெய்ய வேண்டும். அதாவது கற்றல் அடைவுகள் மாணவர்களை மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

கற்றல் அடைவுகள் உள்ளடக்கம், செயல்முறைகள், திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் ஆகியவை உள்ளடங்கியவையாக இருக்கவேண்டும். மாணவ- மாணவியரின் வெளியீட்டுத் திறன்கள் என்ற நிலையில் இஃது ஆசிரியரின் சமூகக் கடமையையும் பொறுப்பையும் உறுதிப்படுத்துகின்றது. மாணவ மாணவியரின் கற்றல்நிலை தொடர்பாகப் பெற்றோர்களுக்கு ஆர்வமும் அறிவும் இருக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கூடுதல் கற்பித்தலும் தொடர் மதிப்பீட்டுச் செயல்பாட்டின் பகுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும். சுருங்கக்கூறின் கற்றல் அடைவுகளை வகுப்பறைச் செயல்பாடுகளுடனும் மதிப்பீட்டு அணுகுமுறையுடனும் தொடர்புபடுத்த வேண்டும். பாட ஏற்பாட்டின் பயன்தக்கப் பரிமாற்றத்தின் வாயிலாக எல்லா மாணவ மாணவியரின் கற்றல் அடைவுகளையும் உறுதிப்படுத்த இயல வேண்டும். மேம்பட்ட கல்விக்கு இது இன்றியமையாததாகும்.

### கருத்துப் பரிமாற்றத் தொழில்நுட்பம்

அறிவின் உருவாக்கத்திலும் பரிமாற்றத்திலும் கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. கருத்துச் சேகரிப்பு வழியாகவும் பகுப்பாய்வின் மூலமும் வேறுபட்ட வெளியீட்டின் வாயிலாகவும்தான் இது சாத்தியமாகிறது. மேனிலைக்கல்வியில் எந்த ஒரு பாடத்தையும் பரிமாற்றம் செய்வதற்குக் கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பத்தின் (ICT) வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் மாணவர்கள் ICT திறன்களைப் பெறுகின்றனர் என்பதை உறுதிப்படுத்தவும் இயலும்.

### தேவை

பாடப்புத்தகத்தினுடையவும் உள்ளடக்கப் பரிமாற்றத்தினுடையவும் எல்லைகளைத் தாண்டிச் செல்ல தகவல் தொழில்நுட்பத்தால் (ICT) இயலும். கற்றல் செயல்பாடுகளை ஏற்றெடுத்துச் சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்துவதற்கும் முக்கியமானதும் பொருத்தமானதுமான கருத்துச் சேகரிப்பிற்கும் உயர்ந்த நிலையிலான வெளியீட்டிற்கும் மேன்மையான உற்பத்திப் பொருட்கள் தயாராக்குவதற்கும் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப ICT வாய்ப்புகள் மிகவும் பயன்படும். உண்மையில் ஊன்றி நிற்பதும் சிக்கலானதுமான செயல்பாடுகள் பல நேரங்களிலும் நடைமுறைப்படுத்த முடியாமல் ஆகும்போது 'Virtual Lab' இன் உதவியை நாடலாம். அவ்வாறாக வகுப்பறைகள் அதிநவீன (ஸ்மார்ட்) அறைகள் என்பதற்கு மேலாக சோதனைக் கூடங்களாக உயரவும் செய்யும். ஒவ்வொரு பாடத்துடனும் (Subject) தொடர்புடைய அறிஞர் பெருமக்களுடன் விவாதம் செய்வதற்கும் அதாவது பாடப்பொருளில் பல்வேறு நிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் Video conferencing Social Media முதலான அமைப்புகளை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் வாழ்க்கைச் சூழலின் வெவ்வேறு தேவைகளைப் (இணையவழி விண்ணப்பம் (Online application), தேர்வுகள், நேர்முகங்கள், பல்வேறு சேவைகள்) பெறுவதற்கும் தகவல் தொழில்நுட்பம் (ICT) பெரிதும் உறுதுணையாகும்.

### பொருத்தம் (இயைபு)

காட்சி, கேள்வி ஊடகங்கள் பயன்தக்க கற்றல் கருவிகளாகும். மாணவர்களின் படைப்புத் திறனையும் புத்தியின் பன்முகத்தன்மையையும் ஊக்குவிக்க ICT யால் இயலும். ஆர்வம் மற்றும் ஊக்கத்தின் வாயிலாகக் கற்றலில் ஈடுபாட்டை ஏற்படுத்தலாம். ஐம்புல உணர்வில் குறைபாடுகள் உடையவர்களுக்கு இவ்வாய்ப்பு மிகவும் உறுதுணையாக அமையும். கேள்வி மூலமும் காட்சி மூலமும் செய்திகளைக் கூடுதலாகத் தெரிந்துகொள்ள ICT பயன்படும். வேறுபட்ட கற்றல் அனுபவங்களை ஏற்படுத்துவதற்கும் இது மிகவும் உதவிபுரிகின்றது.

### வாய்ப்புகள்

- எண்ணியல் வடிவிலும் (Digital) அசைவு முறையிலும் பாடப்புத்தகங்கள்
- கற்றல் செயல்பாடுகளுக்குத் தேவையான கூடுதல் விபரங்களும் வெளியீடுகளும் அசைவுப்படங்களும் (Animation).
- ஒவ்வொரு பாடப்பொருளுடனும் தொடர்புடைய, உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் கிடைக்கக் கூடிய மிகவும் புதியதும் முக்கியமானதுமான செய்திகள் கிடைக்கின்றன.
- இணைய வழித் தேர்வுகளுக்கும் (online tests) சுய மதிப்பீடுகளுக்கும் மேம்படுத்தலுக்கும் தேவையான வாய்ப்புகள்
- வினாத்தாள் மாதிரிகளும் விடைக் குறிப்புகளும்

- விக்டேர்ஸ் போன்ற தொலைக்காட்சி சேனல்களின் பயன்பாடு
- வாழ்வியல் திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் போன்றவற்றை வளப் படுத்தவும் மன அழுத்தத்தைத் தவிர்ப்பதற்குமான 'இன்டராக்டிவ்' நிகழ்ச்சிகள்
- கட்டுப்பாடும் சட்டத்தின் அடிப்படையிலுமான WiFi வளாகங்கள்
- முழுமையான ஒரு கல்வி Portal உருவாக்கிக் கொண்டும் பள்ளிக்கூடத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொண்டும் ஆசிரியர்களை வலுவடையச் செய்தும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதன் உச்சத்தில் கொண்டு செல்ல வேண்டியது காலகட்டத்தின் தேவையாகும்.

**நம்பகத்தன்மை**

கருவிகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அரசுத் துறை இணையத்தளங்கள் (ஸைட்டுகள்), கல்வி தொடர்பான வலைதளங்கள், போர்ட்டல்கள், புளோக்குகள் (வலைப்பூக்கள்), சமூக இணைய தளங்கள் (Social Networks) ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் செய்திகளின் உறைவிடங்களையும் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்திய பின்னரே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

வகுப்பறைப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்துகின்ற கற்றல் கருவிகளின் பயன்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும். இத்தகைய கருவிகள், அவை செயல்படுவதற்கு உகந்த மென்பொருட்கள் (Software) ஆகியவை எளிதில் கிடைப்பனவும் பயன்படுத்துவதற்குத் தகுந்தனவும் தகவல் தொழில்நுட்பச் சட்டங்கள் (I.T) பின்பற்றுவனவாகவும் இருக்க வேண்டும்.

ICT வாய்ப்புகளைப் பயன்படுத்தும்போது மாணவனின் வயது, மனநிலை, தவறான பாதையை நோக்கிச் செல்லும் தன்மை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கலைக்கல்வி**

மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற நிலையில் மனித வாழ்க்கையின் முன்னோக்கிய பயணத்திற்கு இரசிப்புத் தன்மை கொண்ட அனுபவங்கள் உருவாக்குவதன் ஒரு பகுதியாகவே கலைகள் தோன்றின.

வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் ஏற்படுகின்ற அனுபவங்கள் மனித மனங்களில் உணர்ச்சிகளின் அலைகள் எழுப்பவும் அவற்றிலிருந்து இரசித்து மகிழும்படியான அனுபவங்கள் உருவாகவும் செய்கின்றன. ஆதிகாலம் தொடங்கி தோன்றிவரும் கலைவடிவங்கள் அனைத்துமே காட்சியாகவும் கேள்வியாகவும், மனித மனங்களைச் சீர்படுத்தி வாழ்க்கையில் புத்துணர்வைத் தருபவையாகவும் இருந்தன. இது கலைகளின் ஒரு தனித்தன்மை என்றே கூறலாம். 'Literature, Music and the Arts all are necessary for the development of a student to form and integrate total personality' என்பது கலைகள் குறித்த தாகூரின் கருத்தாகும். சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகாத்மாக்கள் எல்லோரும் கலைகளைப் பற்றி இவ்வாறெல்லாம் குறிப்பிட்டுள்ளனர்.

- படைப்புத்திறன், உற்றுநோக்கும் ஆர்வம், போலச் செய்யும் திறன், கற்பனை ஆற்றல், பரந்துபட்ட அறிவு போன்ற கலைக்கல்வி மாணவ, மாணவிகள் வளர்ச்சியடைய இன்றியமையாததாகின்றது.
- எல்லா நிலைகளிலுமுள்ள அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் கற்றல் வாய்ப்புகள் இதன் மூலம் மாணவர்களுக்குக் கிடைக்கவும் செய்யும்.

மாணவர்கள் பெற்றுள்ள படைப்புத் திறன்களை வளரச் செய்தல், கலை மற்றும் இலக்கியம் குறித்த விரிவான ஒரு பார்வையை உருவாக்கல் ஆகியவற்றையே மேனிலைக் கலைக் கல்வி நோக்கமாகக் கொண்டுள்ளது. கூடவே கலை, இலக்கியத் துறைகளில் மேற்படிப்புக்கும் ஆராய்ச்சிக்குமான ஆர்வத்தையும் ஊக்கப்படுத்தவேண்டும். உற்றுநோக்கும் ஆற்றல், ரசிப்புத் தன்மை, போலச் செய்யும் திறன் போன்றவற்றை மாணவர்களிடையே வளர்த்து எடுக்கக் கலைக் கல்வி மிகவும் தேவையாகின்றது. வித்தியாசமான சிந்தனைகள், வேறுபட்ட கருத்தாடல்கள் போன்றவற்றை உருவமைக்கவும் சமூக ஈடுபாட்டை உறுதிப்படுத்தவும் கற்றலைக் கூடுதல் பயனுடையதாக்கவும் கலைக்கல்வி உறுதுணையாகின்றது. மாணவர்களைச் செயல்திறன் மிக்கவர்களாக்கவும் உற்சாகமும் ஊக்கமும் உடையவர்களாக்கவும் சரியான திசையில் அவர்களை வழிநடத்திச் செல்லவும் கலைகள் தொடர்பான செயல்பாடுகள் உதவுகின்றன.

**உடல் நலம் – விளையாட்டுக் கல்வி**

2001 உலக சுகாதார அமைப்பின் (W.H.O) அறிக்கையின்படி இந்தியாவில் பெரும்பான்மையான இளைஞர்களும் வாழ்க்கைமுறை நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். கேரள அரசின் கணக்குப்படி 2008-09 கல்வியாண்டில் 16,28943 மாணவர்களுக்கு இடையே நிகழ்த்திய விளையாட்டுத்திறன் ஆய்வில் 20% த்திற்குக் கீழ் உள்ளவர்கள் மட்டுமே தகுதி உடையவர்களாகக் கண்டுபிடிக்கப் பட்டனர். இவ்விரு உண்மைகளுமே வருத்தத்திற்குரிய ஒரு சமூக நிலையையே சுட்டிக்காட்டுகின்றன. உடல், உள மற்றும் ஆன்மீக பலத்தின் முழுமைத் தன்மையையே உடல்நலம் என்னும் சொற்றொடர் பொருள்படுத்துகின்றது. அதனால்தான் உடல் நலம் என்பது ஒரு தனிமனிதனின் நிலைபேற்றிற்கு இன்றியமையாததாகின்றது. சரியான முறையிலான உடல்நல – விளையாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதன் வாயிலாக இத்தகைய இடையூறுகளைத் தவிர்க்க இயலும். விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் மாணவர்களை அறிவியல்பூர்வமான பயிற்சியின் வாயிலாகச் சிறந்த விளையாட்டு வீரர்களாக

மாற்றுவதற்கான செயல்முறை மிகக் குறைவான மாணவர்களுக்கு மட்டுமே அளிக்கவேண்டிய செயல்பாடாகும். ஆனால் பொதுச் சமூகத்தில் அனைத்து நபர்களுக்கும் அவர்களின் நிலைபேற்றிற்குத் தேவையான உடல்நலம் உறுதிப்படுத்த வேண்டும். இதன் பொருட்டு உடல்நல – விளையாட்டுக் கல்வியைத் தொடக்கக் கல்வி முதல் அறிவியல் முறையிலும் முழுமையாகவும் அளிக்கவேண்டும். அதற்குத் தேசிய பாட ஏற்பாட்டுச் சட்டகம் – 2005 உடல் நலம் – விளையாட்டுக் கல்வி தொடர்பாக முன்வைத்துள்ள தேவை அடிப்படையிலான அணுகுமுறை, ஒருங்கிணைந்த அணுகுமுறை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

உள்ளடக்க மண்டல அறிவுடன் வெளியீட்டுத் திறனும் உடல் ஆரோக்கியமும் மதிப்பிடப்பட வேண்டும். கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 குறிப்பிடுகின்ற தொடக்கக் கல்வியில் ஆரம்பமாகும் உடல்நல – விளையாட்டுக் கல்வி மேனிலை வகுப்பை அடையும்போது முழுமை யடைகின்றது. உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வித் துறையில் ஆற்றலும் திறனும் பெற்றிருக்கும் மாணவர்களுக்குச் சர்வதேச வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முறையில் கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடவேண்டும். இதுவரையிலும் பெற்ற விளையாட்டுத் திறனும் பயிற்சி மேன்மையும் உள்ளடக்கம் தொடர்பான அறிவும் உடல்வளர்ச்சியுடன் வளர்கின்றன. உடல்நிலை மாற்றங்களை அறிவியல் பூர்வமாகப் புரிந்துகொள்வதற்கு உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வி முக்கியத்துவம் அளிக்கின்றது.

**உடல்நலம் – விளையாட்டுக் கல்வியின் முக்கிய நோக்கங்கள்**

- உயிர்ப் பாதுகாப்பு செயல்பாடுகளில் சூழ்நிலைக்கு ஏற்ப ஈடுபடுவதற்கான அறிவியல்பூர்வமான திறன் அடைவது.
- போதைப் பொருட்கள் பயன்பாட்டின் பக்கவிளைவுகளைக் கண்டடைவது.
- உடலுறவு நலன் பற்றிய சரியான விழிப்புணர்வு உருவாக்குவது.
- விளையாட்டுகளில் பெற்ற திறன்களில் கூடுதல் ஆற்றல் பெறுவதற்கு அறிவியல்பூர்வமாகப் பகுப்பாய்வு நடத்துவது.
- பெரும் விளையாட்டுகளில் திறன் பெறுவது.
- சுய பாதுகாப்பில் நடைமுறைப் பயிற்சி பெறுவது.
- உடற்பயிற்சி முறைகளின் வாயிலாக சுவாச முறையிலும் இருதய – தமனி முறையிலும் ஏற்படும் மாறுதல்களைப் பற்றிய அறிவைப் பெறுவது.
- ஆக்கிரமிப்பு, கட்டுப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்பு போன்றவற்றைப் புரிந்துகொள்வது.
- பாதுகாப்பும் பயன்மிக்கதுமான உடற்பயிற்சி முறைகளை மேற்கொள்வது.
- விளையாட்டு மதிப்பீடுகள் தொடர்பான அறிவைப் பெறுவது.

**செயல்முறைக் கல்வி**

கண்டறிவு, கேட்டறிவு, செய்தறிவு ஆகியவற்றின் இணைவின் வாயிலாக மாணவர்களிடையே அறிவின் உருவாக்கம் சாத்தியமாகின்றது. அனுபவம் மற்றும் தேடல் முறையிலான கற்றல் முறையே இன்று நடைமுறையில் உள்ளது. உணர்ச்சி மற்றும் அறிவுசார் மண்டலங்களின் இணைவும் வளர்ச்சியும் கைவரப் பெருவதற்குச் செயல்முறைக் கல்வி இன்றியமையாதது.

மாணவர்கள் பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் தீவிரமாக ஈடுபடவும் தமது சிந்தனைத் திறனைப் பயன்படுத்தித் தேடவும் பகுத்தாயவும் செய்கின்ற சூழல் உருவாகவேண்டியதுண்டு. எனவே கற்போருக்கு நம்பிக்கையும் செயல் அனுபவமும் தன்னிறைவும் பெறுகின்ற நிலையில் செயல்பாடுகள் அடிப்படையிலான பாட ஏற்பாடும் அதைப் பரிமாற்றம் செய்வதற்கு உகந்த கற்றல் செயல்பாடுகளும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

**பணி அனுபவக் கல்வியின் முக்கிய இலக்குகள்**

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்தித்துறையில் தன்னிறைவு
- சமத்துவ தனிமனித மேம்பாடு
- மதிப்பீடுகளும் மனநிலைகளும் வளர்த்தல்

போன்றவைகளைப் பணி அனுபவக் கல்வியின் இலக்குகளாக ஒருங்கிணைத்துக் கூறலாம்.

**உட்படுத்திய கல்வி** (Inclusive Education)

வகுப்பறையில் எல்லா மாணாக்கர்களையும் உட்படுத்திக் கொண்டும், யாரையும் புறக்கணிக்காமலும் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் எல்லாப் பிரிவினருக்கும் தனிக் கவனமும், கற்றல் உதவியும் அளித்துச் சமச்சீரான தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்.

**தனிக்கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேவைப்படுவோர் யார்?**

(அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மிகவும் வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியில்லாத பிரிவினர்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் அனைவரும் இதில் அடங்குவர்.

இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் கண்டறிந்து அவர்களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளிகளில் குழுச் செயல்பாடுகள் மூலமாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்க இயலும்.

(ஆ) உடல் – உளக் குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள்

உடல் – உள்ளக்குறைபாடுகள் உள்ளவர்களுக்கும், கற்றலில் சிரமம் அனுபவிக்கும் மாணவர்களிடையேயும் சிறப்புக் கவனம் (Special Educational Needs) செலுத்தப்பட வேண்டும். கேட்கும் தன்மை குறைவு, பார்வைத் திறன் குறைவு, புத்திக்குறைவு, கை மற்றும் கால் ஊனத் தன்மை, கற்றலில் பின்தங்கிய நிலை, ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு, மனநிலை பாதிக்கப்பட்ட மாணவர்கள், கவனக் குறைவுள்ள மாணவர்கள் போன்றவர்களெல்லாம் இதில் உட்படுத்தப்படுவர்.

இக்குறைபாடுடையவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாளப்படவேண்டியவை எவை எவை?

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லா மாணவர்களும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்டம் சீரமைக்கப்படவேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஐம்புலன்களுக்குட்பட்ட அணுகுமுறை (Multisensory Approach) நடைமுறைப் படுத்தல்.
- குறை நீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள் (Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு மாணவனுக்கும் தேவைக்கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்.
- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுத் (Flexibility) தன்மையுடன் செயல்படுத்தல்.
- சிறப்பு வள ஆசிரியர்கள் மற்றும் வல்லுனர்களின் உதவியை உறுதி செய்தல்.
- மாணவனின் கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதிசெய்தல்.

மேற்கூறிய இரு பிரிவுகளிலுள்ள மாணவர்களைத் தவிர சிறப்புக் கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய மாணவர்களே தனிப்பட்ட திறனும் புத்திக் கூர்மையும் மிகுந்த மாணவர்கள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள மாணவர் களையும் கவனத்தில் கொண்டு இயன்றவரை பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்கவேண்டும்.

**மேன்மைகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலங்கள்**

மாணவர்கள் மானிட மதிப்பீடுகள் பற்றியும், அரசியலமைப்பின் மேன்மைகள் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளரவேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல், சமூகக் கடமையுணர்வை வளர்த்தல் போன்றவைகள் பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவைகளை வளரச் செய்ய மேற்கூறிய கருத்து மண்டலங்களில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

**மக்களாட்சி உணர்வு**

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும் போது மக்களாட்சி தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடுதலிலும், பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமையவேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி (மக்களாட்சி அரங்குகள்), மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

**அரசியலமைப்பின் மேன்மைகள்**

நமது அரசியலமைப்பு கூறும் மேன்மைகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு மேன்மைகளை மாணவர்கள் அடைவதற்கு ஏற்ப உள்ளடக்கத்தையும் பாட ஏற்பாட்டுப் பரிமாற்றச் செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

**மதச் சார்பற்ற மனநிலை**

மதச்சார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக் கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்ப்பதுடன், அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

**பொறுமைத் தன்மை**

கருத்து வேறுபாடு கொண்டவர்களோடும் சகிப்புத்தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்ட இலக்காகக் கொள்ளவேண்டும்.

**படைப்பாக்கச் சிந்தனைகள்**

மாணவ மாணவிகளிடையே படைப்பாக்கச் சிந்தனைகளையும் தேடல் ஆர்வத்தையும் வளர்க்க வேண்டியுள்ளது. பாட ஏற்பாட்டின் உள்ளடக்கத்திலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாக்கம் தொடர்பான தேடல்களுக்கு வாய்ப்புகள் இருக்கவேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) பல்வேறு நிலைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

**பண்பாடு மற்றும் பாரம்பரியத்தோடு ஆதரவு**

நமது பண்பாட்டு பாரம்பரியத்துடனும் வரலாற்றுடனும் ஆதரவு காட்டும் மனப்பாங்கை உருவாக்குவது பாட ஏற்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**சமத்துவம் என்னும் கருத்து**

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் துல்லியம், சமத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

**தலைமைப் பண்பு**

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்கும் வாய்ப்புகளைப் பயன் படுத்துவதற்கும் உதவும் தலைவர்களை உருவாக்குவதற்குத் தேவையான கற்றல் உத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லா மாணவர்களுடையவும் பங்களிப்பை உறுதிப்படுத்தவும், தலைமைப் பண்புகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் வேண்டும்.

**வாழ்வியல் திறன் கல்வி** (Life Skill Education)

அன்றாட வாழ்வில் தனிமனிதர்களுக்கு உண்டாகும் பிரச்சினைகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்வதற்கு உதவும் பண்பினையும் வாழ்வியல் முறைகளையும்தாம் வாழ்வியல் திறன் என்கிறோம். சுயம் அறிதல் (Self Awareness) கருணை உள்ளம் (Empathy), கருத்துப் பரிமாற்றத்திறன் (Commucation Skill), தனிமனிதத் தொடர்பு (Interpersonal Relationship) படைப்பாக்கச் சிந்தனைகள் (Creative Thinking), விமர்சன பூர்வமான எண்ணங்கள் (Critical Thinking). தீர்மானங்கள் எடுத்தல் (Decision Making) பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் (Problem Solving). உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்த்தல் (Coping with emotions), மன அழுத்தங் களிலிருந்து விடுபடுதல் (Coping with Stress) ஆகியவை முக்கியமான வாழ்வியல் திறன்களாகும். மாணவர்களின் வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தி இத்துறை சார்ந்த கூறுகளைப் பாடஏற்பாட்டில் உட்படுத்த வேண்டியுள்ளது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் அணுகுவதற்கும் முன்னேறுவதற்கும் இத்தகைய திறன்கள் மாணவர்களுக்குப் பெரிதும் துணைபுரியும்.

**குடிமகன் கடமை**

நாட்டிற்கு மக்களிடம் என்பது போலவே குடிமக்களுக்கு நாட்டிடமும் சில கடமைகள் நிர்வகிக்கப்பட வேண்டியுள்ளன. நாட்டின் வளர்ச்சியை மனிதவள மேம்பாட்டுடன் தொடர்புபடுத்திக் காண்கின்ற இன்றைய காலகட்டத்தில் குடிமகன் என்ற உணர்வுடைய ஒரு மக்கள் சமூகத்தை உருவாக்கி எடுப்பதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திர சமூக உருவாக்கத்துடன் அமைதியும் ஒழுங்கும் கடமை உணர்வும் கொண்ட ஒரு சமூகத்தின் உருவாக்கத்திற்காகக் குடிமக்களைத் தயாராக்க வேண்டியது கல்வி முறையின் ஓர் இலக்காகும்.

**முதியவர்களிடம் ஆதரவு**

முதியவர்களிடம் ஆதரவு காட்டுவது என்பது பண்பாட்டுப் பரிமாற்றத்தின் அடித்தளம் என்றே கூறலாம். எல்லாப் பண்பாடுகளுமே முதியவர்களுக்கு உரிய முன்னுரிமையும் ஆதரவும் வழங்குவதுண்டு. வாழ்க்கை அனுபவங்களின் ஒரு சேகரிப்புக் கருவூலம் என்பதுதான் முதியவர்களின் முக்கியத்துவம். அனுபவங்களின் பட்டறையில் வடிவம்கொண்ட அறிவுகள் புதிய தலைமுறைக்குப் பகிர்ந்தளிப்பதாலேயே பண்பட்ட வாழ்க்கை தொடர்ச்சியானதும் பாரம்பரியம் மிக்கதாகவும் அமைகின்றது.

இன்றைய கேரளச் சூழலில் முதியவர்களிடம் காட்டவேண்டிய ஆதரவு, வழிமாறிச் செல்கின்றதோ என்ற அச்சம் இல்லாமல் இல்லை. அன்போடும் கருணையோடும் உள்ள ஈடுபாடுகளின் வாயிலாக முதிர்ந்தவர் களிடம் ஆதரவு காட்டுவதற்கு மாணவர்களைத் தூண்டும் கூறுகள் பாட உள்ளடக்கத்தின் ஒரு பகுதி ஆகவேண்டும்.

**மனித உரிமைகள்**

மனிதர்கள் என்ற நிலையில் பெருமையுடன் வாழ்வதற்கான தனிமனிதர்களின் உரிமைகளே மனித உரிமைகள். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அறிவிப்பின் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மனித உரிமைகளுக்குப் பாட ஏற்பாடு உருவாக்கத்தின் போதும் பரிமாற்றச் செயல்பாடுகளின் போதும் முக்கியத்துவம் அளித்தாக வேண்டும்.

**மாணவர் உரிமைகள்**

மாணவ மாணவியரின் எல்லாவிதமான உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு**

இயற்கை மற்றும் இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை எண்ணங்களைத் தொடக்கக்கல்வியிலேயே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்ததுதான் சுற்றுப்புறத் தூய்மை என்பதையும், தூய்மை உணர்வு மக்கள் கடமைகளின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இயற்கையும் இயற்கை வளங்களும் மனிதனின் தேவைகளுக்கானவை மட்டுமல்ல, இயற்கை சமன்பாட்டில் ஏற்படும் மாற்றம் எதிர்காலத்தில் பல்வேறு தீய விளைவுகளுக்குக் காரணமாகும் என்னும் மனநிலையையும் மாணவர்களிடையே வளர்க்க வேண்டும். இயற்கைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் ஓர் அடிப்படைத் தேவையாகக் கருத்தில் கொண்டு, அதற்குத் தகுந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**நீர் அறிவு**

நீரின் ஆதாரங்கள், நீர்ப்பாதுகாப்பு, நீர் மாசடைதலைத் தவிர்க்க வேண்டியதன் தேவை ஆகியவற்றைப் புரிந்துகொண்டு, நீர் விலைமதிப்பற்றது என்னும் விழிப்புணர்வு மாணவர்களுக்கு ஏற்படவேண்டும். அத்துடன் நீர் விநியோகத்தின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய நுணுக்கங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்பையும் பாடஏற்பாட்டில் வழங்கவேண்டும்.

**அமைதிக் கல்வி**

தனிப்பட்ட நிலையிலும் பிறரோடும் சுற்றுச் சூழல்களோடும் அமைதியாகவும் நல்லுறவுடனும் ஈடுபடுவதற்கான திறனையும் மதிப்பீட்டையும் மனநிலையையும் வளரச் செய்வதே அமைதிக் கல்வியின் அடிப்படை. போராட்டங்களையும் போராட்டங்களுக்கு வழிவகுக்கும் சூழ்நிலைகளையும் தவிர்த்து, அமைதிக்கும் நல்லுறவுக்கும் வழிவகுக்கும் வாய்ப்புகளைப் பாடஏற்பாட்டின் வேறுபட்ட பாடப்பொருட்களின் வழியாக அறிமுகப்படுத்துவது அமைதிக் கல்விக்கு இன்றியமையாததாகும்.

**சட்ட அறிவு**

சட்டங்கள் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் ஒரு மக்களாட்சி நாட்டுக் குடிமக்களுக்கு இன்றியமையாதவை. சட்ட அறிவை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பாடப்பகுதிகள் பொருள் அடிப்படையில் உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றே கூறலாம். சட்ட உதவி அமைப்பு, சட்டமன்றங்கள், 'சட்டகிளினிக்குகள்', சட்ட விழிப்புணர்வு என்று பல்வேறு விதமான செயல்பாட்டுத் திட்டங்களைக் குறித்துத் திட்டமிடவேண்டும்.

**சைபர் அறிவு**

தகவல் தொடர்பின் தவறான பயன்பாடும், குற்றங்களும் அன்றாடம் பெருகிவருகின்றன. இத்தகைய தவறான செயல்பாடுகளிலிருந்து மாணவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கான விழிப்புணர்வூட்டும் பாடப்பகுதிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்தவேண்டும். இணையம், சமூக வலைத்தளங்கள், மின்னஞ்சல் போன்றவற்றின் பயன்பாட்டைக் குறித்து தெளிவானதும் சரியானதுமான அறிவைத் தரவேண்டும். சைபர் குற்றங்களுக்கான தண்டனையைக் குறித்தும் இணைய தளப் பயன்பாடு குறித்தும் விழிப்புணர்வடையச் செய்யப் பாட ஏற்பாடு வாய்ப்பளிக்க வேண்டும்.

**ஊடக விழிப்புணர்வு**

ஊடகங்களின் வழி நடத்தலுக்கு ஆளாகும் நிலையில் நமது சமூகம் மாறியுள்ளது. காட்சி ஊடகங்களைத் தவிர்த்துள்ள ஒரு வாழ்க்கையைக் கனவு கூடக் காண முடியாத நிலையில் ஊடகங்கள் அன்றாட வாழ்க்கையை ஆட்கொண்டுவிட்டன. காட்சி ஊடகங்கள் மாணவர்களிடம் அதிக அளவு தாக்கம் செலுத்தியுள்ளன. எனவே விமர்சன முறையிலான ஊடக விழிப்புணர்வுக்கு உதவுகின்ற பல்வேறு கூறுகளைப் பாடஏற்பாட்டு உள்ளடக்கத்தில் உட்படுத்தவேண்டியுள்ளது.

**நிலையான வளர்ச்சி**

பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையுடையதல்ல என்னும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பாட ஏற்பாட்டில் பகிர்ந்தளிக்க வேண்டும். சுற்றுச்சூழல் தொடர்பான சவால்கள் பற்றியும், சுற்றுச்சூழல் வீழ்ச்சிக்குக் காரணமாகின்ற மனிதனின் ஈடுபாடுகள் குறித்தும், சுற்றுச்சூழலைத் தீவிரமான விபத்துகளிலிருந்து எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றியும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். இது காலத்தின் தேவையும் ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வளர்ச்சித் திட்டங்களையும் எவ்வாறு இணைத்துக் கொண்டு செல்லலாம் என்னும் தேடலும், நிலையான வளர்ச்சி குறித்த கண்ணோட்டமும் பாடஏற்பாட்டில் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஒரு முழுமையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்குவது என்பது பாட ஏற்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**குமரப்பருவக் கல்வி**

குழந்தைகள் மனவியல் நிபுணர்களுடையவும் உடல் நலப் பாதுகாப்புத் தொண்டர்களுடையவும் மருத்துவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் ஒருங்கிணைந்த முயற்சியின் வழியாகக் குமரப்பருவக் கல்விக்குத்

தேவையான உள்ளடக்க மண்டலங்களை வெவ்வேறு பாடப்பொருளுடன் சேர்ப்பதற்கான வாய்ப்புகளையும் ஆராய வேண்டியுள்ளது. மாணவர்களின் உடல்நலம், உடல் தூய்மை ஆகியவை தொடர்பான ஐயங்களையும் தெளிவின்மையையும் அறிவியல் பூர்வமாக நீக்க வேண்டியுள்ளது.

**நுகர்வோர் கலாச்சாரம்**

நுகர்வோர் கலாச்சாரத்தின் தீய விளைவுகள் தொடர்பானவற்றைத் தொடக்கக்கல்வி நிலையிலிருந்தே பாடஏற்பாட்டில் உட்படுத்தியாக வேண்டும். நுகர்வோர் என்னும் நிலையில் நமது உரிமைகளும் நுகர்வோர் சட்டங்களும் ஒரு பாடப் பொருளாகவே இடம்பெற வேண்டும்.

**போதைப் பொருள் எதிர்ப்பு மனநிலை**

மது, போதைப் பொருட்கள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் உடல்நலத்தைக் கெடுக்கிறது என்னும் உண்மையை நாம் கண்டறிய வேண்டும். வரும் தலைமுறையைப் போதைப் பொருளின் தீய வலைக்குள்ளிருந்து காப்பாற்றியாக வேண்டும். இதற்காகப் போதைப் பொருள் பயன்பாட்டினால் உண்டாகும் உடல் – உள கெடுதல்களையும் விபத்துகளையும் வெளிப்படுத்தும் படங்கள், சிற்றறிக்கைகள், காட்சிகள் போன்றவற்றை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதைப் பொருள் எதிர்ப்பு மனநிலையை உருவாக்குவதே இவற்றின் அடிப்படை நோக்கம்.

**ஆண் – பெண் நீதி**

பாடஏற்பாடு ஆண் – பெண் சமத்துவத்தையும் நீதியையும் உறுதிப்படுத்த வேண்டும். ஆண் – பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இடம் பெறக் கூடாது. பாடப்புத்தகப் படங்களில்கூட ஆண் – பெண் நீதியைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை ஏற்றெடுத்து நடைமுறைப்படுத்தும்போது ஆண் – பெண் நீதியை உறுதிப் படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

**சேமிப்புப் பழக்கம்**

தொடக்கக் கல்வி நிலையிலிருந்தே சேமிப்புப் பழக்கத்தின் அடிப்படைப் பாடங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். சேமிப்புப் பழக்கத்தின் பெருமையையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சேமிப்புப் பழக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**சாலைப் பாதுகாப்பு**

சாலைகளில் பின்பற்ற வேண்டிய சட்டங்கள், சாலை விபத்துகளைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள், செயல்பாடுகள் ஆகியவை எல்லாம் சாலைப் பாதுகாப்பின் கூறுகளாகும். சாலை என்பது ஒரு பொது இடம் என்பதையும் நமக்கு உள்ளதைப் போன்றே பிறருக்கும் சாலைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமை உண்டு என்பதையும் குறித்த உணர்வு ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். சாலைப் பாதுகாப்புத் தொடர்பான செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பாட ஏற்பாட்டின் இயல்பான பரிமாற்றத்தில் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான கற்றல் அனுபவங்கள் வேண்டும். அவற்றை உறுதிப்படுத்தவும் வேண்டும். பல்வேறு பாடப்பொருள்களின் உள்ளடக்கம் தொடர்பான கருத்துகளைத் தேர்வு செய்யும்போதும் கற்றல் செயல்பாடுகளை வரிசைப்படுத்தும்போதும் சாலைப் பாதுகாப்பிற்கும் தேவையான வாய்ப்பு அளிக்க வேண்டும். கற்றல் – கற்பித்தல் செயல்முறைகளைக் கடந்து செல்லும்போது இத்தகைய கருத்துகளுடன் தொடர்புடைய அறிவு, திறமை, மனநிலை ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இந்த இலக்குகளை அடைய முடிந்ததா என்பதைத் தொடர் மதிப்பீட்டுச் செயல்பாடுகள் வாயிலாகப் பரிசோதிக்கவும் இயலவேண்டும். வெவ்வேறு மன்றங்களின் செயல்பாடுகள், SPC, NCC, Scout & Guides, JRC, கலை – இலக்கிய மன்றம் போன்ற அமைப்புகள், மதிப்பீடுகள், மனநிலைகள், கடமை உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்கான அரங்கங்கள் ஆக வேண்டும்.

**உரிமை அடிப்படையிலான கல்வி** (Right Based Education)

மாணவர்களின் உரிமைகளை நிர்ணயிக்கவும் சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தவும் யுனெஸ்கோ முக்கிய நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் மாணவர்களின் உரிமைப் பாதுகாப்புத் தொடர்பான பலவிதமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசியக்கல்வி உரிமைச் சட்டம் – 2009 நடைமுறைப்படுத்தியது முக்கியமான ஒரு மைல்கல் ஆகும். மாணவர்களின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு முதியோர்களாகிய நமது கடமையாகின்றது. கல்வி உரிமைகள் பற்றிக் கூறும்போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

- பங்களிப்பு (Participation)
- வாய்ப்பு (Provision)
- பாதுகாப்பு (Production)

தமக்குக் கிடைக்கின்ற உரிமைகள் குறித்த மாணவர் சிந்தனை எவ்வாறு அமையும்?

**பங்களிப்பு**

- மாணவர்களுடன் தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களிலும் எனது கருத்தும் ஆராயப்படுவதுண்டு.
- தீர்மானங்களில் எனது எண்ணங்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுவதுண்டு
- எனது திறமைகளையும் நிலைமைகளையும் கண்டறிந்து அதற்கேற்பத் தரும் செயல்பாடுகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு எனக்கும் கிடைக்கின்றது
- எனது திறமைகளை வளப்படுத்துவதற்கும் எல்லைகளைத் தாண்டிச் செல்வதற்கும் இயல்கின்ற கற்றல் செயல்முறைகளில் ஈடுபட என்னால் முடிகின்றது
- எனது கருத்துகளுக்குத் தகுந்த மதிப்பு கிடைப்பதுண்டு
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பறையில் நடைபெறும் செயல்பாடுகளில் தீவிரமான பங்களிப்பு கிடைப்பதுண்டு
- எனது திறமைகளை வெளிப்படுத்த எனக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன

**வாய்ப்பு** (Provision)

- தேவையான கல்வித் தரம் உடையவர்களும் காலத்திற்கேற்ப தமது அறிவை மேம்படுத்துகின்றவர்களுமான ஆசிரியர்களின் சேவை எனக்குக் கிடைக்கின்றது
- அனுமதிக்கப்பட்டுள்ள முழு நேரமும் கற்றல் அனுபவங்கள் கிடைக்கின்றன
- உடல் – உள வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கு உகந்த வகுப்பறைச் சூழல் எனக்குக் கிடைக்கின்றது
- கற்றல் செயல்பாடுகளுக்குத் தேவையான கற்றல் கருவிகள் தேவையான நேரங்களில் கிடைக்கச் செய்வதற்கு என்னுடைய ஆசிரியரால் முடிகின்றது
- கலை மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்குத் தேவையான கருவிகளும் வாய்ப்புகளும் எனக்குக் கிடைப்பதுண்டு
- எதிர்காலத்தில் வேலை கிடைப்பதற்கான வழிமுறைகளும் அறிவுரைகளும் கிடைக்கின்றன

**பாதுகாப்பு**

- பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் எவ்விதமான உயர்வு தாழ்வும் அனுபவப்படுவதில்லை.
- என்னை எவர் ஒருவரும் அவமதிப்பது கிடையாது
- உடல் – உள ரீதியில் எவரும் என்னைத் தாக்குவதில்லை
- எவ்வித பயமும் இன்றி ஆசிரியர்களுடன் பழக என்னால் இயல்கிறது
- மாணவன் என்றாலும் எனக்கும் சில அந்தரங்கங்கள் உண்டு என்பதை அனைவரும் அங்கீகரிக்கின்றனர்
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக உள்ளேன் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்
- உடல் – உள ரீதியில் நான் அனுபவப்படும் இடையூறுகளிலிருந்து விடுபடவும் ஆற்றல் பெறவும் தேவையான வாய்ப்புகள் பள்ளியில் கிடைக்கின்றன.

இவையெல்லாம்தாம் மாணவர்களின் உரிமைகள் என்றாலும், இவற்றை உறுதிப்படுத்த என்னால் என்னென்ன செய்ய முடிந்தது? இனி நான் என்னென்ன செய்யவேண்டும்? என்பது குறித்து ஒவ்வொரு ஆசிரிய, ஆசிரியையும் சிந்தித்தாக வேண்டும்.

**நெறிப்படுத்துதல்** (Mentoring)

தேசிய கல்வி உரிமைச் சட்டம் ஆசிரியரை / ஆசிரியையை ஒரு நெறியாளராகவே கருதுகின்றது. பள்ளியின் முழுமையான வளர்ச்சிக்கு நெறியாளருக்குப் பெருமையும் முக்கியத்துவமும் உண்டு.

கல்விச் செயல்முறையின் முக்கிய கூறான ஆசிரியர் – மாணவர் உறவில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அறிவை விநியோகிக்கும் ஓர் ஆளாக அல்ல; மாணவர்கள் அறிவைப் பெறுவதற்கான வேறுபட்ட வாய்ப்புகளை ஒருங்கிணைக்கும் ஒருவராகவும் ஆசிரியர் செயல்பட வேண்டும்.

உண்மையில் பள்ளிக்கூடம் என்பதும் ஒரு வீடுதான். ஆசிரியர்களே பெற்றோர்கள். மாணவர்களுக்கு வீட்டிலிருந்து கிடைக்கவேண்டிய அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் போன்றவை கூடியும் குறைந்தும்தான் கிடைக்கின்றன என்னும் எண்ணம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஆசிரியைக்கும் ஏற்பட வேண்டும். இதனைக் கண்டடைந்து ஒவ்வொரு மாணவருக்கும் தக்கவாறு இவற்றைக் கொடுக்கும்போதுதான் அவர்களின் பொறுப்பு முழுமையடைகின்றது. அப்போதுதான் பள்ளி வீடாகின்றது.

அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் ஆகியவற்றை அளித்து ஒரு சக பெற்றோராகவும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்கான உதவியாளராகவும் மாறும்போதுதான் அவர் புதிய காலகட்டத்தின் ஆசிரியர் / ஆசிரியையாக மாறுகிறார்.

நெறிப்படுத்தல் காரணமாக வழிகாட்டுதல், அறிவுரை, உதவி, மேம்படுத்து வதற்கான வாய்ப்பு முதலானவை மாணவ மாணவிகளுக்குக் கிடைக்கின்றன. ஆசிரியர் என்பதற்கு மேலாக அனுபவம் மிக்க மூத்தவர் என்ற நிலையிலும் மாணவர்களிடம் பழக வேண்டும். கற்பித்தலுக்குத் தேவையான உதவிகளும் கலந்துரையாடல் களும் எல்லாம் இதன் ஒரு பகுதிதான். மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் திறன்களை வெளிக் கொணர ஒரு நல்ல நெறியாளரால் இயலும் என்பது உண்மை.

நெறிப்படுத்தல் வழியே :

- ஆசிரியருக்கும் மாணவருக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன
- ஆசிரியர்களுடையவும் மாணவர்களுடையவும் அறிவு மண்டலம் வளர்ச்சி பெறுகிறது
- மாணவருக்கும் பள்ளிக்கூடத்திற்கும் இடையேயான உறவு வலுவடைகிறது
- மாணவனின் கற்றல் வளர்ச்சியும் தனிமனித வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- சேர்ந்து சிந்திக்கவும், தீர்மானங்கள் எடுக்கவும் செயல்பாடுகளில் ஈடுபடவும் இயல்கின்றது
- பெற்றோர்களுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் இடையேயான உறவு வலுவடையவும் மாணவரின் கற்றல் தரத்தை அறிந்துகொள்ளவும் இயல்கிறது.
- கலை – உடல் நலம் – விளையாட்டு – பணி அனுபவக் கல்வி மண்டலங்களில் மாணவர்களின் பங்களிப்பையும் மதிப்பீட்டையும் சக்திப்படுத்துகின்றது.

மாணவனின் கற்றல் ஆர்வத்தையும் தனிமனித வளர்ச்சியையும் வேகப்படுத்துவதற்கான தீர்வுகாண் செயல்முறையையும் தொடர் மதிப்பீட்டு முறையையும் நடைமுறைப்படுத்த உதவுகின்ற ஒரு செயல்பாடாக நெறிப்படுத்தல் வளர்ச்சியடைய வேண்டும். நெறிப்படுத்தல் அனுபவங்களுடன் தொடர்புடைய குறிப்புகளைத் தொகுப்பில் உட்படுத்த வேண்டும். பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் சக பெற்றோராக அதாவது நெறியாளராகச் செயல்படவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் நெறியாளரின் பயன்கள் கிடைக்கவேண்டும். வகுப்பிலுள்ள மாணவர்களைச் சிறு குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவினுடையவும் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொறுப்பு அளிக்கலாம்.

**ஆசிரியர்கள் தொழில் ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்**

(Code of Professional Ethics for School Teachers)

**1. மாணவர்களோடு ஆசிரியருக்குள்ள பொறுப்புணர்வுகள்**

**(ஆசிரியரின் கடமைகள்)**

1.1. எல்லா மாணாக்கர்களோடும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்

- எல்லா மாணவர்களோடும் பாகுபாடு காட்டாது சமமாகப் பழகுதல் வேண்டும்.
- கல்வியில் பின்தங்கிய மாணவர்களிடம் தனிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- மாணவர்களிடம் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு போன்றவற்றை வளர்க்கும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

1.2. ஜாதி, மதம், இனம், பொருளாதார நிலை, மொழி, ஆண் – பெண் (பாலின) வேறுபாடு, பிறந்த இடம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நேர்மையுடன் பாரபட்சம் பார்க்காமல் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை, சமூக நீதி மீதான நம்பிக்கை ஆகியவற்றை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந்தால் அது பள்ளிக்கூட நடைமுறைகளைக் கடுமையாகப் பாதிக்கும்.

1.3 மாணவர்களின் உடல், மன உணர்வு, பண்பாடு, சமூக, ஆன்ம வளர்ச்சிக்கேற்ற சூழலை உருவாக்குதல்

- மாணவர்களின் உடல், மன சமூகத்திறன்கள் முழு வளர்ச்சி அடையும் காலம்தான் பள்ளிப் பருவகாலமாகும்.
- கல்வியால் அறிவுமண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் நோக்கமாகும்

1.4. பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் மாணவர்களின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப்படுகிறது

- மனிதன் என்ற நிலையில் ஒரு மாணவனின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் மாணவனின் தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்தி கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் அனைத்து மாணவர்களின் முழுமையான ஈடுபாட்டை உற்சாகப்படுத்த வேண்டும்.

- ஐக்கிய நாட்டு சபை (ஐ.நா சபை) அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் செய்த மாணவர்களின் உரிமை குறித்த விளம்பரத்தையும், மாணவர்களின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கையையும் ஆசிரியர்கள் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதற்காக உருவாக்கிய சட்டங்கள் மாணவர்களின் உரிமைகளை மறுக்கக் கூடியதாக அமையக் கூடாது.

1.5. மாணவர்களின் உடல், உளத் திறன்களும், சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்டு ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.

- ஒவ்வொரு மாணவனின் கற்றல் அடைவுகள் மட்டுமின்றி மாணவனின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்துகொள்வதே ஆசிரியரின் முக்கியக் கடமையாகும்.
- மாணவர்களின் எல்லாவித திறமைகளும் வளர்வதற்குத் தேவையான செயல்பாடுகள் உண்டாக வேண்டும்.

1.6. அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும் மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடத்திட்ட ஏற்பாட்டுப் பரிமாற்றம் அமைய வேண்டும்.

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாட ஏற்பாட்டின் முக்கியக் கூறுகளாக அமைவன.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் பிரிவு 51 அ-வைப் புரிந்துகொண்டு, அதில் அ முதல் ஓ வரையுள்ள பிரிவுகளைப் புரிந்துகொண்டும் அவற்றின்படி செயல்பட வேண்டும்.

1.7. மாணவர்களின் தேவைக்கேற்ப ஆசிரியர் - ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது

- தொடர் மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவர்களின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றைக் கருத்தில்கொண்டு கற்பித்தல்.
- உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்ந்துமேற்கொள்ள வேண்டும்.

1.8. மாணவர்களின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தத் தகவல்களைச் சட்டரீதியாகப் பயன்படுத்துகின்றவர்களுக்கு மட்டும் தெரிவித்தல்.

- ஒரு ஆலோசகராகச் செயல்படும் ஆசிரியருக்கு மாணவர்களின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும்.
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காக மட்டும் அறிவு பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும்.

1.9. மாணவர்களைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

- மாணவர்களைப் பாலியல் கொடுமைகளிலிருந்தும் புறக்கணிப் பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள் எனும் தவறான கருத்தை மாற்ற வேண்டும்.
- இவ்வாறான சூழலில் குழந்தைகளுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

1.10. எவ்விதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.

- பாலியல் கொடுமைகள் உடல் காயங்களை மட்டுமின்றி நீண்டகாலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசியக் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டமும் (National Children Production Rule) விதித்துள்ளவற்றை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்.

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

2.1. பெற்றோர்களுடன் அன்புடனும் ஆதரவுடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

- மாணவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்களிடமும் நண்பர்களிடமும் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு மாணவனுக்கு ஆசிரியருடன் கூடுதலாக நெருங்க உதவும்.
- பெரும்பாலான பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆவலாக இருப்பார்கள்.
- மாணவர்களின் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற்றோர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது பெரிய ஆபத்துகளைத் தவிர்க்க முடியும்.

2.2. மாணவர்களின் தன்மானத்திற்குத் தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது.

- பிற மாணவர்களின் முன்னிலையில் எந்தவொரு மாணவனையும் அவனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் பேசக்கூடாது.
- அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது.

- ஏதாவது ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்களின் சூழலைப் (சாதி, மத, பொருளாதார) புகழ்வது பிற மாணவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

2.3. மாணவர்களிடையே இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட அபிமான உணர்வு வளர்க்க முயற்சி செய்தல்.

- பலவிதப் பண்பாடு, மொழி, மதம், நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா. இது ஒவ்வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்.
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத் தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மையும் வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயல வேண்டும்.

2.4. பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும் மொழிகளையும் சமமாக மதிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு முதலில் இந்தியன் பின்னரே ஒரு பிரிவின் உறுப்பினர் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி / வகுப்பறையைப் பயன்படுத்தக் கூடாது.
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும்போது ஆசிரியர் / ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக் கூடாது.

### 3. ஆசிரியர் என்ற தொழிலோடும், சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டிய கடமைகள்.

3.1. தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.

- ஒரு மாணவனுக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதேபோன்று கற்க வேண்டும்.
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தகவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தமக்குப் புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

3.2. பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்த வேண்டும்.

- கல்வி தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கு அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும் வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமின்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

3.3. சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழக வேண்டும்.

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களிடமும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

3.4. ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துதல் தனியார் நிறுவனங்களில் கற்பித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூடச் செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியூசன் கொடுக்கும்போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல் படுவது போன்று ஆகிறது.

3.5. தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் ஆதிக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் ஆசிரியர்கள் எந்தவிதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை.

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

3.6. பிற ஆசிரியர்கள் குறித்தோ பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவை யில்லாமல் குற்றம் கூறுவதில்லை.

- ஒருவருக்கொருவர் குறை கூறுகின்ற வழக்கம் ஆசிரியர்களிடையில் தேவையற்றதாகும்.
- பிற ஆசிரியர்களுக்கு எதிராக நிரூபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.
- ஏதாவது ஒரு ஆசிரியர் / ஆசிரியையிடம் தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

3.7. பிற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரியரைக் குறை கூறுவதில்லை.

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- பிற ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குறை கூறும் விதத்தில் பேசக் கூடாது.

3.8. பிற ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளை மதிக்க வேண்டும்.

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும், அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

3.9. பிற ஆசிரியர்கள் குறித்த தனிநபர் விபரங்களை இரகசியமாக வைக்கவும், சட்ட ரீதியாகத் தேவைப்படும் போது மட்டும் வெளிப்படுத்தவும் வேண்டும்.

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனிநபர் விவாதம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்டரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளியிடுதல் வேண்டும்.

**கற்பித்தல் கையேடு** (Teacher Planner)

கற்பித்தல் கையேடு என்பது அன்றாடப் பாடத்திட்டக் கையேடாகும். கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு பாடநூலிலும், ஆசிரியர் பனுவலிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் தன்னுடைய வகுப்பறையில் உள்ள மாணவர்களுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படைய வேண்டும்.
கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக்கத்தில் எழுதவேண்டும். தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விவரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும்.
அடுத்துவரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேட்டைப் பள்ளி வளக்குழு (SRG) பாடக்குழு (Subject Council) இவற்றில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியிலுள்ள விவரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note) தயாராக்கவும். வளக்குழுவில் (SRG) விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர் திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

ஆசிரியர் திட்டமிடல் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் திட்டமிடல்**

அலகின் பெயர் :

நாள் :

தேவைப்படும் நேரம் :

கற்றல் அடைவுகள் :

கருத்துகள் :

திறன்கள் :

மொழி உண்மைகள்
(மொழிக்கு மட்டும்) :

மொழி வெளியீட்டு வடிவங்கள்
(மொழிக்கு மட்டும்) :

மதிப்புகள், மனப்பாங்குகள் :

கற்றல் கருவிகள் :

எதிர்பார்க்கும் படைப்புகள் :

| **செயல்முறைப் பக்கம்** | **மதிப்பீட்டுப் பக்கம்** |
|---|---|
| செயல்பாடுகளும் மதிப்பிடலும் அடங்கிய செயல்முறை | மதிப்பிட்ட தகவல்களை இங்கு எழுத வேண்டும் |

**பிரதிபலிப்புச் சிந்தனைகள்** (Reflections)

**எனது கண்டுபிடிப்புகளும் பகுத்தறிவுகளும்**

(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பிடல், செயல்வழி கிடைத்த விபரங்களின் அடிப்படையில்)

-
-
-
-

தொடர்செயல்பாடுகளும் தீர்வு காணும் செயல்பாடுகளும் குறிப்பு

-
-
-
-

# மதிப்பீட்டு அணுகுமுறை

## மேனிலை வகுப்பு

பள்ளிக்கல்வி இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் நடைபெறவேண்டிய செயல்முறையாகும். கல்வி திறம்பட அமைய வேண்டுமாயின் கற்றல் அனுபவங்கள் இலக்கை அடிப்படையாகக் கொண்டும் கற்றல் அடைவுகளை மையமாகக் கொண்டும் அமைய வேண்டும். கற்றல் செயல்முறைகளின் வாயிலாக அடையவேண்டிய திறன்களும் எண்ணங்களும் தொடர்பாகக் கற்பிப்போருக்கும் கற்போருக்கும் இடையே தெளிவான ஒரு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஒவ்வொரு பாடப்பகுதியுடனும் தொடர்புகொண்டு பெறவேண்டிய கற்றல் அடைவுகளை (Learning Outcomes) முன்கூட்டியே கண்டடைந்து கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். இவற்றை வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தி வெளிப்படுத்தவும் வேண்டும்.

பெற்ற திறன்களும் எண்ணங்களும் (முடிவுகளும்) கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த எந்த அளவுக்குப் போதுமானவை? கற்றல் அடைவுகளை அடையாதவர்கள் இனி யாரேனும் உண்டா? இனி அளிக்க வேண்டிய தொடர் அனுபவங்கள் எவையாக இருக்க வேண்டும்? அவற்றை எவ்வாறு அளிக்கலாம்? இத்தகைய சிந்தனைகள் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக ஆசிரிய ஆசிரியைகளுக்கு ஏற்பட வேண்டும்.

பாடப்பகுதியின்/அலகின் பரிமாற்றத்திற்குப் பின் 'என்னென்ன கற்றல் அடைவுகளை அடைந்துள்ளனர்' என்பதை மதிப்பிடும் செயல்முறையை 'கற்றலை மதிப்பிடுதல்' (Assessment of learning) எனக் கூறுவர். கற்றலுக்குப் பின்னுள்ள மாணவ மாணவியரின் மேன்மை, கற்றல் நிலை ஆகியவை இங்கு மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும். இது மதிப்பீட்டின் ஒரு கட்டம் மட்டுமேயாகும்.

கற்றலை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டிற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கற்றல் நடைபெறும் வேளையில் அதன் மேன்மைக்காக ஆசிரியரோ சக மாணவர்களோ நடத்துகின்ற வெவ்வேறு ஈடுபாடுகள் உண்டாகலாம். கற்றலுடன் நடைபெறும் இத்தகைய ஈடுபாடுகளும் பின்னூட்டம் வழங்கலும் மதிப்பீட்டின் இன்னொரு கட்டமாகும். இதனைக் 'கற்றலுக்கான மதிப்பீடு' (Assessment for Learning) என்பர். இம் மதிப்பீட்டைக் கற்றலின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து நடத்த வேண்டும். மேலும் இது கற்றல் செயல்பாடுகளுடன் ஊடும் பாவுமாக அமைதல் வேண்டும்.

கற்றலின் வாயிலாகப் பெற்ற கோட்பாடுகளையும் முடிவுகளையும் விமர்சன அடிப்படையில் பரிசோதனை செய்வதற்கும் மாற்றங்களை உட்கொள்வதற்கும் வேண்டிய திருத்தல் செயல்முறையும் உண்டு. இதனைச் சுயமதிப்பீடாகக் கருதலாம். இவ்வாறாகச் சுயமதிப்பீட்டின் வாயிலாகவும் கற்றல் சாத்தியமாகின்றது. இதனை 'மதிப்பீடே கல்வி' (Assessment as Learning) எனக் குறிப்பிடுவர். இதன் வாயிலாகச் சிறப்பான முறையில் எவ்வாறு கல்வி கற்கலாம் என்னும் விழிப்புணர்வு மாணவனுக்கு ஏற்படுகின்றது. (Learning to Learn)

கற்றல் கூடுதல் திறம்பட அமைய 'கற்றலுக்கான மதிப்பீடு', 'மதிப்பீடே கற்றல்' ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கற்றல் பயன்தக்க முறையில் அமைவதற்கான மதிப்பீட்டுச் செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற ஓர் அணுகுமுறையையே மேற்கொள்ள வேண்டும்.

கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்தும் நிலையிலான கற்றல் அணுகுமுறையை மேற்கொள்ளும்போது அதற்குத் தகுந்த மதிப்பீட்டு அணுகுமுறையையும் மேற்கொள்ள வேண்டும். எனவே கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற ஒரு மதிப்பீட்டு அணுகுமுறை (Outcome focused Assessment approach) நமக்குத் தேவையாகின்றது. கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவமைக்கும் கற்றல் செயல்பாடுகளில் மாணவனின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும். மாணவனுக்கும் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் ஒரே போல் கற்றல் அடைவுகள் குறித்த எண்ணம் ஏற்படுதல், மதிப்பிடப்பட வேண்டியவை குறித்த தெளிவு பெறுதல், கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த முன்னோக்கிச் செல்லுதல், மாணவர்களை மையப்படுத்தல், சமூகப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான திறன் பெறுதல், ஆக்கபூர்வமும் விமர்சன பூர்வமும் உத்திபூர்வமுமான சிந்தனைகளை ஊக்கப்படுத்தல் ஆகியவை கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கற்றல் முறையின் சிறப்புத் தன்மைகளாகும்.

### தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE)

கற்போரில் தொடர்ந்து நடைபெறும் ஒரு செயல்முறைதான் கல்வி. எனவே திறன்களும் முடிவுகளும் ஒரு மாணவன் அல்லது மாணவி எந்த அளவுக்குப் பெற்றுள்ளார் என்பதைப் பரிசோதிக்கும் மதிப்பீடும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். மாணவனின் அறிவுசார் மற்றும் சமூக மண்டல ஈடுபாட்டை மதிப்பீடு செய்வதையே முழுமையான மதிப்பீடு என்கிறோம். இவ்வாறாகத் தொடர் மதிப்பீட்டையும் முழுமையான மதிப்பீட்டையும் மேற்கொள்ளவேண்டும்.

### தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் (CCE) மண்டலங்கள்

இரண்டு மண்டலங்களில் CCE நடைபெற வேண்டும்.

1. அறிவுசார் மண்டலம்

2. சமூக – உணர்வு மண்டலம்

அறிவுசார் மண்டலத்தின் வளர்ச்சி குறித்த மதிப்பீடு

மேனிலை வகுப்புப் பாடப் பொருட்களான மொழி, அறிவியல் பாடங்கள், மானுட – வணிகப் பாடங்கள், உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வி ஆகியவை அறிவுசார் மண்டலத்தில் உட்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற கற்றல் அடைவுகள் மதிப்பிடப் படவேண்டும். இங்கு மூன்று நிலைகளிலான மதிப்பீடுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

1. தொடர் மதிப்பீடு (CE)
2. பருவ மதிப்பீடு (TE)
3. செய்முறை மதிப்பீடு (PE)

**தொடர் மதிப்பீடு** (CE)

மூன்று முறைகளிலான தொடர் மதிப்பீடுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

- கற்றல் செயல்முறைகளின் மதிப்பீடு
- படைப்புத் தொகுப்பு (Portfolio) — மதிப்பீடு
- அலகுவாரியான மதிப்பீடு

**கற்றல் செயல்முறைகளின் மதிப்பீடு**

கற்றல் அடைவுகளைப் பெறுவதற்குக் கற்போரும் கற்பிப்போரும் வெவ்வேறான செயல்பாடுகளைத் திட்டமிடுகின்றனர். செயல்பாட்டில் மாணவரின் பங்கேற்பு, மாணவரின் செயல் மற்றும் வெளியீட்டுத் திறன், மாணவரின் படைப்புத்திறன் முதலான திறன்களை எந்த அளவுக்கு அடைந்துள்ளனர் முதலானவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்யவேண்டும். கீழ்வரும் குறிப்புகளை மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தலாம்.

1. செயல்பாடுகளில் பங்கேற்பு
2. கருத்துமுடிவு
3. திறன்கள் பெறுதல்
4. செயல்திறன்/வெளியீட்டுத் திறன்
5. பதிவு செய்தல்/தயாராக்குதல்

செயல்முறைகளை மதிப்பீடு செய்யும்போது, ஒவ்வொரு மதிப்பீட்டுக் குறிப்பையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக செயல்பாடுகளில் பங்கேற்பு என்னும் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யும்போது மிகச் சிறப்பாகப் பங்கேற்றவர், சராசரியாகப் பங்கேற்றவர், மேலும் மேன்மை பெற வேண்டியவர்கள் எனக் குறிப்பிடும் வகையிலான குறிப்புகள் ஆசிரியர் திட்டக் குறிப்பேட்டின் (Teacher Planner) மதிப்பீட்டுப் பக்கத்தில் இருக்கவேண்டும். ஒரு பருவத்திற்குள்ளாக எல்லா மாணவர்களையும் செயல்முறையின் ஒரு பகுதியாக மதிப்பீடு செய்து பதிவு செய்ய வேண்டும்.

செயல்முறை மதிப்பீட்டில் – சுய மதிப்பீடு, ஒருவருக்கொருவர் மதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் பகுதியாக வெவ்வேறு பாடங்களில் (Subjects) கற்றல் செயல்முறைகளை மதிப்பிடுவது எவ்வாறு என்று பார்ப்போம்.

- **செயல்பாட்டில் பங்கேற்பு**
  - செயல்பாட்டை ஏற்றெடுத்தாரா?
  - தனிப்பட்ட முறையில் செய்ய முயற்சி செய்தாரா?
  - குழுவில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டாரா?
  - கருத்துகளைப் பகிர்ந்து கொண்டாரா?
  - பிறரது பங்கேற்பை ஊக்கப்படுத்தினாரா?
- **கருத்து முடிவு**
  - உள்ளடக்கம் தொடர்பான கருத்து
  - அறிவு உருவாக்கக் கட்டங்கள்
  - கருத்தை உள்வாங்கும் திறன்

– கருத்துகளைப் பயன்படுத்தும் திறன்
– இவற்றில் மாணவரின் மேன்மை

- **திறன்கள் பெறுதல்**
  – செயல்முறைத் திறன்களை அடைவதற்கான முன்தீர்மானங்கள் எந்த அளவுக்கு அமைந்தன?
  – நிச்சயிக்கப்பட்ட செயல்முறைகளை அடைய இச்செயல்பாட்டின் மூலம் இயன்றதா?
  – திறன்களைப் பெறாதவர்களுக்கு எவ்வகையான அதிகச் செயல்பாட்டைக் கொடுக்கலாம்?
- **செயல்பாட்டுத்திறன் / வெளியீட்டுத் திறன்**
  – தனிநிலைச் செயல்பாட்டிற்குப் பின்னும் குழுச் செயல்பாட்டிற்குப் பின்னும் கண்டடைந்தவற்றை வெளியிட முயற்சி செய்தாரா?
  – கண்டடைந்ததை உத்திபூர்வமாக வெளியிடவும் நியாயப்படுத்தவும் இயன்றதா?
- **பதிவு செய்தல்/தயாராக்குதல்**
  – செயல்பாடுகளின் வழியாகக் கடந்து சென்றபோது தேவையான பதிவுசெய்தல்கள் நடத்தியுள்ளாரா?
  – பதிவு செய்தவை பிறருக்குப் புரியும்படியாக அமைந்துள்ளனவா?
  – பதிவு செய்தலில் வரிசை முறையும் ஒழுங்கு முறையும் காணப்படு கின்றனவா?
  – தனிப்பட்ட நிலையிலும் குழுக் கலந்துரையாடலுக்குப் பின்னும் பொதுக் கலந்துரையாடலுக்குப் பின்னும் பதிவு செய்தல்கள் நடத்தியுள்ளாரா?

**தொடர் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக மொழிப் பாடத்தில் கற்றல் செயல்முறையை மதிப்பீடு செய்வது எவ்வாறென்று பார்ப்போம்.**

மொழிப் பாடத்தில் உள்ளடக்கம் தொடர்பான கருத்து கிடைக்கின்றது என்பது போலவே முக்கியத்துவம் வாய்ந்ததுதான் வெளியீட்டு வடிவம் தொடர்பான அறிவும் மொழித்திறன்களின் வளர்ச்சியும். அவ்வாறென்றால் குறிப்புகளின் அடிப்படையில் எவ்வாறு செயல்முறைகளை மதிப்பீடு செய்யலாம் என்பதைப் பார்ப்போம்.

- **பங்கேற்பு**

  கற்றல் செயல்பாடுகளில் மாணவனின் ஆர்வம், குழுச் செயல்பாட்டில் பங்கேற்பு போன்றவற்றை இதில் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **கருத்து முடிவு**

  மொழியின் உள்ளடக்கம் தொடர்பான எண்ணங்கள் வெளியீட்டு வடிவத்தின் அமைப்பு, பண்பு நிலை குறிப்புகள், வேறுபட்ட மொழிக்கற்றல் உறைவிடங்கள் வாயிலாக அறிவை உருவாக்கும் முறை, மொழியடிப்படையிலான திறன் போன்றவற்றில் மாணவன் எந்த நிலையில் உள்ளான் என்பதைத்தான் ஆசிரியர் இங்கு மதிப்பிட வேண்டும்.

- **திறன்கள்**

  கேள்வி, உரையாடல், வாசிப்பு, எழுத்து, படைப்பு முதலான திறன்களை அடைவதற்கான மண்டலங்களில் மாணவனின் முன்னேற்றத்தை மதிப்பிட்டு, பின்னூட்டம் அளிக்கின்றனர். இங்கு வேறுபட்ட மொழி வெளியீட்டு வடிவங்கள், மொழியின் தன்மைகள், கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றிலும் மாணவனின் செயல் திறன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **செயல் / வெளியீடு**

  ஒரு மொழியில் கருத்து வெளியீட்டிற்கு வேறுபட்ட வழிகள் உள்ளன. மாணவனின் எழுத்தாற்றலைப் போலவே பிற மொழிவெளியீடுகளையும் (பாராயணம், பாடுதல், நடிப்பு, படம் வரைதல், உரையாடல், சரியான உச்சரிப்பு, தெளிவு ஆகியவற்றையும்) கருத்தில் கொண்டே ஆசிரியர் இங்குப் பின்னூட்டம் அளிக்க வேண்டும்.

- **பதிவு செய்தல் / தயாராக்குதல்**

  செயல்பாட்டின் வழியாகக் கடந்து சென்றபோது தேவையான பதிவு செய்தல்கள் நடத்தியுள்ளனரா? பதிவு செய்தவை பிறருக்குப் புரியும்படியாக உள்ளனவா? பதிவு செய்தல்களில் ஒழுங்குமுறை காணப்படுகின்றதா? தனிப்பட்ட நிலையில் எழுதியுள்ளாரா? வகுப்பறைக் கலந்துரையாடலுக்குப் பின் குழுவில் மேம்படுத்தப்பட்டுள்ளதா? தவறில்லாமல் எழுதுவதற்கு மாணவர்களால் இயல்கின்றதா? என்பவற்றை யெல்லாம்தாம் ஆசிரியை மதிப்பீடு செய்ய வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளை நுணுக்கமாகத் திட்டமிடுவதற்கும் தொடர் மதிப்பீடு அறிவியல் பூர்வம் ஆக்குவதற்குமாக Teacher Planner தயாராக்க வேண்டும்.

**(1) Teacher Planner விளக்கங்கள்**

(i) கற்றல் அடைவுகள்

(ii) கருத்துகள்/முடிவுகள்

(iii) திறன்கள்

(iv) மதிப்புகள்/மனநிலைகள்

(v) கற்றல் கருவிகள்

(vi) எதிர்பார்க்கும் உற்பத்திப்பொருட்கள்

(vii) பிரிவேளைகள்

(viii) செயல்பாடுகளும் மதிப்பீடும் உள்ளடங்கிய செயல்முறைப் பக்கமும் மதிப்பீட்டு விபவரங்கள் பதிவு செய்த மதிப்பீட்டுப் பக்கமும்.

கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடல், மதிப்பீட்டுச் சூழல்கள், உத்திகள், கருவிகள் ஆகியவை Teacher Planner –இல் இருக்க வேண்டும். ஒரு கருத்து, வேறுபட்ட கருத்துகள், ஒரு கற்றல் அடைவு ஆகியவற்றை மையப்படுத்தியோ அல்லது அலகை முழுமையாகக் கண்டோ Teacher Planner ஐத் தயாராக்கலாம்.

**(2) பாடப்பொருள் அடிப்படையிலான செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity Log) தொடர்பான விளக்கங்கள்**

அறிவுசார் மண்டலத்தின் மதிப்பீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டிய முக்கியமான ஓர் ஆவணம்தான் மாணவனின் செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity log). கற்றல் செயல்முறைகளுக்கு ஏற்ப வேறுபட்ட செயல்பாடுகளை முழுமைப் படுத்துவதற்குச் செயல்பாட்டுக் குறிப்பேடு உதவிக்கரமாக அமையும். மாணவனின் படைப்பாற்றல், சிந்தனைச் செயல்கள், மொழித்திறன், சமூக – உணர்வு நிலைகள் போன்றவை செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பிரதிபலிக்க வேண்டும். பாடப்பகுதியைப் பரிமாற்றம் செய்வதற்கான வெவ்வேறு உத்திகள், அவற்றை முழுமையடையச் செய்வதற்காக மாணவர் மேற்கொள்ளும் ஆயத்தங்கள், செயல்பாடுகளின் பல்வேறு கட்டங்களில் ஈடுபாடு முதலான எல்லா விபரங்களும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் இருக்க வேண்டும். செயல்பாட்டின் வழியாக உருவான உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விளக்கங்களைக் குறிப்பிடுவதும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில்தான். கற்றல் செயல்பாட்டை வலுப்படுத்துவதற்கு ஆசிரியர் அளிக்கும் அதிக விபரங்களும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் குறிப்பிடலாம்.

கால அடிப்படையில் அடைவுகளை மதிப்பீடு செய்து, கற்றல் முன்னேற்றத்திற்குத் தேவையான அறிவுரைகளும் உதவியும் ஆசிரியை அளிக்க வேண்டும். அலகு முடியும்போது அந்த அலகின் கற்றல் அடைவுகளை மாணவர் பெற்றுள்ளாரா என்பதை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆவணமாகச் செயல்பாட்டுக் குறிப்பேடு மாறவேண்டும்.

கருத்துத் தெளிவு உடையதும் சூழ்நிலைகளுக்கும் கருத்துகளுக்கும் பொருத்தமான குறிப்புகள் உள்ளதும் சுய சிந்தனைகளை உள்வாங்குவதும் வெளிப்படுத்துகின்றதுமாக இருக்க வேண்டும் செயல்பாட்டுக் குறிப்பேடு. செய்திகளைப் புரிந்துகொண்டு தனது நிலையில் வெளிப்படுத்த வேண்டும். செயல்பாட்டுக் குறிப்பேட்டிற்கு முழுமையும் தொடர்ச்சியும் இருக்க வேண்டும்.

**படைப்புத் தொகுப்பு மதிப்பீடு** (Portfolio)

கற்றல் செயல்பாடுகளின் வழியாகக் கடந்து செல்லும்போது உருவாகும் எல்லா உற்பத்திப் பொருட்களுடையவும் (படைப்புகள்) ஒரு தொகுப்புத்தான் படைப்புத் தொகுப்பு (Portfolio). கற்றல் தொடர்பாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பின்னூட்டம் அளிப்பது என்பதுதான் படைப்புத் தொகுப்பின் நோக்கம்.

படைப்புத் தொகுப்பில் உள்ளடங்க வேண்டியவை

- செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity Log)
- பிற கற்றல் சான்றுகள், படங்கள், சேகரிப்புகள், படைப்புகள், கற்றல் கருவிகள், ICT வாய்ப்புகள் வழியாக உருவாக்கிய படைப்புகள் முதலானவை.
- சுய படைப்புகள்
- பயிற்சித்தாள்கள்

படைப்புத் தொகுப்பின் மதிப்பீட்டிற்காகக் கீழ்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

- கருத்துத் தெளிவு
- முடிவுகளின் உள்வாங்கல்
- உகந்த வடிவமைப்பு
- முழுமை

- தனித்தன்மை (Originality)

**கற்றல் செயல்முறை மற்றும் படைப்புத் தொகுப்பின் மதிப்பெண் கணக்கிடும் முறை**

ஒவ்வொரு செயல்பாட்டையும் மேல் குறிப்பிட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி எல்லா மாணவர்களையும் மதிப்பிட்டு, மதிப்பெண் பதிவு செய்ய வேண்டும் என்றில்லை. குறிப்புகளின் அடிப்படையில் ஒரு பருவத்தின் மொத்தச் செயல்பாட்டை மதிப்பீடு செய்தால் போதுமானது. Teacher Planner இல் உள்ள குறிப்புகள், செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பதிவு செய்தவை ஆகியவற்றின் அடிப்படையில் பருவ இறுதியில் இவற்றை ஒருங்கிணைத்து மிகுந்த பங்கேற்புத் தன்மை கொண்டவர்கள், சராசரி பங்கேற்புத் தன்மை கொண்டவர்கள், இனியும் மேம்பட வேண்டியவர்கள் என்றிவ்வாறு மதிப்பீடு செய்து 4/3/2/1 மதிப்பெண் வழங்கலாம். 5 குறிப்புகளையும் பரிசோதித்து ஒவ்வொரு குறிப்பிற்கும் மதிப்பெண் வழங்கும்போது அதிகபட்சமாக 20 மதிப்பெண் எனக் கொள்ளலாம்.

**அலகு மதிப்பீடு**

ஓர் அலகில் வெவ்வேறு கற்றல் அடைவுகளுக்கான செயல்பாடுகள் பரஸ்பரத் தொடர்புடன் தரப்பட்டுள்ளன. இதற்கு ஒரு முழுமைத் தன்மை உண்டு. ஓர் அலகில் மாணவனின் கற்றலை மதிப்பிடுவதன் மூலம் இந்த முழுமைத் தன்மையையே (முழு கற்றல் அடைவுகளையும் கருத்தில் கொண்டு) மதிப்பிடுகிறோம். நடைமுறையிலுள்ள அலகு அடிப்படையிலான மதிப்பீட்டு முறைகளுக்கு மேலாக வாய்மொழி மதிப்பீடு, வினாடி வினா நிகழ்ச்சி, திறந்த நூல் மதிப்பீடு, வினாக்கள் உருவாக்கலும் விடைக்குறிப்புகள் கண்டடைதலும், புதிய படைப்புகளை மதிப்பிடுதல் ஆகியவற்றையும் அலகு மதிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளலாம். குறிப்பிட்ட அலகின் கற்றல் அடைவுகளில் மாணவன் எந்த நிலையில் உள்ளான் என்பதைக் கண்டறிய உதவும் தரஅளவுகோல், சோதனைப் பட்டியல் போன்றவற்றையும் பயன்படுத்தலாம். அலகு மதிப்பீடு கற்றல் செயல்பாடுகளுடன் இயல்பாக நடக்க வேண்டும்.

அலகு மதிப்பீட்டின்போது செயல்பாட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பெண் வழங்கி, பருவ இறுதியில் அதற்குரிய படிவத்தில் அதனைப் பதிவு செய்ய வேண்டும். இதற்குப் பயன்படுத்திய அளவுகோலின் இயல்புக்குப் பொருத்தமான குறிப்புகளை ஆசிரியர் தயாராக்க வேண்டும். ஒரு பருவத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட அலகுகள் மதிப்பீடு செய்ய வேண்டி வரலாம் என்பதனால் அலகு மதிப்பீட்டின் சராசரியைத்தான் பருவ இறுதியில் சேர்க்க வேண்டும்.

**தொடர் மதிப்பீட்டு (CE) மதிப்பெண் காணும் முறை**

ஒவ்வொரு பாடப் பொருளினுடையவும் கற்றல் செயல்முறை, படைப்புத் தொகுப்பு, அலகு மதிப்பீடு என்பவற்றில் ஒவ்வொன்றினுடையவும் அதிகபட்ச மதிப்பெண் 20 ஆகும். அவற்றின் சராசரியைக் கணக்கிட்டுப் பருவநிலை மதிப்பெண் பதிவு செய்யலாம். இதை ஒருங்கிணைத்துப் பதிவு செய்வதற்கு பின் இணைப்பு (annexure-1) படிவத்தைப் பயன்படுத்தலாம்.

**பருவ மதிப்பீடு (TE)**

வகுப்பறைச் செயல்பாடுகளின் வழியாக ஒவ்வொரு மாணவனும் எந்த அளவுக்குக் கற்றல் அடைவுகளை அடைந்துள்ளான் என்பதை ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் மதிப்பிட வேண்டியது இன்றியமையாததாகும். மொழிப் பாடத்தைப் பொறுத்தவரை ஒரு பருவத்தில் எடுத்துக்கொண்ட அலகுகளின் கற்றல் அடைவுகளின் அடிப்படையில் வெளியீட்டு வடிவங்கள், மொழி இயல்புகள், மொழித் திறன்கள், என்னும் மண்டலங்களைக் கருத்தில் கொண்ட பருவ மதிப்பீடு நடத்தவேண்டும். உள்ளடக்கங்களுக்கும் திறன்களுக்கும் முக்கியத்துவம் அளித்துப் பன்முகத் தன்மை கொண்ட வினாமாதிரிகளை உட்படுத்தலாம். பிற பாடங்களுக்கு அலகு உள்ளடக்கத்தின் அடிப்படையில் பருவ மதிப்பீடு நடத்த வேண்டும். கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலையில் கருத்துகளையும் திறன்களையும் மதிப்பீடு செய்ய உதவும் வினாக்கள் தயார் செய்யலாம்.

ஒவ்வொரு அலகு / கருத்து மண்டலத்திற்கும் பல்வேறு நிலையிலான உளச் செயல்முறைகளுக்கும் (அறிவை உள்வாங்குதல்/முடிவை அடைதல், கருத்துகள்/முடிவுகள் என்பவற்றின் பயன்பாடு, பகுப்பாய்வும் முடிவு கண்டடைதலும், மதிப்பீடு, படைப்பு முதலான உளச் செயல்முறைகள்) சரியான முன்னுரிமை (Weightage) வழங்கி வினாவடிவமைப்பு (Blue print) தயாராக்கிப் பன்முகத் தன்மை கொண்ட வினாக்கள் உட்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வினாத்தாள் தயாரிக்க வேண்டும். வினாக்களுக்கு உகந்த விடைக்குறிப்புகள் உருவாக்கி அவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**செய்முறை மதிப்பீடு (PE)**

கற்றல் செயல்பாட்டின் ஒரு பகுதியாக நடக்கின்ற செய்முறைகள் அதன் பதிவுகள் ஆகியவை தொடர்ந்து நடைபெற வேண்டும். உள்ளடக்கம் தொடர்பாக நடக்க வேண்டிய செய்முறைகள் அந்தந்த உள்ளடக்கப் பரிமாற்றத்தின்போதே நடைபெற வேண்டும். இத்தகைய பதிவு செய்தல்களுக்கு செய்முறை நாளேட்டைப் பயன்படுத்தலாம்.

செய்முறை உள்ள பாடங்கள் தொடர்பான செய்முறைத் தேர்வுகள் இரண்டாமாண்டு இறுதியில் நடத்தப்பட வேண்டும். ஒன்றும் இரண்டும் வருடங்களுக்கான செய்முறைகளின் பதிவுகள் செய்யப்பட்ட செய்முறை நாளேடும் இரண்டாமாண்டு இறுதியில் நடத்தும் செய்முறைத் தேர்வும் புறத் தேர்வாளர்கள் பரிசோதித்து மதிப்பெண் வழங்க வேண்டும்.

**உடல் நல – விளையாட்டுக் கல்வி – மதிப்பீட்டு முறை**

உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வியை ஓர் அறிவுசார் பாடப்பொருள் என்ற நிலையில் 2014-15 கல்வியாண்டு முதல் கருதப்பட்டு வருகின்றது. மாணவனின் உடல் மற்றும் உள ரீதியான வளர்ச்சிகள் கூடுதலாக நடைபெறுவது குமரப் பருவத்திலாகும். உடல்நலப் பழக்க வழக்கங்கள் தொடர்பானதும், விளையாட்டுச் செயல்பாடுகளில் ஈடுபடுவதன் தேவை தொடர்பானதுமான சரியான எண்ணங்களை அடைவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. உடல்நல – விளையாட்டுக் கல்வியில் நடைபெறும் செயல்பாடுகள் மதிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான விளக்கங்கள் உடல்நல – விளையாட்டுக் கல்வி – மேனிலை வளநூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

**சமூக – உணர்வு மண்டலங்களின் மதிப்பீடு**

அறிவுசார் மண்டலத்தைப் போலவே முக்கியமானதுதான் சமூக – உணர்வு நிலை மண்டலங்களுக்கான மதிப்பீடும். அறிவதற்கான கல்வி, செய்வதற்கான கல்வி, சேர்ந்து வாழ்வதற்கான கல்வி, இருத்தலுக்கான கல்வி (Learning to know, Learning to do, Learning to live together, Learning to be) ஆகியவற்றுடன் தொடர்புடைய திறன்கள் இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டும். சமூக – உணர்வு மண்டலங் களின் மதிப்பீட்டுடன் தொடர்புபடுத்திக் கீழ்வரும் திறன்கள் மதிப்பிடப்பட வேண்டும்.

1. கருத்துப் பரிமாற்றத் திறன் (Communication Skills)
2. தனிமனிதத் திறன் (Interpersonal Skills)
3. அனுதாபம் (Empathy)
4. உணர்ச்சிகளோடு பொருத்தப்படுதல் (Coping with Emotions)
5. மன அழுத்தங்களுடன் பொருத்தப்படுதல் (Coping with Stress)
6. பிரச்சினைத் தீர்வுத் திறன் (Problem solving Skill)
7. தீர்மானங்கள் எடுத்தல் (Decision Making)
8. விமர்சன பூர்வமான சிந்தனைகள் (Critical Thinking)
9. படைப்புத் திறன் (Creative Thinking Skills)
10. சுய விழிப்புணர்வு (Self - Awareness)

அறிவுசார் மண்டலங்களில் வெவ்வேறு பாடப்பொருள்களை நடத்தும் ஆசிரியரே இவற்றின் மதிப்பீட்டையும் நடத்த வேண்டும். அந்தந்தப் பாடப்பொருளின் செயல்முறை மதிப்பீட்டின் பகுதியாக இந்த மதிப்பீடும் நடத்தப்பட வேண்டும். இங்குச் செயல்முறைத் திறன்களை மதிப்பிடுவதுடன் மதிப்புகள்/மனநிலைகள் என்பவை உருவப்படுவதுடன் தொடர்புடைய மதிப்பீடும் நடக்க வேண்டும்.

சமூக – உணர்வு மண்டலங்களில் மாணவனின் மேன்மை தொடர்பான நற்பண்புகளைக் கண்டறிந்து பதிவு செய்தல் நடைபெற வேண்டும். ஒவ்வொரு மாணவனுடையவும் பண்புசார் திறன்களை ஊக்கப்படுத்தவும் வேண்டும். இம் மேன்மைகளை Teacher Planner-லும் ஒருங்கிணைத்த செய்திகளைப் பின் இணைப்பு 2-லும் பதிவு செய்ய வேண்டும்.

**கலை, சமூகம், பண்பாடு மற்றும் தொழில் முறையிலான திறன்கள்**

மேனிலைத் தலத்தில் மாணவனின் அனைத்து நிலையிலுமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காகக் கற்றலின் கூடவே ரசனைத் திறன்களும் படைப்பாக்கம் தொடர்பான ஆற்றல்களும் கலை ஆர்வங்களும் சமூகப் பண்பாட்டுச் செயல்கள் நடைமுறைப்படுத்துவதற்கான மனநிலையும் உருவப்படுத்த வேண்டும். மாதம் ஒரு முறையாவது இத்தகைய நிகழ்வுகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும். இதன் பொருட்டு மேனிலைத் தலத்தில் கலையரங்கம், (Career Guidance) சமூகம் தொடர்பான செயல்கள் (NSS, NCC) பல்வேறு மன்றங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேனிலை வகுப்பில் படிக்கும் அனைத்து மாணவர்களும் ஏதேனும் செயல்பாட்டில் பங்கேற்பாளர்கள் ஆகவேண்டும். பங்கேற்பு தொடர்பான மாணவனின் திறமைக்குத் தனித்தரச் சான்றிதழ் வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| மிகவும் சிறந்த செயலுக்கு | - | (A) தரம் |
| சிறந்த செயலுக்கு | - | (B) தரம் |
| திருப்திகரமான செயலுக்கு | - | (C) தரம் |
| பங்கேற்பு மட்டும் | - | (D) தரம் |

**மதிப்பீடு – வருடாந்திர ஒருங்கிணைப்பு**

பருவ இறுதியில் கிடைக்கின்ற தொடர் மதிப்பீடு CE மதிப்பெண்களைக் கருத்தில் கொள்ளும்போது 3 பருவங்களிலும் மாணவனுக்குக் கிடைத்த அதிகபட்ச மதிப்பெண்ணே CE யின் வருடாந்திர ஒட்டுமொத்த மதிப்பெண். இதனைப் பின்னிணைப்பு – 2 படிவத்தில் இறுதி (Final) மதிப்பெண் என்ற கட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். மாணவனின்

ஒவ்வொரு பாடப்பொருள் தொடர்பான இறுதி CE மதிப்பெண்தான் இது. இனி ஒவ்வொரு பாடப்பொருளுக்குமான பருவ மதிப்பெண்கள் (TE) கண்டறியவும், தொடர்ந்து CE, TE ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்ணைக் காணவும் வேண்டும். இதுதான் ஒரு மாணவனின் ஒரு பாடப் பொருளுக்கான மொத்த மதிப்பெண். செய்முறைகள் உள்ள பாடப்பொருள் தொடர்பான அந்த மதிப்பெண்ணையும் சேர்த்து மொத்த மதிப்பெண்ணைக் கணக்கிடலாம்.

மேனிலை பருவத் தேர்வு என்பது பொதுத் தேர்வு ஆனதால் TE யின் எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு ஆகியவற்றின் இறுதி மதிப்பெண்கள் பொதுத் தேர்வின் மதிப்பெண்ணாக இருக்கும்.

**மேனிலை வகுப்பு வெவ்வேறு பாடங்களின்**

**CE, TE மதிப்பெண் விளக்கம்**

| No | Part | Paper | Score | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | CE | TE | PE | Total |
| 1. | I | English | 20 | 80 | | 100 |
| 2. | II | 2nd Language | 20 | 80 | | 100 |
| 3. | III | Paper 1 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 4. | | Paper 2 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 5. | | Paper 3 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 6. | | Paper 4 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 7. | | Health & Physical Education | 20 | | 30 | 50 |

சமூக – உணர்வு மண்டலத் திறன்களில் ஒவ்வொரு மாணவனின் மிகுந்த திறனை அந்தந்தக் கட்டங்களில் குறிப்பிட வேண்டும். திறன்கள் சிறிதும் அடையாதவர் களை, திறன்கள் அடையவில்லை என்று குறிப்பிட வேண்டும்.

**தர நிர்ணய முறை**

மேனிலை, வகுப்பில் அறிவுசார் பாடங்களின் மதிப்பீட்டிற்காக, 'தரமுறை' பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஒன்பது புள்ளி முழுமைத்தர வரிசை (Nine Point Absolute Grading) முறை பின்பற்றப் படுகிறது. கீழ்வரும் பட்டியலை இதற்காகப் பயன்படுத்தலாம்.

| மதிப்பெண் விழுக்காடு | தரம் |
|---|---|
| 90 - 100 | A+ |
| 80 - 89 | A |
| 70 - 79 | B+ |
| 60 - 69 | B |
| 50 - 59 | C+ |
| 40 - 49 | C |
| 30 - 39 | D+ |
| 20 - 29 | D |
| Below 20 | E |

மாணவன் மேற்படிப்புக்குத் தகுதி பெறவேண்டுமென்றால் மேனிலை வகுப்பில் ஒவ்வொரு பாடத்திற்கும் CE + TE (பொதுத் தேர்வு) கணக்கிடும்போது குறைந்த அளவு D+ தரமாவது (30–39 விழுக்காடு) பெற்றிருக்க வேண்டும்.

இதனுடன் பொதுத் தேர்வுக்குத் (TE) தனியாகக் குறைந்த அளவு D+ பெற்றிருக்கவும் வேண்டும்.

இவ்வாறாக அறிவுசார் நிலையிலும் சமூக உணர்வு நிலையிலும் மாணவனின் திறன்களை மதிப்பிட்டுக் கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். இந்த மதிப்பீடு தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒருமித்த முயற்சி மிகவும் தேவை. ஆசிரியர் தொகுப்பு மையக் கூட்டங்களின் (Cluster) வாயிலாக இத்தகைய மதிப்பீடுகளைக் கூடுதல் சிறப்பாக்கவும் நடைமுறைப்படுத்தவும் இயலும்.

மதிப்பீடு

அணுகுமுறை : கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறை

தொடர்ச்சியும், முழுமையுமான மதிப்பீடு CCE

அறிவு மண்டலம்

- தொடர் மதிப்பீடு CE
  - கற்றல் செயல் முறையை மதிப்பிடுதல்
  - படைப்புத் தொகுப்பு மதிப்பீடு
  - அலகு அடிப்படையிலான மதிப்பீடு
- பருவ மதிப்பீடு TE
  - கருத்துகள், செயல்முறைகள், கற்றல் அடைவுகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பது.

சமூக உணர்வு மண்டலம்

1. கருத்துப் பரிமாற்றத் திறன்.
2. தனி மனிதத் திறன்.
3. அனுதாபம்
4. உணர்வுகளோடு பொருத்தப்படுதல்.
5. மன அழுத்தங்களுடன் பொருத்தப்படுதல்
6. பிரச்சினைத் தீர்வுத் திறன்
7. தீர்மானங்கள் எடுத்தல்.
8. விமர்சன பூர்வமான சிந்தனைகள்
9. படைப்புத் திறன்
10. சுய விழிப்புணர்வு

**CE, TE ஆகியவை ஒவ்வொரு பருவத்திலும் பதிவு செய்வதற்கான பாடப்பொருள் அடிப்படையிலான ஒருங்கிணைப்புப் படிவம்**

பருவம் : 1 / 2 / 3

பொருள் ..........................................வகுப்பு..........................பிரிவு ..........

| எண் | மாணவர் பெயர் | தொடர் மதிப்பீடு | | | மொத்தம் தொடர் மதிப்பீடு | பருவ மதிப்பீடு மதிப்பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்முறை | படைப்புத் தொகுப்பு | அலகு மதிப்பீடு | | | |
| | | | | | | | |

Annexure 2

Annual Consolidation Format - Higher Secondary Level

Class : Division :

Year :

| No. | Name of Student | Term | Part I (language) | | | Part 2 (2nd language) | | | Part 3 | | | | | | | | | | | | | | | Socio-Emotional Skills |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | Paper 1 | | | Paper 2 | | | Paper 3 | | | Paper 4 | | | Health & Physical Edn. | | | |
| | | I | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | II | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | III | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | Final Score | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

| Term | Month | Units |
|---|---|---|
| முதல் பருவம் | June | அலகு 1. இயற்கையும் சுற்றுச்சூழலும்<br>• அழகே ஆனந்தம்<br>• சிதைந்த ஓவியம் |
| | July | • வருமுன்<br>அலகு 2 வேர்வைத்துளிகள்<br>• இன்றுவரை |
| இரண்டாம் பருவம் | August | • உயரப் பறக்க<br>• மலரும் மனம்<br>முதல் நிலை மதிப்பீடு |
| | Septermber | அலகு 3. மனிதகுல மேம்பாடு<br>• அன்பின் விதைகள்<br>• சமதர்மச் சிந்தனைகள் |
| | October | • யாவரும் கேளிர்<br>அலகு 4. மொழியும் சமூகமும்<br>• மொழி வளர்ச்சி |
| | November | • மொழிப்பற்று<br>• மொழி இழப்பு<br>அலகு 5. அறிவின் வாயில்கள்<br>• எழுதும் கலை |
| | December | • வலைப்பூக்கள்<br>இரண்டாம் நிலை மதிப்பீடு |
| மூன்றாம் பருவம் | January | • ஒளியும் இருளும் |
| | February | மீள்பார்வை |
| | March | ஆண்டு இறுதி மதிப்பீடு |

# கற்றல் அடைவுகள் (LOs)
# சிறப்புத் தமிழ்

## 1. இயற்கையும் சுற்றுச் சூழலும்

1.1 படைப்பிலக்கியங்களில் இடம் பெறும் இலக்கணக் கூறுகளைக் கண்டறிகிறார்கள். கவிதைகள் இயற்றுகிறார்கள்.

1.2 நூற்களை வாசிக்கவும் சரியான நூலமைப்பை அறிந்து வெளிப்படுத்தவும் செய்கின்றனர்.

1.3 கருத்துத் தொடர்பான செய்திகளைத் திரட்டித் தொகுக்கின்றனர்.

1.4 கவிதையின் அழகுணர்ச்சி உட்கொண்டு வருணனைக் கட்டுரையாக வடிவமாற்றம் செய்கின்றனர்.

1.5 பொருத்தமான தலைப்புகள் அமைத்துப் படைப்புகளை வெளியிடுகின்றனர்.

1.6 படைப்பிலக்கியங்களின் சுவை உணர்ந்து படைப்பாளர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுகின்றனர். நயம் பாராட்டுகின்றனர்.

1.7 இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவையையும் அறிந்து சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கிறார்கள்

1.8 மனித வாழ்க்கைக்கு இயற்கையின் கொடை முக்கியமானதாகும் என்பதை மையமாகக் கொண்ட படைப்புகள் உருவாக்குகிறார்கள்.

1.9 மாறிவரும் தொழில் நுட்பங்களின் நிறை, குறைகளைக் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.

1.10 பாடப்பகுதிகள் சுட்டும் பிரச்சினை களை உட்கொண்டு தலையங்கம் எழுதுகிறார்கள்.

1.11 தொழிலாளர்நிலை உழைப்புச் சுரண்டல் போன்றவற்றைக் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.

## 2. வேர்வைத் துளிகள்

2.1 கவிதைகளில் வெளிப்படும் சமூகநிலை குறித்து விவாதித்து விமர்சனக் கட்டுரை எழுதுகின்றனர்.

2.2 பல்வேறு தொழில்கள் தொழிலாளி களின் நிலை குறித்து பட்டிமன்றம் குறிப்புகள் எழுதி விவாதிக்கின்றனர்.

2.3 படைப்பிலக்கியங்கள் சுட்டும் பொருளை உணர்ந்து அதைப் போன்ற படைப்புகளை உருவாக்குகிறார்கள்.

2.4 நவீனத் தொழில்நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தி யுள்ளது என்பது குறித்துக் குறிப்புரை எழுதுகிறார்கள்.

2.5 மாறிவரும் தொழில் நுட்பங்களின் நிறை, குறைகளைக் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.

2.6 பாடப்பகுதிகள் சுட்டும் பிரச்சினை களை உட்கொண்டு தலையங்கம் எழுதுகிறார்கள்.

2.7 தொழிலாளர்நிலை உழைப்புச் சுரண்டல் போன்றவற்றைக் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.

## 3. மனிதகுல மேம்பாடு

3.1 மனிதநேயம், ஒருமைப்பாடு என்பவற்றின் பொருளை அறிகிறார்கள். அது தொடர்பான பழமொழி

கள், சொற்றொடர்கள் தொகுக்கிறார்கள்.

3.2 மனிதநேயம் தொடர்பான பத்திரிகை விளம்பரங்களைத் தொகுக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார்கள்.

3.3 மனிதநேயம் குறித்து உரையாற்றுவதற்கான குறிப்பு தயாரிக்கும் திறன் பெறுகிறார்கள்.

3.4 மனிதநேயம் குறித்துக் கட்டுரை எழுதும் திறன் பெறுகிறார்கள்.

3.5 மனிதகுல மேம்பாடு குறித்துக் கருத்தரங்கில் உரையாற்றச் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள்.

3.6 மக்களாட்சி முறைகள் குறித்த கருத்துகளை ஒப்பிட்டு எழுதும் திறன் பெறுகிறார்கள்.

3.7 மனிதநேயம் குறித்துக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.

3.8 மனிநேயப் பண்பாளருடன் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார்செய்கிறார்கள்.

3.9 மனிதநேயம் குறித்த கவிதைகளைத் திரட்டுதல் திறனைப் பெறுகிறார்கள்.

3.10 கவிதைகளை வரையும் திறன் பெறுகிறார்கள்.

## 4. மொழியும் சமூகமும்

4.1 தமிழ் மொழியின் சிறப்புகளையும் அது இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.

4.2 அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தமிழ் மலையாளச் சொற்களைத் தொகுக்கின்றனர். அகராதி தயாரிக்கின்றனர்.

4.3 தாய்மொழி வழிக்கல்வியின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வண்ணம் சொற்பொழிவு தயாரிக்கின்றார்கள்.

4.4 சிற்றிலக்கியங்களின் பாடுபொருளையும் அது தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டு குறித்தும் சிறு கட்டுரை எழுதுகின்றனர்.

4.5 தமிழ்மொழிக்குத் தொண்டு செய்த பிற நாட்டவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.

4.6 மொழிகள் அழிவதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாத இதழுக்குச் சிறப்புக் கட்டுரை எழுதுகின்றனர்.

4.7 மொழியைப் பாதுகாப்பதில் சமூகத்தின் பங்கு எனும் தலைப்பில் விமர்சனக் கட்டுரை எழுதுதல்.

## 5. அறிவின் வாயில்கள்

5.1 ஊடகங்கள் குறித்த தேவையான செய்திகளைத் திரட்டவும், பட்டியலிடவும் செய்கிறார்கள்.

5.2 பிரபலமானவர்களுடன் நேர்காணல் நடத்தி எழுத்து வடிவில் வெளியிடுகின்றனர்.

5.3 படைப்புகளில் பிழைதிருத்தி மேம்படுத்துகிறார்கள்.

5.4 பதிவு செய்யப்பட்ட எழுதுத்துப் பதிப்புகளை மேம்படுத்தி வெளியிடுகின்றனர்.

5.5 காலந்தோறும் ஊடகங்களின் வளர்ச்சியை அறிகிறார்கள். இவை குறித்தான கட்டுரைகள் எழுதுகிறார்கள்.

5.6 செய்திகளைச் சுருக்கமாக தெளிவாகச் சுவையாக வெளிப்படுத்துகின்றனர்.

5.7 சமூக சூழலால் ஊடகங்களுக்கு ஏற்படும் மாற்றங்களைக் கட்டுரையாக வெளிப்படுத்துகின்றனர்.

5.8 இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கம் குறித்து அறிகின்றனர்.

ஊடகங்களால் ஏற்படும் விளைவுகளை சமூக அக்கறையுடன் அசைகி தீர்வு காணமுயல்கின்றனர்.

# 1

# இயற்கையும் சுற்றுச்சூழலும்

## அலகு அறிமுகம்

இயற்கையும் சுற்றுச்சூழலும் மனித இனத்தின் முக்கியக் காரணிகள் என்பதால் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உலக மக்களிடையே இருந்து வருகிறது. மனிதகுல நிலைபேற்றின் அடிப்படை ஆதாரம் இயற்கையல்லவா? உயிரினங்கள் ஒவ்வொன்றும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையே மேற்கொண்டு வருகின்றன. சங்க இலக்கியங்கள் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த நிலையினை அழகுறப் படம் பிடித்துக் காட்டியுள்ளனது.

இயற்கையும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. இதை மாணவ சமூகத்தின் மனதில் வேரூன்றச் செய்து, அவர்கள் சார்ந்த சமுதாயத்தைத் திருத்தும் சக்தியாக மாற்றியே தீர வேண்டும். அதனடிப்படையில் பாடங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

அழகான இயற்கையினைக் கண்டும், கவிதையினை வடித்தும் மகிழ்ந்த கவிஞர்கள் இயற்கையின் அழிவினையும் எழுத்தில் படைக்கின்றனர்.

அன்றிலிருந்து இன்றுவரை பாடுபொருளாக நமது இயற்கை அமைந்துள்ளது. மாசுபடும் உலகைப் பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு படைப்புகள் இன்றளவும் உருவாகின்றன. அக்கவி தைகளும், இவ்வலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. இயற்கையை ப்பாதுகாக்க வேண்டும் என்ற மிக அவசியமான உணர்வு இவ்வரிகளில் பிரதிபலிக்கின்றது.

எனும் கருத்துகளை உணர்ந்து செயல்படும் திறனை மாணவர்கள் நிச்சயம் பெறவேண்டும் எனும் நோக்குடன் அமைக்கப்பட்டதே இவ்வலகு.

இவ்வலகில் அழகே ஆனந்தம், சிதைந்த ஓவியம், வருமுன் எனும் மூன்று கருத்தலகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இயற்கையும் சுற்றுச்சூழலும் மனித இனத்தின் இரு கண்களெனக் கொண்டு அதற்கான ஆயத்தம் செவ்வனே நடைபெற இப்பகுதி உதவும்.

## கற்றல் அடைவுகள்

- படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் இலக்கணக் கூறுகளைக் கண்டறிகிறார்கள். கவிதைகள் இயற்றுகிறார்கள்.
- நூற்களை வாசிக்கவும் சரியான நூலமைப்பை அறிந்து வெளிப்படுத்தவும் செய்கின்றனர்.
- கருத்துத் தொடர்பான செய்திகளைத் திரட்டித் தொகுக்கின்றனர்.
- கவிதையின் அழகுணர்ச்சி உட்கொண்டு வருணனைக் கட்டுரையாக வடிவமாற்றம் செய்கின்றனர்.
- பொருத்தமான தலைப்புகள் அமைத்துப் படைப்புகளை வெளியிடுகின்றனர்.
- படைப்பிலக்கியங்களின் சுவை உணர்ந்து படைப்பாளர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுகின்றனர். நயம் பாராட்டுகின்றனர்.
- இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவையையும் அறிந்து சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- மனித வாழ்க்கைக்கு இயற்கையின் கொடை முக்கியமானதாகும் என்பதை மையமாகக் கொண்டு இதழ் தயாரிக்கிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்களும்

- தன் கருத்துகளைக் கவிதையாக இயற்றி பெருமிதம் கொள்கின்றனர்.
- பல்வகை நூல்களை வாசிக்கும் ஆர்வம் கொள்கின்றனர்.
- சமூகப் பிரச்சினைகளைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகுதல்.
- இயற்கை அழகை வர்ணித்து மகிழ்கின்றனர்.
- பிறரை மதிக்கவும் சிறப்பானவற்றைப் பாராட்டவும் முன்வரும் மனநிலை பெறுகின்றனர்.
- பொதுநலச் சிந்தனை பெறுகின்றனர்.
- .இயற்கையை நேசிக்கவும், பாதுகாக்கவும் எண்ணம் கொள்கின்றனர்.

**பார்வை நூல்கள்**

முக்கூடற்பள்ளு, பாரதிதாசன் கவிதை, வாணிதாசந் கவிதை, தமிழச்சி தங்கபாண்டியன் கவிதை, இரா. காமராசு சிறுகதை, சிவசங்கரி சிறுகதை, பி. தாயளன் கட்டுரை.

அலகுச்சட்டம் (வேர்வைத்துளிகள்) அலகு 1

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| இலக்கியங்கள் இயற்கையை முக்கிய பாடுபொருளாகக் கொண்டுள்ளன. | **கலந்துரையாடல்**<br>இயற்கையின் அழகுக்கு இன்றைய நிலையில் ஏற்படும் மாற்றங்கள், வரும் கால நிலை போன்றவைகளைக் குறித்து மாணவர்களிடம் கலந்துரையாடல்.<br>**உவமைகளைத் தொகுத்தல்**<br>எழிலோவியம், அழகின் சிரிப்பு போன்ற கவிதைகளை வாசித்து அக்கவிதைகளில் வெளிப்படும் அழகுணர்ச்சி, உவமைகள், கவிதை உட்பொருள் போன்றவற்றை ஆராய்தல். இதன் அடிப்படையில் கவிதைகளில் அமைந்துள்ள உவமைகளைத் தொகுத்து எழுதச் சொல்லுதல்.<br>**கவியரங்கம் நடத்துதல்**<br>இயற்கையின் அழகு என்னும் தலைப்பில் கவிதைகள் எழுதி வரச் சொல்லுதல். கவிதைகளை வகுப்பில் வாசித்துக் கவியரங்கம் நடத்திடத் திட்டமிட வேண்டும். சிறந்த கவிதைகளைத் தேர்வு செய்து இலக்கியக் குழுவில் கவியரங்கம் நடத்த வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கவிநயம், கருத்து, மொழிநடை, வடிவம்<br>**நூற்குறிப்பு எழுதுதல்**<br>முக்கூடற் பள்ளு கவிதைப் பகுதியினை வாசித்து இரசிக்கின்றனர். அக்கவிதையில் அமைந்துள்ள நயங்களைப் பாராட்டுகின்றனர். நூற்குறிப்பு எழுதிடச் செய்தல். நூற்குறிப்பில் நூலின் அனைத்து விபரங்களும் உட்படுத்த வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>சரியான விவரம், தொகுத்து எழுதுதல், குறிப்புகள், சான்றுகள் | படைப்பிலக்கியங்களில் இடம் பெறும் இலக்கணக் கூறுகளைக் கண்டறிகிறார்கள். கவிதைகள் இயற்றுகிறார்கள்.<br><br>நூற்களை வாசிக்கவும் சரியான நூலமைப்பை அறிந்து வெளிப்படுத்தவும் செய்கின்றனர்.<br><br>கருத்துத் தொடர்பான செய்திகளைத் திரட்டித் தொகுக்கின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| நகரமயமாக்கல் இயற்கை அழிவிற்குக் காரணமாகிறது. | **பத்திரிகைச் செய்தி சேகரித்தல்**<br>முக்கூடற்பள்ளு கவிதையில் நெய்தல் நிலத்தில் பாயும் வெள்ளம் விவரிக்கப் பட்டுள்ளது. இதைப் போன்று வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளைத் திரட்டச் செய்தல்.<br>**வருணனைக் கட்டுரை எழுதுதல்**<br>கவிதைகளை வாசித்து அதன் அழகுணர்ச்சியைப் பாராட்டும் மாணவன், கவி தைகளின் பொருள் அறிந்து வர்ணனை உரையாக எழுதிட முயலவேண்டும். ஆசிரியரின் உதவியுடன் வர்ணனைக் கட்டுரை எழுதும் முறையை அறிந்து வெளிப்படுத்த வேண்டும். இவ்வலகில் ஏதேனும் ஒரு கவிதையைப் பயன்ப டுத்தலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துமாறாமை, மொழிநடை, வர்ணனையில் பயன்படுத்தும் உவமை<br>**குறிப்புகள் எழுதுதல்**<br>தாத்தா தொலைந்து போனார்' என்ற சிறுகதையினை வாசித்து. அதன் மையக் கருத்தான நகரமயமாதலைக் குறித்துக் கலந்துரையாட வேண்டும்.<br>இக்கலந்துரையாடலில் பேசப்படும் கருத்துக்கள் அடிப்படையில் நகரமயமா தலின் விளைவுகளைச் சிறுகுறிப்புகளாக எழுதுகின்றனர்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தெளிவு, மொழிநடை, சுருங்கக் கூறல்<br>**தொடர்பு அறிதல்**<br>ஒரு கதையின் தலைப்புக் கதையுடன் எப்படிப் பொருந்துகிறது என்பதையும் ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடும்போது மாணவனது படைப்புக ளுக்குப் பொருத்தமான தலைப்புகள் உருவாகின்றன. " தாத்தா தொலைந்து போனார்" என்ற தலைப்பு நகரமயமாதலுக்கு எப்படிப் பொருந்துகின்றது என் பதை எழுதச் சொல்லுதல். | கவிதையின் அழகுணர்ச்சி உட் கொண்டு வருணனைக் கட்டுரை யாக வடிவமாற்றம் செய்கின்றனர்.<br><br>பொருத்தமான தலைப்புகள் அமைத்துப் படைப்புகளை வெளி யிடுகின்றனர்.<br><br>படைப்பிலக்கியங்களின் சுவை உணர்ந்து படைப்பாளர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுகின்றனர். நயம் பாராட்டுகின்றனர். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td>நமது சுற்றுப்புறம் நாள்தோறும் மாசடைந்து வருகிறது.</td>
<td>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>தலைப்பின் தொடர்பு அறிதல், விளக்கக் குறிப்புகள்<br>பொருள் நயம் பாராட்டல் / பாராட்டுக் கடிதம் எழுதுதல்<br>கூவம் எனும் கவிதையில் சமூக உணர்வோடு அமைந்த கவிதை வரிகளை உள்வாங்கி பொருள் நயம் பாராட்டுகின்றனர்.<br>‘கூவம்’ எனும் கவிதையை வாசித்து இலக்கியங்கள் அன்றும் இன்றும் எவ்வாறு சமூக விழிப்புணர்வு கொண்டுள்ளன என்பதை விவாதித்துப் பின் ஆசிரியருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுகின்றனர்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>வடிவம், கருத்துத் தெளிவு, மொழிநடை,<br>சொற்பொழிவுரை தயார் செய்தல்<br>நகரமயமாதல் எனும் வளர்ச்சியின் விதைகளை உள்வாங்குவது மட்டுமின்றி அதனைத் தடுக்கும் வகையில் சொற்பொழிவாற்ற உரை ஒன்றைத் தயார் செய்திடச் சொல்லுதல். ‘இயற்கைப் பேரிடர்களும் பாதிப்புகளும் ’ என்னும் கட்டுரையை மாணவர்களுடன் விவாதித்துச் சொற்பொழிவு உரை தயார் செய்யச் சொல்லலாம்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>கருத்துடன் ஒன்றுதல், பேச்சாற்றல், சான்றுகள்<br>கருத்தரங்கக் கட்டுரை எழுதுதல்<br>சொற்பொழிவுக்காகக் குறிப்பெடுத்தல், கட்டுரைக் குறிப்புகள் இவை அனைத்துமே நகரமயமாதலைக் குறித்து என்பதால் ஒவ்வொரு செயல்பாட்டையும் தொடர்புபடுத்திக் கற்பிக்க வேண்டும். ‘விழிப்பு’ என்ற கதையினை விவாதித்துக் கட்டுரைக் குறிப்புகள் தயார் செய்திட வேண்டும்.</td>
<td>இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவையையும் அறிந்து சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கிறார்கள்<br><br>மனித வாழ்க்கைக்கு இயற்கையின் கொடை முக்கியமானதாகும் என்பதை மையமாகக் கொண்ட படைப்புகள் உருவாக்குகிறார்கள்.</td>
</tr>
</table>

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr><td></td><td>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>கருத்துடன் ஒன்றுதல், தெளிவான குறிப்பு, செய்தியை உள்வாங்கி வெளிப்படுத்தல்.<br>சிறுகதை எழுதுதல்<br>'விழிப்பு' என்ற கதைத் தலைப்பு கதையுடன் எவ்வாறு பொருந்துகிறது என்பதை விவாதித்துக் குறிப்பு எழுதச் சொல்லுதல். தொடர்ந்து ' விழிப்பு' எனும் தலைப்பின் அடிப்படையில் சிறுகதை ஒன்றை எழுதிடச் சொல்ல வேண்டும்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>தலைப்பு, மொழிநடை, கருத்து, வடிவம்<br>இதழ் வெளியிடல்<br>இதுவரை நடைபெற்ற செயல்பாடுகளின் அடிப்படையில் சிறந்த படைப்புகளை ஒருங்கிணைத்து இதழ் வெளியிடச் செய்திட வேண்டும். இவ்விதழை நூலகத்தில் பாதுகாக்க வேண்டும்.</td><td>மாறிவரும் தொழில் நுட்பங்களின் நிறை, குறைகளைக் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.<br><br>பாடப்பகுதிகள் சுட்டும் பிரச்சினைகளை உட்கொண்டு தலையங்கம் எழுதுகிறார்கள்.<br><br>தொழிலாளர்நிலை உழைப்புச் சுரண்டல் போன்றவற்றைக் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.</td></tr>
</table>

# அலகுப்பகுப்பாய்வு

### நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)

இயற்கை அழகை வெளிப்படுத்தும் உவமைகள் நிறைந்த கவிதை ஒன்றை ஆசிரியர் வகுப்பில் வாசித்தல். பின் இயற்கையின் அழகு பற்றி அழகுணர்ச்சியுடன் மாணவர்களைப் பேசச் சொல்லுதல். முன் தலைமுறைகளுக்குக் கிடைத்த இயற்கை சார்ந்த அனுபவங்கள் இன்று இல்லாமல் போனதை விவாதித்தல். தொடர்ந்து பாடப்பகுதியில் அமைந்துள்ள எழில் ஓவியம், அழகின் சிரிப்பு போன்ற கவிதைகளை வாசித்து அலகிற்குள் நுழைதல்.

### உவமைகளைத் தொகுத்தல்

இயற்கை அழகினை இரசிக்கும்போதே ஒன்றுக்கொன்று ஒப்பிடும் உவமைகளும் கவிஞர்களின் மனதில் தோன்றும். உவமைகள் கவிதைக்கு அழகூட்டும். வாசிப்பவர்கள் மனதில் அழகுணர்ச்சியை ஏற்படுத்தும். இதன் அடிப்படையில் இயற்கை அழகு சார்ந்த கவிதைகளைத் திரட்டி அக்கவிதையின் உட்பொருளை அறிந்து உவமைகளை மட்டும் தொகுத்து எழுதிடச் சொல்ல வேண்டும். மலர்கள், மலைகள், நதிகள், அருவிகள், வண்ணத்துப் பூச்சிகள், புல்வெளிகள், மரங்கள் போன்றவை மனித வாழ்வோடு ஒப்பிடப்படுகின்றன. இவ்வுவமைகளைத் தொகுக்கும் மாணவனுக்கு இன்றைய இயற்கையை நேசிக்கவும், பாதுகாக்கவும் வேண்டுமென்ற எண்ணம்.

#### துணைக்கருவிகள்

- இயற்கை அழகை வெளிப்படுத்தும் ஓவியங்கள்
- கவிதைகள்

### கவியரங்கம் நடத்தல்

இயற்கை அழகை வெளிப்படுத்தும் கவிதைகளை வாசித்தும் உவமைகளைத் தொகுத்தும் செயலாற்றிட மாணவர் மனதில் படைப்புகளை உருவாக்கும் மனநிலையை ஏற்படுத்த வேண்டும். இயற்கையின் அழகு எனும் தலைப்பில் கவிதைகள் எழுதிட முயற்சிக்க அறிவுறுத்த வேண்டும். கவிதைகளை எழுதும்போது கவனிக்க வேண்டியவற்றை ஆசிரியர் விளக்க வேண்டும். கருத்தோடு ஒட்டிய தன்மை, உவமைகள், இரசனை போன்றவை அடிப்படையில் எவ்வகை வடிவத்திலும் அழகான மொழிநடையுடன் கவிதைகள் இயற்ற முடியும் என்பதை விளக்க வேண்டும். பல்வேறு கவிதை மாதிரிகளை வாசித்துக் காட்ட வேண்டும்.

சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வகுப்பில் கவியரங்கம் நடத்த வேண்டும். மிகச் சிறந்த கவிதைகளைத் தேர்வு செய்து இலக்கியக் குழுவில் கவியரங்கம் நடத்தலாம்.

#### துணைக்கருவிகள்

- கவிதை நூல்கள்
- இலக்கண நூல்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் இலக்கணக்கூறுகளைக் கண்டறிகிறார்கள். கவிதைகள் இயற்றுகிறார்கள். | ✦ தங்கள் கருத்துகளைக் கவிதையாக இயற்றி பெருமிதம் கொள்கிறார்கள். |

## நூற்குறிப்பு எழுதுதல்

நூல்களை வாசிப்பதோடு மட்டுமன்றி அந்நூல்களின் அமைப்பு, வடிவம் போன்றவற்றையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும். நூலை முழுமையாக வாசிக்காத ஒருவருக்கு நூலை அறிமுகப்படுத்தும் முறையில் நூற்குறிப்பு எழுதிட மாணவன் அறிந்திருக்க வேண்டும். நூலடைவு என்பதும் நூற்குறிப்பு எழுதுதலே.

நூற்குறிப்பில் இடம்பெற வேண்டியவை

- ♦ நூலின் பெயர்
- ♦ ஆசிரியர்
- ♦ நூலின் வகை
- ♦ மையக்கருத்து
- ♦ மொத்தப் பக்கம்
- ♦ விலை
- ♦ பதிப்பகம்

### துணைக்கருவிகள்

- ◗ பல்வேறு வகையான நூற்குறிப்பு மாதிரிகள்
- ◗ இணையதள விளம்பரங்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நூல்களை வாசிக்கவும் சரியான நூல் அமைப்பை அறிந்து வெளிப்படுத்தவும் செய் கின்றனர். | ✦ பலவகை நூல்களை வாசிக்கும் ஆர்வம் கொள்கிறான். |

## பத்திரிகைச் செய்தி சேகரித்தல்

முக்கூடற்பள்ளு கவிதையினை வாசித்து மகிழும் மாணவன் மறித நிலத்தில் புகுந்த வெள்ளம் எங்கெல் லாம் எப்படியெல்லாம் பாய்ந்து கடலில் கலக்கிறது எனும் கவிநயத்தை எண்ணி வியக்கிறான். ஆனாலும் அவ் வெள்ளப் பெருக்கு ஏற்படுத்தும் சேதத்தை உணர்கிறான். இன்றும் உலகில் வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறித்து ஆசிரியர் மாணவர்களோடு உரையாட வேண்டும். பத்திரிகைகளில் இயற்கைச் சீரழிவு தொடர்பான செய்திகளைச் சேகரித்து வர செய்யவேண்டும். அச்செய்திகளைக் கலந்துரையாடச் செய்ய வேண் டும்.

### துணைக்கருவிகள்

- ◗ பத்திரிகைச் செய்தித் தொகுப்புகள்
- ◗ இணையதளச் செய்திகள்
- ◗ குறும்படங்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கருத்துகள் தொடர்பான செய்திகளைத் திரட்டித் தொகுக்கிறார்கள். | ✦ சமூகப் பிரச்சினைகளைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகுதல். |

### வர்ணனைக் கட்டுரை எழுதல்

கவிதைகளை வாசித்து அதன் அழகுணர்ச்சியை உணரும் மாணவன் மனதில் இயற்கை அழகை இரசித்து வெளிப்படுத்தும் எண்ணம் அடைகிறான். ஆசிரியர் மொழி அழகையும் கவிதை அழகையும் இயற்கை அழகையும் மாணவன் இரசிக்கும் விதத்தில் கவிதைகளைக் கற்பிக்க வேண்டும். காட்சி கண்முன் தோன்றும் விதம் மனப்பதிவு செய்யவேண்டும். இச்செயல் மாணவனைக் கவிதைகளை மனக்காட்சியாகக் கண்டு வர்ணனைக் கட்டுரையாக எழுத வழி நடத்தும். கவிதைகளைக் கட்டுரையாக வடிவமாற்றம் செய்ய ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- கவிதைகள்
- வர்ணனைக் குறிப்புகள், கட்டுரைகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கவிதையின் அழகுணர்ச்சியை உட்கொண்டு வர்ணனைக் கட்டுரையாக வடிவ மாற்றம் செய்கின்றனர். | ✦ இயற்கை அழகை வர்ணித்து மகிழ்கிறான். |

### குறிப்பு எழுதல்

தாத்தா தொலைந்துபோனார் என்ற கதை நகரமயமாதலின் விளைவைக் குறித்தும் பேசுகிறது. இக்கதையினை வாசித்து வகுப்பில் நகரமயமாதலின் பல்வேறு விளைவுகளைக் குறித்துக் கலந்துரையாட வேண்டும். கலந்துரையாடலின் அடிப்படையில் நன்மை தீமைகளைச் சிறுகுறிப்புகளாக வெளியிடச் சொல்ல வேண்டும்.

### தொடர்பு அறிதல்

குறிப்பு எழுதல் எனும் செயல்பாட்டைத் தொடர்ந்து கதை தலைப்பு எவ்வண்ணம் கதைக்குப் பொருத்தமாக அமைகிறது என்பதை ஆசிரியர் விளக்க வேண்டும். படைப்புகளுக்குத் தகுந்த தலைப்புகள் அளிக்கும் விதத்தை அதன் முக்கியத்துவத்தை ஆசிரியர் விளக்குகிறார். பல்வேறு தலைப்புகள் படைப்புகளுடன் அழகாகப் பொருந்திப்போவதை ஆசிரியர் சுட்டிக்காட்ட வேண்டும். மாணவர்களிடம் தாத்தா தொலைந்துபோனார் என்ற தலைப்பு நகரமயமாதல் என்ற கருத்துடன் பொருந்திப்போவதைக் குறிப்பாக எழுதச் சொல்ல வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பல்வேறுவகையான தலைப்புகள்
- கதை, கவிதை, நாடகங்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பொருத்தமான தலைப்புகள் அமைத்துப் படைப்புகளை வெளியிடுகின்றனர். | ✦ |

### பொருள் நயம் பாராட்டல் / பாராட்டுக் கடிதம்

கூவம் எனும் கவிதையில் சமூக உணர்வோடு ஆசிரியருடைய சிந்தனைகள் வெளிப்பட்டதை மாணவர் குழுவில் உரையாடுகின்றனர். சமூக அக்கறை தொடர்பான வரிகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். கவிதையின்

பொருள் நயத்தைப் பாராட்டுவதோடு தான் இரசித்த ஒன்றைப் படைப்பாகத் தந்த படைப்பாசிரியரைப் பாராட்டும் பொருட்டுக் கவிதையின் கருத்தினைச் சுட்டிக்காட்டிப் பாராட்டுக் கடிதம் ஒன்றினை எழுதிடச் செய்யவேண்டும். சமூக அக்கறையுடனும் பிறரை மதிக்கும் பண்புடனும் ஆளுமையை வளர்த்திடவும் இவ்வலகுச் செயல்பாடுகள் மாணவனுக்கு உதவும். இப்பண்புகளை உருவாக்கும் விதத்தில் இச்செயல்பாட்டைச் செய்யவைத்தல் ஆசிரியரின் கடமையாகும்.

**துணைக்கருவிகள்**

- பல்வேறு கடித வகைகள்
- பாராட்டுச் சொற்பொழிவுகள், வரவேற்புரைகள் (இணையம், குறுந்தகடு)

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ படைப்பிலக்கியங்களின் சுவை உணர்ந்து படைப்பாளர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுகின்றர், நயம் பாராட்டுகின்றனர். | ✦ பிறரை மதிக்கவும் சிறப்பானவற்றைப் பாராட்டவும் வேண்டும் பாங்கினைப் பெறுகின்றனர். |

## சொற்பொழிவு உரை தயாரித்தல்

இயற்கைப் பேரிடர்களும் பாதிப்புகளும் எனும் கட்டுரையை ஆசிரியர் வகுப்பில் விவாதிக்க வேண்டும். நிலநடுக்கங்கள் பற்றியும் வெள்ளச் சேதம் பற்றியுமான இயற்கைச் சேதங்களை எடுத்துக் கூறுதல் வழியாக இன்று நாம் எதிர்கொள்ளும் பல்வேறு இயற்கைப் பாதிப்புகளை நாமே உருவாக்குகிறோம் என்பதையும் விவாதிக்கவும்.

நம்மை நாமே அழித்துக்கொண்டிருக்கும் நிலையை மாற்றிட விழிப்புணர்வு பெற வேண்டும். அதைப் பிறரும் அறியும் பொருட்டுச் சொற்பொழிவு உரை தயாரிக்க உதவ வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பேரிடர்கள் தொடர்பான தகவல்தொகுப்புகள்
- சொற்பொழிவு மாதிரிகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவைகளையும் அறிந்து சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள். | ✦ பொதுநலச் சிந்தனை பெறுகிறான். |

## கருத்தரங்கக் கட்டுரை எழுதுதல்

இதுவரை வகுப்பில் நடைபெற்ற செயல்பாடுகள் அனைத்தும் இயற்கை தொடர்பானவையே. செயல்பாடுகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்த வேண்டும். விழிப்பு என்ற சிறுகதையினை விவாதித்துக் கட்டுரைக் குறிப்புகள் தயார்செய்திட வேண்டும். பல்வேறு செயல்பாடுகளுக்காகக் குறிப்பேட்டில் எழுதியிருக்கும் செய்திகளை ஒன்று திரட்டிக் கருத்தரங்கக் கட்டுரையாகத் தயார்செய்யச் சொல்லலாம்.

## சிறுகதை எழுதுதல்

தலைப்புகளுடன் படைப்புகள் பொருத்தமுற அமைந்துள்ளதை முன்னரே மாணவர்கள் அறிந்துள்ளனர். அவ்வகையில் விழிப்பு என்ற சிறுகதையும் நாம் விழிப்புணர்வு பெறவேண்டியதைச் சொல்கிறது. இக்கதையின்

மையக்கருத்திற்குத் தகுந்தபடி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வெளிப்படும்படி சிறுக் கதைகள் எழுதிடச் சொல்லலாம். ஆசிரியர் கதை ஓட்டம், கதைக்கரு, பாத்திரப்படைப்பு, மொழிநடை, கதைக்களம், கதைச்சூழல், உத்தி போன்றவற்றை விளக்க வேண்டும். வகுப்புக்கேற்ற தரத்தில் கதை அமைய வேண்டும். சமூக அக்கறை கதையில் வெளிப்பட மாணவனை அறிவுறுத்த வேண்டும்.

## துணைக்கருவிகள்

- சமூக அக்கறையுடைய சிறுகதைகள்
- கருத்துத்தொடர்புடைய செய்தித் தொகுப்புகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மனித வாழ்க்கைக்கு இயற்கையின் கொடை மிக முக்கியமானதாகும் என்ற கருத்து வெளிப்படும் படைப்புகள் வெளியிடுகிறார்கள். | ✦ இயற்கையை நேசிக்கவும் பாதுகாக்கவும் எண்ணம் கொள்கின்றனர். |

## இதழ் வெளியிடல்

இதுவரை நடைபெற்ற செயல்பாடுகளின் அடிப்படையில் சிறந்த படைப்புகளை ஒருங்கிணைத்து இதழ் வெளியிடச் செய்திட வேண்டும். இவ்விதழை நூலகத்தில் பாதுகாக்க வேண்டும்.

## மதிப்பீட்டு முறைகள்

இவ்வலகில் அமைந்துள்ள செயல்பாடுகளின் வழியே நாம் நோக்கமாகக் கொண்ட கற்றல் அடைவுகள் உள்வாங்கப்பட்டுள்ளனவா என ஆராய வேண்டும். அதற்காகத் தனிநபர் மதிப்பீடாகவும், குழு மதிப்பீடாகவும் மதிப்பிட வேண்டும்.

## குழுமதிப்பீடு

- கலந்துரையாடல்
- கவியரங்கம் நடத்துதல்
- குறிப்புகள் எழுதுதல்
- இதழ் வெளியிடல்
- கருத்தரங்கம் நடத்துதல்

## தனிநபர் மதிப்பீடு

- தொகுத்து எழுதுதல்
- நூற்குறிப்பு எழுதுதல்
- பத்திரிகைச் செய்தி சேகரித்தல்
- கட்டுரை எழுதுதல்
- தொடர்பு அறிதல்
- நயம் பாராட்டல்
- சொற்பொழிவுரை தயார் செய்தல்
- சிறுகதை எழுதுதல்

## வளப்பகுதி

### தந்தை மகற்காற்றும் உதவி

தந்தை மகற்காற்றும் உதவி . . . .
இதைப் பார் மகனே!
மனதில் பதிய வைத்துக் கொள்!
எதற்கும் படமெடுத்துக் கொள்!

இது மண் சாலை அன்று,
ஒரு காலத்தில்
நீரோடிக் கொண்டிருந்த
உனது நதி . . . . .

நீ அமரிக்காவுக்கு
சம்பாதிக்கப் போயிருந்த போது
இதை விற்று விட்டார்கள்.

என்னை அவர்கள் கேட்கவே இல்லை
நான் காய்ச்சலில்
படுத்திருந்த போது நடந்திருக்க வேண்டும்

உன் அம்மா சொல்லித்தான்
தெரிந்தது.
ஆற்றங்கரையில் குளிக்கப் போனபோது
அது காணமற் போனதைக்
கண்டுகொண்டு வந்து சொன்னாள்.

சந்தேகமே படவேண்டியதில்லை
கொஞ்சம் இறங்கி நடந்து பார்!
காலில் இறந்தகால ஈரம் தெரியும்.

நன்றாகப் பார்த்துப் படமெடுத்துக் கொள்.
வருங்கால வரலாற்று
ஆவணப் பதிவுக்குப் பயன்படும்.

மகனே, அதோ
அந்த மலையைக் கூடப்
படம் பிடித்துக்கொள்!

அதுவும் நீ அடுத்தமுறை
வரும்போது இல்லாமற் போகலாம்!

இந்தப் பாழுங் கிணற்றையும்
படம் பிடித்துக் கொள்
பிளாஷ் போட்டு.

அன்பு மகனே, குறிப்பாக
இந்த மரத்தை விட்டுவிடாதே!

இதுதான்
நமது ஊர் விவசாயிகள்
தூக்குப் போட்டுக் கொள்வதற்காக
ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

- புவியரசு கையொப்பம்

### மரங்களைத் தேடி

பாதரசம் தேய்ந்த
கண்ணாடிச் சில்லுகளில்
மரணத்தின் பிரகாசத்துடன்
மண்ணில் சிதறிக்கிடக்கிறது
எங்கள்
மழைக்காலச் சூரியன்

மழைத்துளிகளை
இலைகளில் உருட்டி விளையாடிய
நினைவுகளின் எச்சமாய்
சன்னல் கம்பிகளில்
பட்டுத் தெறிக்கும்
சின்னத்துளிகளை
எட்டிப்பார்க்க
சிறகுகள் விரிக்கும்
சிட்டுக்குருவிகள்
கான்கிரீட் காடுகளின்
மின்சாரக் கம்பிகளில்
அகதிகளாய்
காத்திருக்கின்றன
எப்போதாவது
இந்த மண்ணிலும்
மரம் நடப்படலாம்
என்ற நப்பாசையுடன்.

## தமிழ் இலக்கியம் காட்டும் இயற்கை

- மு. செ. ஆயிஷா பேகம்

கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பே இயற்கையழகு. இவ்வியற்கை தரும் காட்சியின்பம் கண்ணையும் மனத்தையும் கவரும் மாட்சிமிக்க இன்பம். இயற்கைக் காட்சியை முளையிளஞ் செஞ்ஞாயிற்றின் கிளர் ஒளியினும், வெண்மதியின் தண்ணிலவினும், அலைவீசி ஆடிவரும் ஆற்றினும், நுரை எழுப்பி ஓடி விழும் மலையருவியினும் காணலாம். நீண்டு அடர்ந்த காட்டினும் புதரியை நிமர்ந்து நிற்கும் மரக்கோட்டினும், பாடிவரும் காற்றினும், ஆடிவரும் கடலலையினும் காண லாம். பூத்திருக்கும் வண்ணப் பூக்களினும், தேன் உண்ணக் காத்திருக்கும் வரிவண்டினும், மின்னொளிக் காட்டிப் பறக்கும் வண்ணப் பூச்சியினும், மண்ணுள்ளிருந்து தொண்டு செய்யும் எண்ணற்ற புழுவினும் காணலாம்.

இயற்கை என்ற சொல்லிற்கு ஒரு குறிப்பிட்ட விளக்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பலரும் பல்வேறு பொருள்களைச் சொல்லுகின்றனர். பழந் தமிழ் நூல்களாகிய தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் இயற்கை என்ற சொல் “இயல்பு” என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரகராதி, சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை செயற்கைக்கு எதிரானது என்ற பல பொருள்களைத் தருகின்றது. இறைவனின் படைப்பே இயற்கை. மனிதனால் உருவாக்கப்படாத உருவாக்க இயலாத அனைத்தையும் இயற்கை என்று சொல்லலாம்.

ஐம்பூதங்கள் என்று சொல்லப்படுகின்ற நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவை கலந்த ஒரு மயக்கமே இயற்கை என்று கொள்ளப்படுகிறது. ஆனால் அறிஞர் பிளேட்டோ ஆகாயம் ஒழிய ஏனைய நான்கினையுமே இயற்கை என்று பேசுகிறார். ஐம்பூதங்களுடன் பொருளும் சேர்ந்தாலே இயற்கை என்ற சொல்லிற்கு முழு உருவம் கிடைக்க முடியும் என்கிறார் வைட்பீல்டு. இவரது கருத்துப்படி மனிதனும் இயற்கையினுள் அடங்குவான். ஆனால் தனிநாயக அடிகளார் இதனை மறுக்கிறார். மனிதனோ அவன் படைப்போ அல்ல இயற்கை என்பது அவர் கருத்து.

இயற்கை தனி ஆற்றலுடையது, காலச் சுழற்சியில் அதன் ஆற்றல் பொலிகிறது. வளமும் வளர்ச்சியும் ஆற்றலும் மிக்க இவ்வியற்கையின் உயிர்த்துடிப்பால் அதன் வடிவமும் வண்ணமும் மாறிக்கொண்டே இருக்கின்றன என்று ‘பரிபாடலில் இயற்கை’ என்ற நூல் குறிப்பிடுகின்றது. இதனால் இவ்வியற்கையை வாழ்க்கையைப் போன்று வடிவற்றது என்றும் கூறுவார்கள்.

மனிதன் இயற்கையைக் காணும்போது அதனைத் தன்னை மறந்து இரசிக்கிறான். அந்த இரசிப்பின் காரணமாக அவன் தன் கவலைகளை மறந்து மன அமைதி பெறுகிறான். மனிதனின் அனைத்து உணர்வுகளையும் தோற்றுவிக்கும் ஒரு கருவியாக விளங்குகின்றது இயற்கை. இயற்கை மாபெரும் கவிஞர்களை உருவாக்குகிறது. அவர்கள் தங்கள் உணர்வுகளையும், விருப்புக்களையும், அனுபவத்தையும், இயற்கை வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

இயற்கையை இறைவனது ஆடையாகக் கொண்டுள்ளார் கெதெ என்பவர். இயற்கையை ஆடையாக நம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் குறிப்பிடுகின்றார்.

ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர், வேட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிஞர்கள் ஒவ்வொரு வகையில் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கிறோம். தமிழ் கவிஞர்கள் இயற்கையை ஐந்துவகைகளில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.

1. இயற்கை அளிக்கும் காட்சியில் ஈடுபட்டுச் சித்திரிப்பது.
2. இயற்கையை உவமையில் பயன்படுத்துவது.
3. இயற்கையைப் பயன்படுத்திக் குறிப்பாகக் கருத்தைத் தெரிவிப்பது.
4. இயற்கையை மானிட வாழ்வுடன் இணைத்துக் காட்டுவது.
5. இயற்கையின் வாயிலாக அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் தெரிவிப்பது.

தமிழ் இலக்கிய வானத்தில் மங்காது மறையாது திகழ்ந்து வரும் கம்பனது இராமகாதையில் இயற்கைக் காட்சிகள் தனித்துவத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. அயோத்தியாகாண்டத்தில் இராமபிரான் சீதைக்குக் காட்டும் காட்சி இயற்கை வனப்பை வெளிப்படுத்துவதாக அமைகிறது. காட்டிலே ஆண்யானையும் பெண்யானையும் செல்கின்றன. பெண்யானை சூலுற்றிருக்கிறது. சூலுற்றிருக்கும் அப்பிடிக்குத் தேன் மிகவும் விருப்பமானது. பிடியின் மீது அன்புகொண்ட ஆண் யானை,

வழியில் உள்ள குகையில் தேன்கூடு இருக்கக் காண்கிறது. தேன்கூட்டிற்கு நேராகத் துதிக்கையை நீட்டிவிட்டால் தேனீக்கள் கடுமையாகக் கொட்டி வேதனைப் படுத்திவிடும் என்பது ஆண்யானைக்குத் தெரியும். ஆதலால், அது தன் அருகிருக்கும் மரத்தினின்று சிறு கிளையை ஒடித்து அதன் தழையால் தேனீக்களை அடித்துத் தட்டி ஓட்டித் தேன் கூட்டை எடுத்துப் பிழிந்து பிடியின் வாயில் ஊட்டுகிறது. இக்காட்சி இயற்கையளிக்கும் ஒரு சிறந்த விருந்து.

சமயப் பாடல்களிலும் இயற்கைக்கெனத் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் திருவையாற்றின் காட்சியை,

“மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாய செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே”

என்றும், திருக்குற்றாலத்தின் இயற்கை நலத்தை,

“மலையார் சாரல் மகவுடன் வந்தமட மந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்”

என்றும் தமது தேவாரத் திருப்பாக்களில் சொல்லோவியம் தீட்டியிருப்பதைக் காணலாம்.

இனிக் கவிஞர்கள் இயற்கையை உவமையாகப் பயன்படுத்தியிருப்பதைப் பார்ப்போம். சங்க இலக்கியம் இத்தகைய உவமைகளை எண்ணற்ற முறையில் நமக்கு எடுத்தியம்புகின்றது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகனது திருமேனியின் ஒளியை வர்ணிக்கும்போது, தேனை,

“உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவர்ஒளி”

என்று காலையில் கடலிற் காணும் இளஞ் செஞ்ஞாயிற்றை உவமை காட்டிப் புலப்படுத்தினார்.

இலக்கியங்களில் இயற்கையைப் பயன்படுத்திக் கருத்தைக் குறிப்பாகத் தெரிவிப்பது மற்றொரு வகையாகும். இவ்வாறு செய்வதில் கவிஞன் இடத்துக்கு ஏற்றவாறு கருத்தைக் குறிப்பிட வாய்ப்பு ண்டாகிறது. கருத்தைக் குறிக்கும் தன்மையை, உள்ளுறை என்றும் சொல்லுவர். அகத்திணை இலக்கியங்களில் இம்முறை அமையும். “தலைவனே நீ நள்ளிரவில் வந்து தலைவியைக் காணாதே, உன் உயிருக்குத் தீங்குண்டானால் தலைவி இறந்துபடுவாள்” என்னும் குறிப்பமைப்புடன் இயற்கையை வர்ணிக்கும் வகையில், ஒரு குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

நான்காவது வகை, இயற்கையை மானிட வாழ்வுடன் இணைத்துக் கூறுவது. இந்த முறையில் அமைகிறது ஒரு ஐங்குறுநூற்றுப் பாடல். தலைவி இயற்கையோடு தன்னை இணைத்துக் கூறுவதுபோல் இப்பாட்டு அமைந்திருக்கக் காணலாம். கவிஞர்கள் நீதியைக் கூறுவதற்கும் அரிய உண்மைகளைப் புகட்டுவதற்கும் இயற்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இவ்வகையில் நம் தமிழ்க் கவிஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். செந்தமிழ்க் காப்பியமான சிந்தாமணியை இயற்றிய திருத்தக்கத் தேவர், பின் வந்தவர்களுக்குக் கலங்கரை விளக்கமாய் இலங்கியவர். அவர் நெற்கதிர் தோன்றித் தலைநிமர்ந்து நிற்பதையும் அது முற்றித் தலைச் சாய்ந்திருப்பதையும் வருணிக்க விரும்பி,

“சொல்லருஞ்சூற் பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித்தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே”

என்று பாடினார். இப்பாடலில் அற்பர்கள் செருக்கால் தலைநிமர்ந்து இருப்பதுபோல் கதிர்கள் நிமிர்ந்திருந்தன என்றும், கல்வியில் தேர்ந்து ஆன்றவிந்தடங்கிய சான்றோர் போல் அக்கதிர்கள் முற்றியபின் வணங்கிக் கிடந்தன என்றும் கூறி மக்களுக்கு நீதியைப் புகட்டியுள்ளார்.

பண்டைத் தமிழர்களது வாழ்வு இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையதாக அமைந்திருந்தது. அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் இயற்கையோடு பின்னிப் பிணைந்து காணப்பட்டது. அவர்கள் வாழ்ந்திருந்த நிலப்பிரிவுகளும் இயற்கையின் அடிப்படையில் எழுந்தவையே. இயற்கையைப் புலவர்கள் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். சங்க இலக்கியங்களில் அமைந்ததைவிட மிகுதியாகப் பிற்கால இலக்கியங்களில் இயற்கை வழங்கி வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் புதுமைக் கவிஞர் பாரதி, குழந்தைக் கவிஞர் கவிமணி இவர்களால் வளர்ந்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் நிலைபெற்று இன்றைய புலவர்களால் மேன்மேலும் பரவி வருகின்றது.

சங்க இலக்கியத்தில் இயற்கை, பாடற் பின்னணியாக இடம் பெற்றதோடு உள்ளுமையாகாகவும், பயன்படுத்தப்பட்டது. உவமை வாயிலாகவும் இயற்கைப் பகுதிகள் பல கையாளப்பெற்றன. சங்க மரபிற்கே உரிய, இயற்கைப் பொருட்களை அமைத்துப் பேசும் பண்பு நிலையிலும் இயற்கை அங்குக் கையாளப்பட்டது. இம்முறைப்படிச் சிலம்பிலும் கையாளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ வடிகள் படைத்துள்ள "அந்திமாலைச் சிறப்பு செய்காதை" இயற்கை வருணனையின் உன்னத நிலையை உறுதிப்படுத்துகிறது. வளம் பாடுவதில் கம்பனுக்கு இணையாவோர் வேறு யாரும் இல்லையென்பர்.

"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந்தாங்கக்

கொண்டல்கள் முழவினேங்கக் குவளைக் கண் விழித்து நோக்கத்

தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்

வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"

இப்பாடல் கம்பனுக்கு இயற்கையின் மீதிருந்த ஈடுபாட்டை விளக்க வல்லதாக அமைந்துள்ளது.

இயற்கையோடு இயற்கையைத் தொடர்புபடுத்திப் பாடுதல் பக்திக் காலத்தில், நிலவிய ஒன்று. இயற்கை வழியாக இறைவனை வழிபடவும் செய்தனர். மாணிக்கவாசகர், இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் சக்தியும் சிவமும் நிறைந்து நிற்பதைக் கண்டார். ஆண்டாளது திருப்பாவைப் பாடல்களிலும் இயற்கை வர்ணனைக்குப் பஞ்சமேயில்லை.

பிற்காலத்தில் இயற்கையை வரிவடிவமாகப் புனைந்தளித்தவர்களில் பாரதியாரும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவந்த பாரதிதாசனும் அவர்களுக்கு ஈடுகொடுத்துப் பாடியுள்ளார். அவரது அழகின் சிரிப்பு, இயற்கைக் காட்சிகளுக்கே ஓர் இருப்பிடமாக விளங்குகின்றது.

என்றும் மாறாத அழியாத இயற்கையைப் படைக்கும் நிலையில் பல மாறுபாடுகள் அமைகின்றன. இக்காலத்தில் இயற்கையை, ஆங்கிலக் கவிஞர்களைப் போல், மறுமலர்ச்சிக் கவிஞர்கள் பாடல்களில் இயற்றித் தமிழன்னைக்கு நல்லணி பூட்டி வருகிறார்கள். இயற்கையைப் பாடுகின்ற தன்மை, காலத்திற்குக் காலம், இயற்கைவகை, பொருள் இவற்றிற்கு ஏற்றமுறையில் மாறுபட்டுக்கொண்டே செல்லுகிறது.

## உத்தரவு

பூவின் அழுகை
வியந்தது போதும்
ஒரு -
கோப்பை நீரைத்
தூருக்கு ஊற்று

ஓடும் நதியின்
சுழிப்பு அழகுதான்
உன்வீட்டு
குழாய்நீர் ஒழுகலை
உடனே நிறுத்து

பேசப் பேசப்
பெருகும் சமுத்திர
அலையின் நாதம்
செவிகளுக்கு இனிமைதான்
அலறும் உன் வீட்டுத்
தொலைக்காட்சி ஒடுக்கு
மலையின் உயரம்
அளக்கும் விழிகளில்
பசுமை துளிர்க்கும்
இனிமை குளுமைதான்
உன் பாலித்தீன் பயன்பாட்டைத்
தயங்காமல் நிறுத்து

மேனாட்டுச் சாலைகள்
மெச்சும் சுத்தம்தான்
இப்போது
காறிச் சாலையில்
துப்புவதை நிறுத்து

செயற்கை மழை குறித்த
சிந்தனை நல்லதுதான்
முதலில்
பெய்யும் மழையைச்
சேகரப்படுத்து.

ஓசோன் ஓட்டையைப்
பின்னர் அடைக்கலாம்
உன் வீட்டுக் குப்பையைத்

தொட்டியில் கொட்டு.

ஏ.சி ரூம் கட்டலாம்
ஏர்கூலர் வைக்கலாம்
இப்போது கிளையை
முறிப்பதை நிறுத்து

காசு கொடுத்தால்
எதையும் வாங்கலாம்
ரேஷன் கடையில்
காற்றும் கிடைக்கலாம்
பேசும் வாயை
இழுத்துச் சாத்து
சாக்கடை நீரின்
கொசுவைத் துரத்து

தண்ணீர் விற்றுத்
தங்கம் வாங்கலாம்
மண்ணை விற்று
விமானம் வாங்கலாம்
எல்லாம் ஒழித்துப் போனபின் நீ
செவ்வாய்க்குச் செல்வது கிடக்கட்டும்
உன்வாயில்
புகையும் கொள்ளியை
முதலில் நிறுத்து.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவையையும் அறிந்து சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. உழவர் பெருமக்களின் வாழ்வியலைப் பாடும் இலக்கியம்

அ) குற்றாலக் குறவஞ்சி ஆ) முக்கூடற்பள்ளு

இ) கலிங்கத்துப்பரணி ஈ) நந்திக்கலம்பகம்

2. நெய்தல் நிலமென்பது

அ) கடலும் கடல் சார்ந்ததும் ஆ) வயலும் வயல் சார்ந்ததும்

இ) மலையும் மலை சார்ந்ததும் ஈ) காடும் காடு சார்ந்ததும்

3. பொருத்துக

விழிப்பு - இரா. காமராசு

கூவம் - வாணிதாசன்

தாத்தா தொலைந்து போனார் - கோசின்ரா

எழிலோவியம் - சிவசங்கரி

4. அழகின் சிரிப்பு கவிதையின் ஆசிரியர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன்

### மூன்று மதிப்பெண்

5. இயற்கையின் அழகை வருணித்து வர்ணனைக் குறிப்பு எழுதுங்கள்.

6. " கடலிடை எழுந்த காலைக்

கதிரவன் கதிரின் வீச்சுப்

படுமிட மெல்லாம் பொன் ! பொன்!

பார் எழிலோவியத்தை ! கவிதை வரிகளை நயம் பாராட்டி எழுதுங்கள்.

7. விழிப்பு சிறுகதையின் மையக் கருத்தினை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

8 "தாத்தா தொலைந்து போனார்" சிறுகதையினை இன்றைய சூழலுடன் பொருத்தி விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.

9. ' வரும் முன் காப்போம்' என்ற தலைப்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தில் பேசிட சொற்பொழிவுக் குறிப்புகள் தயார் செய்யுங்கள்.

### எட்டு மதிப்பெண்

10. " இயற்கையை பாதுகாப்போம் " எனும் விழிப்புணர்வு முகாம் நடத்திட முன் திட்டமிடலை எவ்வாறெல் லாம் தயார் செய்வீர்கள்?

11. ' விழிப்பு ' என்ற சிறுகதை இயற்கைப் பாதுகாப்பை மையமாகக் கொண்டது. இம் மையக் கருத்தின் அடிப் படையில் சிறுகதை ஒன்றை எழுதுங்கள்.

# 2

# வேர்வைத்துளிகள்

## அலகு அறிமுகம்

தொழிலாளியின் தோள்களில் இருக்கிறது உலகம் என்றால் மிகையல்ல. நாட்டின் வளர்ச்சி உழைப்பவனாலே ஏற்படுகிறது. சோம்பலின்றிச் சுறுசுறுப்பாக இயங்கும் எண்ணம் கொண்டவர்கள் நிறைந்திருந்தால் வளமான நாடு உருவாகும். இயந்திரங்களின் பெருக்கம் மனிதபலத்திற்குப் பக்கபலமாக இருக்கிறது என்றாலும் பாரம்பரியமாக மனிதன் கைகளால், அறிவால், படைப்பாற்றலால் வியக்கவைத்துக் கொண்டிருந்த பல தொழில்களும் மறைந்து கொண்டிருக்கின்றன. தொழிலாளிகளின் நிலை தேக்கமடைந்தே காணப்படுகிறது. உலகமயமாதல், நவீனமயமாதலால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் நம்நாட்டு தொழிலாளிகளின் நிலை பலவீனமடைகிறது. இந்நிலை மாறவும் மனிதவளம் பெருகிப் பாரம்பரியத் தொழில்கள் பாதுகாக்கப்படவும், தொழிலாளிகள் நிலை உயரவும் வழி காண வேண்டும். தொழில்துறை சார்ந்த புரட்சிகள் உருவாக மாணவர்கள் விழைய வேண்டும்.

தொழிலால் இவ்வையகம் செழிக்கும் என்பதும், தொழிலாளிகள் மனம் மலர ஊதியம் கொடுத்தால் நாடு முன்னேறும் என்பதும் உண்மை. எந்தத் தொழிலையும் இழிவென எண்ணாமல், கைத்தொழில் செய்திடக் கல்வி தேவையில்லை என்று விலக்காமல் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுத் தொழில்களில் புதுமை படைக்க விளைய வேண்டும்.

இவ்வலகு 'இன்றுவரை', 'உயரப்பறக்க', 'மலரும் மனம்' என மூன்று பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் இன்றைய நிலையும், வருங்கால நிலையும் மாணவர்கள் உணரவும் தொழில்துறை முன்னேற்றத்திற்காகப் பாடுபடவும் வேண்டும். மண்பாண்டம் செய்தல், நெசவு, வீடுகட்டுதல் போன்ற தொழில்கள் இவ்வலகில் கட்டுரையாக, கவிதையாகப் பேசப்படுகிறது. தொழிலாளிகளுக்கு ஓய்வு கொடுத்தல், உழைப்பால் உயர்ந்திட என்பதும் இவ்வலகில் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

## கற்றல் அடைவுகள்

- ✦ மாறிவரும் தொழில்நுட்பங்களின் நிறை,குறைகளைக் கண்டறிந்து கருத்தரங்கக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.
- ✦ நவீனத் தொழில் நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீதும் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது குறித்துக் குறிப்புரை எழுதுகிறார்கள்.
- ✦ தொழில்கள் தொடர்பான விளம்பரங்கள், முத்திரை வாக்கியங்கள் எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி சுட்டிக்காட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.
- படைப்பிலக்கியங்கள் சுட்டும் பொருளை உணர்ந்து அதைப்போன்ற படைப்புகளை உருவாக்கின்றனர்.
- ✦ தொழிலாளர்கள் நிலை, உழைப்புச் சுரண்டல் பற்றிக் கட்டுரை எழுதுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்களும்

- ▲ படைப்பிலக்கியங்களில் தொழிலாளர்களின் நிலை சமூகச் சூழலுடன் ஒட்டி வெளிப்பகளை அறிதல்.
- ▲ தொழிலாளர் மேம்பாட்டினை இலக்கியங்கள் இன்றுவரை பேசுகின்றமையை அறிதல்.
- ▲ உழைப்பாளர்களின் மேம்பாடு உலகின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதென்பதை அறிதல்.
- ▲ தொழிலாளர்களை மதிக்கும் மனநிலையைப் பெறுதல்.
- ▲ தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனநிலையைப் பெறுதல்.
- ▲ மாற்றுத்திறனாளி மாணவர்களை மதிக்கும் மனநிலையைப் பெறுதல்.

**பார்வை நூல்கள்**

கவிஞர் வாணிதாசன் கவிதை, சமஸ்கட்டுரை, ஆலங்குடி கோமு கவிதை, அருண்பாரதி கவிதை, ஜெய் கட்டுரை, பேரறிஞர் அண்ணா – சிறுகதை. இ. கந்தசாமி கட்டுரை.

அலகுச்சட்டம் (வேர்வைத்துளிகள்) — அலகு 1

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| இலக்கியங்களில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. | **விமர்சனக் குறிப்பு எழுதுதல்**<br>என்று புவிகாணும் எனும் கவிஞர் சாமி பழனியப்பனின் கவிதை வரிகளை வாசித்துத் தொழிலாளி நிலையைக் குறித்துக் கலந்துரையாடி விமர்சனக் குறிப்பு எழுதுங்கள். | கவிதைகளில் வெளிப்படும் சமூகநிலை குறித்து விவாதித்து விமர்சனக் கட்டுரை எழுதுகின்றனர். |
| | **விவாதக்குறிப்பு எழுதுதல்**<br>அன்றிலிருந்து இன்றுவரை தொழிலாளிகளின் நிலை மாற்றமில்லாமல் இருக்கிறது என்பதை ஆசிரியர் மாணவர்களுடன் விவாதிக்க வேண்டும்.<br>**பட்டியலிடுதல்**<br>பல்வேறு கைத்தொழில்களைப் பட்டியலிடுதல். தமது பகுதியில் உள்ளதும், கேள்விப்பட்டதும் (குழுச் செயல்பாடு) நெசவுத்தொழிலுடன் தொடர்புடையதுமான சொற்களைப் பட்டியலிடுதல்.<br>**பட்டிமன்றம் நடத்துதல்**<br>தொழில்நுட்பங்களால் தொழிலாளிகளின் நிலை வளர்ச்சி பெற்றதா / வீழ்ச்சி அடைகிறதா என்ற தலைப்பில், குழுப் பிரித்துப் பட்டிமன்றம் நடத்தச் சொல்லுதல், நீவாடுகளுடன் ஒரு ஆட்டம் பாடத் தொடர்புடன் ஆசிரியர் உதவுதல். | பல்வேறு தொழில்கள் தொழிலாளிகளின் நிலை குறித்து பட்டிமன்றம் குறிப்புகள் எழுதி விவாதிக்கின்றனர். |
| | **கவிதை எழுதுதல் / கதை எழுதுதல் / நாடகம் எழுதுதல்**<br>மண்பாண்டம் செய்தலில் இன்றைய நிலை குறித்த ஈமக்கலையம் என்ற கவிதை வாசித்து அதைப் போன்ற தொழில் தொடர்புடைய கவிதை, கதை எழுதிடச் செய்தல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>தலைப்பு, கருத்துத் தொடர்பு, மொழிநடை, கற்பனை | படைப்பிலக்கியங்கள் சுட்டும் பொருளை உணர்ந்து அதைப் போன்ற படைப்புகளை உருவாக்குகிறார்கள். |
| | **கட்டுரை எழுதுதல்**<br>நெசவுத் தொழில், ரெடிமேட் வீடுகள் போன்ற கட்டுரையை ஆசிரியரும் மாணவரும் விவாதித்துத் தொழில் நுட்பத்தின் நன்மை தீமைகளைக் குறித்துக் கட்டுரை எழுதிடச் செய்தல். | நவீனத் தொழில்நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தியுள்ளது என்பது குறித்துக் குறிப்புரை எழுதுகிறார்கள். |

<table>
<tr><th>கருத்துகள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr><td></td><td>
மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>
- கருத்து<br>
- மொழிநடை<br>
- சான்றுகள்<br>
- தலைப்பு<br>
நாடகம் எழுதுதல்<br>
தொழிலாளி, தொழில் தொடர்புடைய நாடகம் ஒன்றை எழுதிடச் செய்தல். குழுச் செயல்பாடு.<br>
தலையங்கம் எழுதுதல்<br>
தொழிலாளர்களின் நிலையும், பரிகார வழிகளையும் விளக்கும் தலையங்கம் ஒன்றை எழுதிடச் செய்தல்.<br>
ஆசிரியர் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துத் தொடர்புபடுத்தி எழுதிடச் செய்ய வேண்டும்.<br>
மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>
1. கருத்துத் தொடர்பு<br>
2. தலைப்பு (சமகாலம்)<br>
3. காரணத் தொடர்பு<br>
4. வழிமுறை<br>
5. நேர்நோக்கு<br>
கருத்தரங்கக் கட்டுரை எழுதுதல்<br>
உழைப்போம் உயர்வோம் என்ற இலக்கியக் கட்டுரையை வாசித்தும் முன் செயல்பாடுகளின் வழியும் தொழிலாளர்கள் நிலை, உழைப்புச் சுரண்டல் போன்றவை குறித்து கருத்தரங்கக் கட்டுரை எழுதிடச் செய்தல்.
</td><td>
மாறிவரும் தொழில் நுட்பங்களின் நிறை, குறைகளைக் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.<br><br>
பாடப்பகுதிகள் சுட்டும் பிரச்சினைகளை உட்கொண்டு தலையங்கம் எழுதுகிறார்கள்.<br><br>
தொழிலாளர்நிலை உழைப்புச் சுரண்டல் போன்றவற்றைக் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.
</td></tr>
</table>

## அலகுப் பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

மண்பாண்டம் செய்வது போன்ற ஓவியம் ஒன்று பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. அதை மாணவர்களிடம் காட்டிக் கலந்துரையாடல் துவங்கலாம். கைத்தொழில்கள் பற்றியும் இன்றையத் தொழில் துறையின் வளர்ச்சி பற்றியும் விவாதித்து அலகுக்குள் நுழையலாம்.

### விமர்சனக் குறிப்பு எழுதுதல்

படைப்பிலக்கியங்களில் சமூகப் பிரச்சினைகள் படைப்பாளர்களால் எல்லாக் காலக்கட்டத்திலும் பேசப்படுகின்றன. அவ்வகையில் கவிஞர் சாமி பழனியப்பன் 1947ஆம் ஆண்டு எழுதிய தொழிலாளர் நிலை குறித்த கவிதை இன்றளவும் தொழிலாளர் நிலையினைச் சுட்டிக் காட்டுவதை நாம் உணர வேண்டும். பல ஆண்டுகள் போனாலும் தொழிலாளர் நிலையில் மாற்றமில்லை என்பது 'என்று புவிகாணும்' என்ற கவிதையுடன் தொடர்புபடுத்தி விமர்சனக் குறிப்பு எழுதச் செய்ய வேண்டும்.

### விவாதக் குறிப்பு எழுதுதல்

விவாதக் குறிப்பு என்பது கலந்துரையாடலில் பலரும் விவாதத்திற்காக எடுத்துரைக்கும் கருத்துக்களைத் தொகுத்துக் கொள்வதே... விமர்சனக் குறிப்பு தன் கருத்தை ஏற்றிச் சொல்லும் போது விவாதக்குறிப்பு பிறர் கருத்தையும் ஏற்றுச் சொல்லுதலே.

**துணைக்கருவிகள்**

- 'என்று புவிகாணும்' பாடல்
- பல்வேறு தொழில்களின் படத்தொகுப்பு
- வளப்பகுதியில் தொழில்கள் பற்றிய குறிப்புகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கவிதைகளில் வெளிப்படும் சமூக நிலை குறித்துச் சமூக அவலங்களை உணர்ந்து தீர்வுகளை விவாதித்து விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள். | ✦ கவிதைகளை ரசிப்பதோடு சுட்டிக்காட்டும் அவலங்களை விமர்சிக்கின்றனர். |

### பட்டிமன்றம் நடத்துதல்

ஈமக்கலயம், நெசவுத்தொழில் போன்ற பாடப்பகுதிகளையும், நீ வாடுகளுடன் ஒரு ஆட்டம் கட்டுரையையும் வாசித்து அத்துடன் முன்னர் செய்துள்ள செயல்பாடுகளின் அனுபவத்தாலும் தொழில்நுட்பங்களால் தொழிலாளிகளின் நிலை வளர்ச்சி பெற்றதா / வீழ்ச்சி அடைகிறதா என்ற தலைப்பில் குழு பிரித்து பட்டிமன்றம் நடத்துதல். அணி பிரித்து முதலில் குறிப்புகளை எடுத்திடச் செய்து பின்னர் பட்டிமன்றம் நடத்திடச் செய்ய வேண்டும்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பல்வேறு தொழில்கள் தொழிலாளிகளின் நிலை குறித்துப் பட்டிமன்றம் நடத்துகின்றனர். | ✦ தொழிலாளர்களின் இன்றைய நிலைக்குக் காரணம் கண்டு மேம்பாட்டிற்கு உதவும் மனநிலை. |

## கதை / கவிதை எழுதுதல்

என்ற கவிஞர் அருண்பாரதியின் புதுக்கவிதை மண்பாண்டத் தொழில்துறை வீழ்ச்சி அடைந்ததையும் பிளாஸ்டிக் பாத்திரங்கள் விற்பனை ஈமக்கலயம் ஆவதையும் குறிப்பிடுகிறது. மேலும் இவ்வலகில் அமைந்துள்ள தொழிலாளர்கள் நிலையை விமர்ச்சிக்கும் படைப்பிலக்கியங்களைப் போன்று தாமும் புதியன படைத்திட ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**கவனிக்க....**

- படைப்புகளின் கருவுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- ஏதேனும் ஒரு படைப்பை மாணவரின் விருப்பத்திற்கேற்பப் படைக்கச் செய்ய வேண்டும்.
- தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பாடப்பகுதியில் அமைந்துள்ள அனைத்தும்
- வளப்பகுதியில் அமைந்துள்ள மாதிரிகள்
- கதை, கவிதை - தொழில் / தொழிலாளர் சார்ந்தவை

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ படைப்பிலக்கியங்கள் சுட்டும் பொருளை அளித்து அதைப் போன்ற படைப்புகளைப் படைக்கின்றனர். | ✦ புதியன படைக்க ஆர்வம் கொடுக்கின்றனர். |

## கட்டுரை எழுதுதல்

நெசவுத் தொழில், ரெடிமேட் வீடுகள் இவை இரண்டு கட்டுரைகளும், கைத்தொழில்களைக் குறிப்பவை. தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று ஏற்பட்டுள்ள தொழிலாளர் பின்னோக்கத்தையும் தொய்வையும் விளக்குபவை. இவற்றை விவாதித்துத் தொழில்நுட்பத்தின் நன்மை / தீமை விளக்கும் கட்டுரை ஒன்றை எழுதிடச் செய்யலாம்.

**கவனிக்க....**

- அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரி எழுதிட இயலாது.
- பின்னோக்க மாணவர்களைக் குறிப்புகளாகப் பட்டியலிடச் செய்யலாம்.

**துணைக்கருவிகள்**

- பாடப்பகுதிக் கட்டுரை
- தொழிற்புரட்சி தொடர்பான கண்ணொளிக் காட்சிகள்
- வளப்பகுதி

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நவீன தொழில்நுட்பம் நமது பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தியுள்ளதைக் கட்டுரையாக எழுதுகின்றனர். | ✦ தொழில்நுட்ப வளர்ச்சியின் மீது நேர்நோக்கில் வரவேற்கின்றன. |

### நாடகம் எழுதுதல்

எப்போதுமே நாடகம் எழுதுதல், வகுப்பில் அரங்கில் நடித்தல் என்பதைத் திட்டமிட்டுச் செயலாற்றினால் கற்றல் அடைவுகளை அடையச் செய்யும் செயலை எளிதாக்கும். எனவே தொழில் சார்ந்த இன்றைய நிலை உணர்த்தும் நாடகம், நடத்திட / மாணவர்களை உற்சாகப்படுத்திக் குழுச் செயல்பாடாகத் தொடர் மதிப்பீடாக மதிப்பிடலாம்.

**கவனிக்க....**

- சிறு நாடகமோ, ஓரங்க காட்சியோ வகுப்பில் நடத்தலாம்.
- ஆர்வமுள்ளவர்களை நடிக்கவைத்துத் தனிமதிப்பீடு அளிக்கலாம்.

**துணைக்கருவிகள்**

◗ குறுந்தகடுகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தொழில்கள் தொடர்பான விளம்பரங்கள், முத்திரை வாக்கியங்கள் படைப்புகளில் பயன்படுத்துகின்றனர். | ✦ தொழிலாளர் நிலையினை உள் வாங்கி வெளிப்படுத்த ஆர்வம் கொள்கின்றனர். |

◗ கதைகள் / நாடகங்கள்

### தலையங்கம் எழுதுதல்

சமூகப் பிரச்சினையைக் கண்டறிவதும், காரணங்களை ஆராய்வதும், அதற்கு வழிமுறை கூறுவதுமாக அமைவதே தலையங்கம், இது பத்திரிகைகளில் ஆசிரியரின் உரையாக அமைந்திருக்கும். பொதுவாக தலையங்கம் பிரச்சினையை முழுமையாக உள்வாங்கியும், தொடர்புடைய பலவற்றை ஆராய்ந்துமே எழுதப்பட வேண்டும். எந்த ஒரு சார்பின்மையும் இன்றி சமூக அக்கறையை மட்டும் மனதுக்குள் கொண்டே எழுதிடச் செய்ய வேண்டும்.

தலையங்கம் படிகள்

- பிரச்சினையைத் தேர்ந்தெடுத்தல் (தலைப்பு)
- காரணத்திற்கான தகவல் திரட்டுதல்
- ஆராய்ந்து எழுதுதல்
- சமூக அக்கறையுடன் வழிமுறைகள் / அறிவுரைகளை எழுத்தின் மூலம் வழங்குதல்.
- சுருக்கமாகத் தெளிவாகச் சமகால பிரச்சினையை எடுத்துரைத்தல்.

**துணைக்கருவிகள்**

◗ வளப்பகுதி

◗ பத்திரிகைத் தலையங்க மாதிரிகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பாடப்பகுதி சுட்டும் பிரச்சினையை உட்கொண்டு தலையங்கம் எழுதுகின்றனர். | ✦ பிரச்சினைகளைச் சமூக அக்கறையுடன் அணுகுகின்றனர். |

# வளப்பகுதி

## உழைப்பே உயர்வின் உரம்

இனிய நண்பருக்கு,

'உழைப்பவன் சாதிக்கிறான்' உழைக்காதவன் போதிக்கிறான்' என்றார் மேதை பெர்னாட்ஷா.

உலகம் எனும் ஓட்டப் பந்தய மைதானத்தில், உழைப்பு எனும் கனவேகக் குதிரைமேல் ஏறி, எவன் விரைந்து பயணம் செய்கிறானோ அவன்தான் வெற்றிக் கோட்டையை எட்டிப் பிடிக்கிறான்.

மாக்கவிஞன் பாரதி தன் 'புதிய ஆத்திசூடி'யின், 'ஓய்தல் ஒழி' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். தளர்ச்சி ஒழிந்தால்தான் வளர்ச்சி ஓங்கும் என்கிறான். அந்தப் பாவலர்க்கரசன்.

வட தென் துருவங்களில் வாழும் 'டெர்ன்' எனும் ஒருவகைப் பறவைகள், ஒரு துருவப் பகுதியின் கோடை முடிந்து பனி மூடியதும், மறு துருவம் நோக்கி வானில் பறந்து கொண்டே இருக்குமாம். ஓர் ஆண்டில் ஒவ்வொரு துருவத்திலும் இரண்டு மாதங்களே தங்கும் அவை, தம் வாழ்நாளில் ஆண்டுக்கு எட்டு மாதங்கள் வானவெளியில் ஊண் உறக்கமின்றி, ஓயாமல் பறந்துகொண்டே இருக்கும் என்றால், ஆறறிவு பெற்ற மனிதன் மட்டும் ஓய்ந்து உறங்கிப்போய் வறுமையில் வாடுகிறானே, ஏன்?

ஒரு வேடிக்கையான பஞ்சாப் கதை உண்டு. அமர்சிங் என்கிற விவசாயிக்கு மூன்று ஏக்கர் நிலம் இருந்தது. அவன் கடுமையான உழைப்பாளியாக இருந்தாலும், அவனுக்குப் பிறந்த மூன்று மைந்தர்களும் மகாசோம் பேறிகளாக, வேளாண்மையைக் கவனிக்காமல் வெளியே சுற்றி வந்தனர். அவர்களை வயல் வேலைக்குக் கொண்டு வர, அவன் எவ்வளவோ முயன்றும் கடைசிவரை இயலாமற் போய்விட்டது. உழைத்த அவன் உடல் ஒரு நாள் ஓய்ந்து போனது. தன் மரணப் படுக்கையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவன் தன் பிள்ளைகளை அருகே அழைத்துப் பேசினான்:

"ஒரு இரகசியம் சொல்கிறேன். நான் இதுவரை சம்பாதித்த ஒரு இலட்சம் தொகையை வெள்ளிக் காசுகளாகச் சேமித்தேன். வீட்டில் வைத்தால் எங்கே திருடர்கள் கொண்டுபோய் விடுவார்களோ என்று பயந்து போய், நம் வயலில் அங்கும் இங்கும் பிரித்துப் புதைத்து விட்டேன். எப்படியும் அந்தப் பணம், நம் குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்தடியில்தான் உள்ளது. என் மரணத்திற்குப் பிறகு, நீங்கள் நம் கழனியை உழுதால் அவை உங்களுக்குக் கட்டாயம் கிடைக்கும்!" இப்படிக் கூறிவிட்டு உயிர்விட்டான் அவன்.

மூன்று மகன்களும் தந்தையின் அடக்கம் முடிந்த கையோடு, எப்படியும் வெள்ளிக்காசுகளைத் தேடிக் கண்டு பிடிக்க வயலுக்குப் படையெடுத்தார்கள்; மண்வெட்டியால் வெட்டினார்கள்; கலப்பையால் உழுதார்கள். ஆனால் காசுகள் மட்டும் தென்படவில்லை.

பருவமழை வந்தது. 'உழுதது உழுதுவிட்டோம்; விதையும் தெளிப்போமே' என்று அவர்கள் விதைகளைத் தூவி, விவசாயம் செய்யத் தலைப்பட்டார்கள். ஒவ்வொரு ஏக்கரிலும் பல ஆயிரம் ரூபாய் அறுவடை கிடைத்தது.

பாவம், உண்மையில் ஒரு வெள்ளிக்காசும் புதைக்காமலேயே, அமர்சிங் தன் பிள்ளைகளை வயல் வேலையில் ஈடுபடுத்துவதற்குச் சொன்ன பொய் மட்டும் கடைசி வரையில் அவர்களுக்குத் தெரியாமற் போய் விட்டது!

'கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்

பெருமையின் பீடுடையது இல்'

என்று நம் நெஞ்சில் பதியமிடுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

'கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல, மேம்பாடானது வேறொன்றுமே இல்லை' என்று தடம் அமைத்துத் தருகிறார் அப்பெருமான்.

மாதம் ஐம்பது ரூபாய்ச் சம்பளமே பெற்று வந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஓர் இளைஞர்தான் எம். எஸ். ஒபராய். இன்று உலகம் முழுதும் அவர் பெயரில் கோடிக்கணக்கான சொத்துடைய 'ஒபராய் ஒட்டல்கள்' வளர்ந்தோங்கி நிற்கின்றன. இந்த அதிசயம் நிகழ்ந்தது எப்படி?

ஓயாத உழைப்பும், சாயாத வேட்கையும், தளராத செயல்திட்டமும் அவரை இந்த உயரத்திற்குக் கொண்டுவந்தன. 103 வயதுவரை வாழ்ந்து நிறைவோடு மடிந்த அவர் சாகும்போது, இப்படிக் குறிப்பிட்டார்.

'நான் தேனீபோல் சுறுசுறுப்பாக உழைத்ததுதான் என் ஆயுள் நீட்டிப்புக்கும் காரணம்; அயராத பேருழைப்பே ஆயுளைப் பெருக்குகிறது!'

மண்ணின் மீது வாழும் உயிர்களில், எண்ணிப் பார்த்தால் மிகச் சிறியது எறும்பு.

அந்த எறும்பைப் பற்றி அறிஞர் பெஞ்சமின் பிராங்க்ளின் என்ன கூறினார் தெரியுமா?

'நமக்கு வாய்ந்த ஆசிரியர்களில் பெரும் பேராசிரியர் யார் என்று கேட்டால், நான் எறும்பைத்தான் காட்டுவேன்!'

இவருடைய கூற்று மிகையானதா?

சிறிய எறும்புதான் தன் எடையைக் காட்டிலும் மூன்று மடங்கு எடைகொண்ட பொருளையும் தூக்கிச் செல்கிறது. வரப்போகும் மழைக்காலத்தை முன்கூட்டியே அறிந்துகொண்டு, சுறுசுறுப்புடன் உரிய உணவுப் பொருள்களைக் காலத்தோடு சேமித்து வைத்து நிறைவாக வாழ்கிறது.

ஆனால், எறும்பின் உருவத்தை ஏளனம் செய்யும் ஆறடி உயர மனிதன் வறுமையால் மடிகிறானே, அது ஏன்?

ஒரு பிடி களிமண்ணைக் குழைத்து, தன் சக்கரத்தின் நடுவே வைத்து, ஒரு கம்பால் நான்கு சுற்று சுற்றுகிறான் குயவன்; அந்தக் களிமண் அழகழகான அவதார உருவங்களை எடுக்கிறது. ஆனால் பூமித்தாய், இந்தப் பாழும் மனிதனை தன் மடியில் வைத்து நாள்தோறும் சுழற்றும்போதும், அவன் மட்டும் அப்படியே களி மண்ணாகவே இருக்கிறானே, இது சரிதானா?

இதைத்தான், 'பாட்டுக்கோட்டை'யாய் விளங்கிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் இப்படி நையாண்டியுடன் நளினமாகப் பாடினார்:

'நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கழித்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தாமும் கெட்டார்; சிலர்
அல்லும் பகலும் வெறும் கல்லாயிருந்து விட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக்கொண்டார்!'

இன்னும் நம் நாட்டில் சோதிடங்களும், பஞ்சாங்கங்களும், மனிதர்களைச் சோம்பேறிகளாக்கிப் பாழடித்து வருகின்றன. அதிர்ஷ்டம் என்பது தனியே ஒரு நாள் எதிரே வந்து நின்று, அளவிலாப் பொற்காசுகளைக் கொண்டு வந்து கொட்டப்போகிறது என்ற வீண் மாயையை இவை ஏற்படுத்துவதால்தான். இந்தப் பீடைகளை அறவே ஒழிக்க வேண்டும் என்றார் தந்தை பெரியார்.

உழைப்பின் மேன்மையைத் தெளிவாக உணர்ந்தவர்களே வரலாற்றில் உயர்ந்தோங்கி நிற்கிறார்கள்.

ஒவ்வொருநாளும் பதினெட்டு மணி நேரம் உழைத்த நேருபிரான், தன் மேசையின் மேல் எழுதிவைத்த ராபர்ட் ஃபிராஸ்டின் இந்தக் கவிதை வரிகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன:

'எழிலும் பசுமையும் நிறைந்த சோலையில் இளைப்பாற எண்ணம் உண்டுதான்; ஆனால் என் உறுதிமொழிகளைக் காப்பாற்ற நான் ஒய்வெடுக்கும் முன்னர், காதம் பல கடக்க வேண்டும்; காதம் பல கடக்க வேண்டும்' என்ற இந்த மகத்தான வைர வரிகள்தான் அவருடைய சாதனைச் சரித்திரத்தின் படிக்கட்டுகளாக அமைந்தன.

இதைத்தான் பாஸ்கல் எனும் அறிஞர் இப்படி நயம்படிக் கூறினார்:

'திறமை எனும் தாயும் உழைப்பெனும் தந்தையும் பெற்றெடுத்த அழகுக் குழந்தையின் பெயர்தான் புகழ்!'

'இலமென்று அசைகு இருப்பா'ராக இந்த நிலத்தில் இருத்தல் எவ்வளவு கேடு என்பதை ஒரு மேலை நாட்டு அறிஞன் அழகுபடக் குறிப்பிட்டான்:

'கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவளிக்கிறான் என்பது உண்மைதான். ஆனால் அந்த உணவை அதன் கூட்டில் கொண்டுபோய் வைப்பதில்லை என்பதுதான் அதைவிடப் பேருண்மை!'

இதைக் காட்டிலும் மனிதனுக்கு வேறு எந்தவகையில் சூடு வைக்க முடியும்?

கவியரசர் கண்ணதாசன் உள்ளத்தில் தைக்கும் வண்ணம் இப்படிக் கூறினார் : 'தேங்கி நிற்கும் இடத்தில் தான் தீமை விளைவிக்கும் கொசுக்கள் உற்பத்தியாகும்; சோம்பி நிற்கும் வாழ்வில்தான் வறுமையும் துயரமும் பெருக்கெடுக்கும்!'

ஆக வாழ்க்கையின் மொத்தக் கணக்கும் இதுதான்:

சோம்பலைக் கழிக்க வேண்டும்!

சுறுசுறுப்பைக் கூட்ட வேண்டும்!

உழைப்பைப் பெருக்க வேண்டும்!

உயர்வாழ்வை வகுக்க வேண்டும்!

இந்தக் கணக்கில் வெற்றி பெற்றால்தான், நம் வாழ்வுப் பரீட்சையிலும் வென்று, கம்பீரமாக வெற்றி முகட்டை எட்ட முடியும்.

அன்புள்ள,

வேந்தன்

## பனை மரத்தில் விரைவாக ஏற உதவும் புதிய உபகரணம் கண்டுபிடிப்பு

பனை மரத்திலோ அல்லது தென்னை மரத்திலோ ஏறி அதில் உள்ள காய்களைப் பறிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஒருசிலர் மட்டும் கயிற்றின் உதவி கொண்டு மேலே ஏறிக் காய்களைப் பறிப்பதை நாம் கிராமங்களில் பார்த்து இருக்கிறோம்.

ஆனால் யார் வேண்டுமானாலும் பனை அல்லது தென்னை மரத்தில் ஏறக்கூடிய வகையில் ஒரு புதிய வகை உபகரணம் ஒன்றைச் செய்து அசத்தியுள்ளார் பிரேசில் நாட்டை சேர்ந்த ஒருவர்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒருவர், மிகவும் பாதுகாப்பாகவும், அதே நேரத்தில் விரைவாகவும் பனை மரத்தில் ஏறுவதற்கு ஒரு உபகரணத்தைக் கண்டுபிடித்துள்ளார் இதன் உதவிகொண்டு இரண்டே நிமிடத்தில் எவ்வளவு உயரமான தென்னை மரத்திலும் ஏறிவிடலாம். இந்த உபகரணத்தை அவர் பலரது முன்னிலும் டெமோ செய்து காட்டியபோது மிகவும் அதிசயமாக அவருடைய உபகரணம் மரம் ஏறுவதற்கு உதவியாய் இருப்பதைப் பார்த்தனர்.

மிகவும் எளிய வகையில் மிகக் குறைந்த விலையில் இவர் உருவாக்கியுள்ள உபகரணத்திற்கு இவர் காப்பிரைட்டும் வாங்கி வைத்துள்ளார். விரைவில் இந்த உபகரணத்தை மிகப் பெரிய அளவில் செய்து, விற் பனை செய்ய உள்ளதாக இந்த வில்லேஜ் விஞ்ஞானி கூறியுள்ளார்.

இதன் உதவிகொண்டு பிரேசிலில் நடைபெறும் உலகக்கோப்பை கால்பந்து போட்டியை, போட்டி நடை பெறும் மைதானத்திற்கு அருகில் இருக்கும் மரத்தில் ஏறி, செலவு இல்லாமல் பார்த்து ரசிப்பேன் என்று இவர் கிண்டலாகக் கூறியது அனைவரையும் கவர்ந்தது.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**நவீனத் தொழில்நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தியுள்ளது.**

### ஒரு மதிப்பெண்

1. மாம்பழக் கவிச்சிங்கம்- என்ற கவிதை நூலின் ஆசிரியர்

அ) கவிஞர் சாமி பழனியப்பன் ஆ)கண்ணதாசன்
இ) வாணிதாசன் ஈ) பாரதியார்

2. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன்

அ) தொழிலாளி ஆ) படிப்பாளி
இ) முதலாளி ஈ) படைப்பாளி

பொருத்துக

அ) ஈமக்கலயம்- அறிஞர் அண்ணா
ஆ) படைப்பாளி- இராஜம் கிருஷ்ணா
இ) ஓய்வு- அருண் பாரதி
ஈ) கரிப்பு மணிகள்- ஆலங்குடி சோமு

4. ‘ வேலைக்காரி’ எனும் நாடகநூலின் ஆசிரியர்

அ) கண்ணதாசன் ஆ) அறிஞர் அண்ணா
இ) கலைஞர் கருணாநிதி ஈ) பாரதிதாசன்

### மூன்று மதிப்பெண்

5. தொழில் துறையில் மாற்றம் செய்யும் தொழில்நுட்பம் என்பதைக் குறித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
6. தொழில்நுட்ப வளர்ச்சி மனித பலத்தைக் குறைக்கிறது கூட்டுகிறது. பட்டிமன்றத்தில் பேசிட ஏதேனும் தலைப்பில் விவாதக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
7. உழைப்பவனுக்கு ஓய்வு தேவை- ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கி மனம் மகிழ சில வழிமுறைகளைப் பட்டியலிடுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

8. மே தினம் உழைப்பாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. உழைப்பால் உயர்ந்தவர்களைப் பாராட்டும் விதமாக நீ வாடுகளுடன் ஒரு ஆட்டம் பாடப்பகுதியில் வரும் தோமையரைப் பாராட்டிட ஒரு உரை தயார் செய்யுங்கள்.
9. ரெடிமேட் வீடுகள்- இன்றைய நவீனத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி. நீ பார்க்கும் வருங்கால உலகம். தொலைநோக்குப் பார்வையுடன் கட்டுரை ஒன்றைத் தயார் செய்யுங்கள்

### எட்டு மதிப்பெண்

10. பரம்பரைத் தொழில்கள் இன்று அழிந்து போகின்றன. உங்கள் வட்டாரப் பகுதியில் உள்ள தொழில்களில் நவீன தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.
11. இலக்கியங்களில் தொழிலாளி- பாடப்பகுதியின் சான்றுகளுடன் தொகுப்புச் செய்தி எழுதுங்கள்.

3

# மனிதகுல மேம்பாடு

## அலகு அறிமுகம்

இன்றைய காலச்சூழலில் மனிதம், மனிதநேயம், மானுடம், ஒற்றுமை, சமதர்மம், உலக ஒருமைப்பாடு, சமாதானம் என்ற சொற்களையெல்லாம் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைய சமூகம் தள்ளப்பட்டுள்ளது. நம் நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சிந்தனையை ஏற்படுத்த எத்தனையோ சான்றோர்களும் அறிஞர்களும் தங்களின் செயல்கள் மற்றும் படைப்புகள் மூலமாகத் தங்களின் மேலான கருத்துகளைப் பதிவுசெய்துள்ளனர். இன்று மனிதகுலம் வெளிநாடு மற்றும் உள் ளநாட்டிலிருந்து மட்டுமல்லாமல், உள்ளூரிலும் பல்வேறு வழிகளில் பலதரப்பட்ட பிரச்சினைகளைச் சந்தித்து வருவது நாம் அனைவரும் அறிந்ததொன்றே. நம் முன்னோர்கள் போற்றி வளர்த்த வேற்று மையில் ஒற்றுமை காண்பது என்ற உயரிய சிந்தனையை இன்றைய மனித மனங்களில் வளர்ப்பதென் பது மிகப்பெரிய சவாலாக இருந்துவருகின்றது. இச்சவாலைச் சமாளிக்கும் மனப்பக்குவத்தை வருங் காலத் தூண்களாகிய மாணவர்களிடம் வளர்த்து அவர்கள் மனதில் பசுமரத்தாணிபோலப் பதியச் செய்வதுடன், அவர்களை மனித நேய மாண்பாளர்களாக வார்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கில், அன்பின் விதைகள், சமதர்மமச் சிந்தனை, யாவருங்கேளிர் என்ற கருத்தலகுகள் இவ்வலகில் இடம் பெற்றுள்ளன. மனிதகுலம் மேம்பாடடையச் செய்யும் விதத்தில் மாணவர்கள் மனதில் மாற்றத்தை உருவாக்கக் கருத்தலகுகள் பெருந்துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

## கற்றல் அடைவுகள்

- வாழ்க்கை விழுமியங்களைப் பாராட்டியும் மேம்படுத்தியும் எழுதுகிறார்கள்.
- மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.
- பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் மனிதநேயச் செய்திகளைச் சேகரிக்கிறார்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அறிகிறார்கள். குறிப்பு எழுதுகிறார்கள்.
- மனிதநேயம், ஒருமைப்பாடு என்பவற்றின் பொருளை அறிகிறார்கள். இவைகள் தொடர்பான பழமொழிகள் சொற்றொடர்களைத் தொகுக்கிறார்கள்.
- மனிதநேயம் தொடர்பான பத்திரிகை விளம்பரங்களைத் தொகுக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார்கள்.
- மனிதநேயம் குறித்து உரையாற்றுவதற்கான குறிப்பு தயாரிக்கிறார்கள், கட்டுரை எழுதுகிறார்கள்.
- மனிதகுல மேம்பாடு குறித்துக் கருத்தரங்கில் உரையாற்றச் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள்.
- மக்களாட்சி முறைகள் குறித்த கருத்துகளை ஒப்பிட்டு எழுதுகிறார்கள்.
- மனிதநேயப் பண்பாளருடன் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார்செய்கிறார்கள்.
- மனிதநேயம் குறித்துக் கவிதை, வரையும் படைப்புத் திறனைப் பெறுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்களும்

- நம் முன்னோர்கள் பின்பற்றிய வாழ்க்கை விழுமியங்களைத் தாமும் பின்பற்ற வேண்டும் என்று ஆர்வம்கொள்ளும் மனநிலை.
- எல்லா மனிதர்களிடத்தும் நேயம் காட்ட வேண்டும் என்ற மனநிலையைப் பெறுதல்.
- மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்த சான்றோர்கள் குறித்து அறியும் மனநிலையைப் பெறுதல்.
- பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் மனிதநேயச் செயல்களை அறிந்து அவற்றைத் தாமும் பின்பற்றும் மனநிலையைப் பெறுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை உய்த்துணரும் மனநிலையைப் பெறுதல்.
- தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனநிலையைப் பெறுதல்.
- அவரவர் திறமைக்கேற்பப் படைப்பாக்கம் செய்யும் மனநிலையைப் பெறுதல்.
- மாற்றுத் திறனாளி மாணவர்களை மதிக்கும் மனநிலையைப் பெறுதல்.

**பார்வை நூல்கள்**

விகடன் பிரசுர சிறுகதை, சிலப்பதிகாரம், புறநானூறு சிலப்பதிகாரம், மு.பி.பாலசுப்பிரமணியன் கட்டுரை, பாரதியார் இளம்பிறை மணிமாறன் கட்டுரை, கவிஞர் மு. மேத்தாகவிதை.

அலகுச்சட்டம் (வேர்வைத்துளிகள்) — அலகு 1

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| தனி மனித சமூக விழுமியங்களுள் முதன்மையானது மனிதநேயம், வேற்றுமையில் ஒருமைப்பாடு. | **தொகுத்து எழுதுகின்றனர்.**<br>மனிதநேயம் மற்றும் ஒருமைப்பாட்டை வளர்க்கும் பழமொழிகள், சொற்றொடர்கள் குறித்து மாணவர்களைத் திரட்டக்கூறுதல்.<br>**திரட்டித் தொகுத்தல்**<br>தொகுத்தவற்றைக் குறிந்துக் கலந்துரையாடல் நிகழ்த்துகிறார்கள். ஆசிரியரின் விளக்கங்களின் மூலம் மனிதநேயம், ஒருமைப்பாடு குறித்து மாணவர்கள் கூடுதல் கருத்துகளை அறிகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>எண்ணிக்கை, கருத்து, திரட்டுதல் திறன்<br>**கடிதம் எழுதுதல்**<br>மாணவர்களிடம் சக மாணவர்களுக்கோ, மற்றவர்களுக்கோ அவர்கள் செய்த சின்னஞ்சிறு உதவிகள் மற்றும் உதவி செய்த தருணங்களை வகுப்பில் கூறச் செய்ய வேண்டும். பின்பு 'அன்பின் விதைகள்' என்ற சிறுகதையை வகுப்பில் வாசிக்கிறார்கள். அக்கதை குறித்துக் கலந்துரையாடுகிறார்கள். ஆசிரியரும், தன்னால் இயன்ற உதவிகளைக் கைமாறு கருதாமல் பிறர்க்குச் செய்வதே மனிதநேயம் என்பதை உணர்த்த வேண்டும்.<br>ஆசிரியர் பத்திரிகையில் வரும் உதவிகோரும் விளம்பரங்களைத் தொகுக்கச் செய்தல், அவற்றிற்குத் தம்மால் இயன்றவாறு உதவிசெய்யும் நோக்கில் பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>தொகுத்தல், வடிம், கருத்து எழுதும் திறன்<br>**உரைக்குறிப்பு தயாரித்தல்**<br>மாணவர்களைக் குழுவாகப் பிரித்து அதன்பின் விதைகள் என்ற கதையை | மனிதநேயம், ஒருமைப்பாடு என்பவற்றின் பொருளை அறிகிறார்கள். அது தொடர்பான பழமொழிகள், சொற்றொடர்கள் தொகுக்கிறார்கள்.<br><br>மனிதநேயம் தொடர்பான பத்திரிகை விளம்பரங்களைத் தொகுக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார்கள்.<br><br>மனிதநேயம் குறித்து உரையாற்றுவதற்கான குறிப்பு தயாரிக்கும் திறன் பெறுகிறார்கள். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td>ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் வாழும் சின்னஞ்சிறு செயல்களும் மனித நேயத்தை வளக்கும்.<br><br>மனிதகுல மேம்பாடு அடைய மனிதநேயம் இன்றியமையாதது. நன்றியும் நேசமும் தான் அன்பின் வெளிப்பாடுகள்.<br><br>வாழ்க்கை விழுமியங்களுள் தலையாயது மனிதநேயப் பண்பே.</td>
<td>வாசிக்கச் செய்தும், விவாதித்தும் உரையாற்றுவதற்கான உரைக்குறிப்பு தயாரிக்கிறார்கள். ஒவ்வொருவரும் வாழிவில், தம்மால் இயன்றதை இல்லாதவர்களுக்குச் செய்து உதவும் மனநிலையை உடையவர்களாகவும், நன்றியணர்வு உடையவர்களாகவும் திகழ வேண்டும் என்று ஆசிரியரும் தம் கருத்தைப் பதிவு செய்கிறார். பாடப்பகுதியோடு இணைந்துவரும் புறநானூறுப் பாடலின் விளக்கத்தையும் வளப்பகுதியில் 'மறைந்து வரும் மனிதநேயம்' என்ற கவிதையின் விளக்கத்தையம் ஆசிரியர் மேலும் விவரித்துக் கூறலாம்.<br><br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br><br>தகவல் திரட்டிய முறை, கருத்துத்தெளிவு, உரைக் குறிப்பின் தன்மை, கருத்துக்கோர்வை, மொழிநடை<br><br>கட்டுரை தயார்செய்தல்<br><br>மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து சிலப்பதிகாரம் அடைக்கலக் காதையில் எடுத்தாளப்பட்டுள்ள பாடப்பகுதியை ஆசிரியர் வாசித்துப் பொருளையும் உணர்த்துகிறார். மாணவர்கள் கலந்துரையாடுகிறார்கள். மாணவர்களைக் கோவலனின் பிறர்துயர் போக்கும் மனிதநேயப் பண்பினை உணர்த்தும் வண்ணம் குறிப்புகள் தயாரிக்கச் சொல்லலாம். அக்குறிப்புகளின் அடிப்படையில், மனிதநேயப் பண்பாளன் கோவலன் என்ற தலைப்பில் கட்டுரை எழுதச் செய்ய வேண்டும்.<br><br>ஆசிரியர் இதனை மதிப்பீடு செய்வதுடன் வளப்பகுதியில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்களில் இடம் பெற்றுள்ள மனிதநேயக் கருத்துகள் குறித்து ரீத்தா ச.முத்துவின் கட்டுரை குறித்தும் மாணவர்களிடம் விளக்கிக் கூறலாம்.<br><br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br><br>வடிவம், கருத்துத்தெளிவு, கருத்துக்கோவை, மொழிநடை<br><br>சொற்பொழிவு உரைதயார் செய்தல்<br><br>மாணவர்களை அவர்கள் அறிந்த ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கருத்துகள் மற்றும் சொற்றொடர்களைக் குறிப்பேட்டில் குறிக்கச் செய்ய வேண்டும்.</td>
<td>மனிதநேயம் குறித்துக் கட்டுரை எழுதும் திறன் பெறுகிறார்கள்.<br><br>மனிதகுல மேம்பாடு குறித்துக் கருத்தரங்கில் உரையாற்றச் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள்.</td>
</tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| மனிதகுல மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் மனிதநேயம் மற்றும் ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளைப் பாடுபொருளாகக் கொண்டும் இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன.<br><br>உயிர்களிடத்தில்(உயர்திணை / அஃறிணை) காட்டும் உயிர் இரக்கமே மனிதநேயம் | அவற்றை வகுப்பில் கூறச்செய்து, ஆசிரியரும் தம் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலாம், பின்பு சிந்தனை ஒன்றுடையாள் என்ற மு.பி.பாலசுப்பிரமணியனின் கட்டுரையை வகுப்பில் வாசிக்கச் செய்ய வேண்டும்.<br><br>மாணவர்களிடம் கட்டுரையில் இடம்பெறும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கருத்துகளை வரிசைப்படுத்தி எழுதச்செய்ய வேண்டும், அக்கருத்துகளின் அடிப்படையில், மனிதநேயமும் மன ஒற்றுமையுமே மனிதகுலம் மேம்பாடடைய வழிவகுக்கும் எனும் தலைப்பில் சொற்பொழிவு உரையொன்று எழுதச் செய்யலாம்.<br><br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br><br>வடிவம், கருத்துத்தெளிவு, கருத்துக்கோர்வை, உரைத்திறன்<br><br>**ஒப்பிட்டு எழுதுதல்**<br><br>பாரத சமுதாயம் என்ற பாரதியின் கவிதையினைக் கலந்துரையாடச் செய்தல் வேண்டும். எல்லோரும் இந்திய மக்கள் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுடன் வாழவேண்டும் என்ற கருத்தினை ஆசிரியர் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். பாரதியார் காண விரும்பிய சமத்துவ மக்களாட்சி முறையை இன்றைய மக்களாட்சி முறையுடன் ஒப்பிட்டு எழுதுகிறார்கள்.<br><br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br><br>கருத்துத்தெளிவு, ஒப்பீட்டுத் திறன், மொழிநடை<br><br>**குறிப்பு தயாரித்தல் (குழு விவாதம்)**<br><br>பட்டுக்கோட்டைப் பாடல்களில் மனிதநேயம் என்ற கட்டுரையை வகுப்பில் வாசிக்கச் செய்து ஆசிரியரும் தம் கருத்துகளைக் கூற வேண்டும். மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துப் பாடப்பகுதியில் இடம்பெறும் மனிதநேயக் கருத்துகள் குறித்து இரு குழுக்களுக்கிடையே விவாதம் செய்யுமாறு கூறிக் குறிப்புத் தயார்செய்து குறிப்பேட்டில் குறிக்கச் செய்தல் வேண்டும். | மக்களாட்சி முறைகள் குறித்த கருத்துகளை ஒப்பிட்டு எழுதும் திறன் பெறுகிறார்கள்.<br><br>மனிதநேயம் குறித்துக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.<br><br>மனிநேயப் பண்பாளருடன் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார்செய்கிறார்கள்.<br><br>மனிதநேயம் குறித்த கவிதை |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| | **நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல்**<br>பாடப்பகுதியைப் போன்று மனிதநேயம் குறித்துப் பாடியுள்ள வேறுசில கவிஞர்களையும் அவர்களின் படைப்புகளையும் சேகரிக்கச் சொல்ல வேண்டும். மனிதநேயச் சிந்தனைகளுக்குச் சவாலாகத் திகழும் நடைமுறைப் பிரச்சினைகளைப் பட்டியலிடச்செய்ய வேண்டும். சிறந்த மனிதநேயக் கவிஞர் ஒருவரை நேர்காணல் நடத்துவதற்காக வினாநிரல் தயாரிக்கச் சொல்லவும், இதன் மூலம் மனிதநேயம் குறித்த பல செய்திகளைப் பெற இயலும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்து, பட்டியலிடும் திறன், வினாநிரல் அமைப்பு<br>**புதுக்கவிதை திரட்டுதல்**<br>'மனமே கோவில் மனிதனே தேவன்' என்ற கவிஞர் மு.மேத்தாவின் கவிதையை வகுப்பில் வாசிக்கச் செய்யுங்கள், இது போன்ற மனிதநேயப் பிரச்சினைகளைப் படம்பிடிக்கும் புதுக்கவிதைகளை நூலம் / இணையம் வழி திரட்டச் செய்து மனிதநேயம் குறித்த விழிப்புணர்வைஏற்படுத்த வேண்டும். வளப்பகுதியில் இடம்பெறும், அப்துல் ரகுமான் கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள் என்ற கட்டுரையின் கருத்துகளையும் ஆசிரியர் கூறலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>திரட்டிய முறை, கருத்து, ஆர்வம்<br>**புதுக்கவிதை வரைதல்**<br>மனிதநேயம் குறித்த கவிதைகள் குறித்துக் கலந்துரையாடியும் குறிப்பேட்டில் குறித்து வைத்துள்ள மாணவர்களிடம் சுயமாகக் கவிதை படைக்கும் ஆர்வத்தை ஆசிரியர் உருவாக்க வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வடிவம், மொழித்திறன், கருத்து, கற்பனைத் தன்மை, பங்கேற்பு | களைத் திரட்டுதல் திறனைப் பெறுகி றார்கள்.<br>கவிதைகளை வரையும் திறன் பெறுகிறார்கள். |

## அலகுப்பகுப்பாய்வு

### நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)

மனிதகுலம் மேம்பாடு அடைய வேண்டுமெனில் ஒவ்வொரு மனிதனிடமும் சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் மனிதாபிமானமும், ஒருமைப்பாட்டுணர்வும் ஒருங்கிணைந்து காணப்பட வேண்டும். இதனையே ஒவ்வொரு காலகட்டத்திலும் இலக்கியப் படைப்பாளர்கள் தங்களது படைப்புகளில் பதிவு செய்துள்ளனர் என்பதை ஒரு சில சொற்றொடர்கள் மூலம் ஆரம்பிக்கலாம். வள்ளலார், அன்னை தெரசா போன்ற மனித குலத்திற்காகவே வாழ்ந்தவர்கள் குறித்துக் கூறிக் கலந்துரையாடலாம். இதுபோன்று மனிதநேயம் பேசும் படைப்புகளும், மனிதகுல மேம்பாட்டிற்காகத் தம் வாழ்நாளைச் செலவழித்து வருபவர்களும் இன்றும் இருக்கிறனரா என்பது குறித்து மாணவர்களுடன் உரையாட வேண்டும்.

### கலந்துரையாடல்

ஆசிரியர் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களை ஓரிரு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிலும் யாரேனும் ஒருவரை அக்குழுவிற்குப் பொறுப்பாளராக்க வேண்டும். இவர்கள் ஆசிரியருக்கும் குழுவிலுள்ள மாணவர்களுக்குமிடையில் ஒரு பாலமாகத் திகழ வேண்டும். வெவ்வேறு பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள உதவி வேண்டும் விளம்பரங்களைத் தொகுத்து வருமாறு அனைத்து மாணவர்களையும் ஆசிரியர் நெறியாளராக இருந்து ஊக்குவிக்க வேண்டும்.

தொகுத்தவற்றைக் குழுக்கள் உதவிகோரும் பிரச்சினைகளுக்கேற்பத் தனித்தனியாகக் குறித்துவைக்குமாறு கூற வேண்டும். வேண்டுமெனில் ஒவ்வொரு குழுவிலும் யாரேனும் ஒருவரை வகுப்பில் வாசிக்கச்செய்ய வேண்டும். விளம்பரம் வெளிவந்த அந்தந்த பத்திரிகை ஆசிரியருக்கு தம்மால் இயன்ற உதவியைச் செய்ய தயாராக இருப்பதைத் தெரிவிக்கும் விதத்தில் கடிதமாக எழுதச் செய்ய வேண்டும். அவற்றை ஆசிரியர் வலைச்சட்டத்தில் இடம்பெற்றுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும்.

### உரைக்குறிப்பு தயாரித்தல்

ஏதேனும் ஒரு கருத்தினை முன்வைத்துச் சொற்பொழிவில் உரையாற்றுதல் நிகழும். அதற்கான குறிப்பினை தயார் செய்துவிட்டால் உரையாற்றுவதற்கு உதவியாக அமையும். பாடப்பகுதியை விவாதித்தும் அத்தோடு நிகழும் புறநானூற்றுப் பகுதியையும் வளப்பகுதியையும் கொண்டு உரையாற்றுவதற்கான உரைக்குறிப்பினை தயார் செய்ய வேண்டும்.

---

**துணைக்கருவிகள்**

- பாடப்பகுதியில் இடம்பெற்ற சிறுகதை, கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல்

---

### கட்டுரை தயார்செய்தல்

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பாடப்பகுதியை வாசிக்கச்செய்யவும். ஆசிரியர் அதற்குரிய விளக்கத்தைக் கூறியபின்பு மாணவர்களைக் கலந்துரையாடச் செய்யவேண்டும். குறிப்புகள் எடுத்துக் குறிப்பேட்டில் குறித்து வைக்கின்றனர். இதனடிப்படையில் கட்டுரை எழுதச் செய்ய வேண்டும். ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

---

**துணைக்கருவிகள்**

- சிலப்பதிகாரம் – அடைக்கலக்காதைப் பகுதி
- வளப்பகுதி : 'மறைந்துவரும் மனிதநேயம்' என்ற தலைப்பிலமைந்த கவிதை இடம்பெற்றுள்ளது.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மனிதநேயம், ஒருமைப்பாடு என்பனவற்றின் பொருளை அறிகின்றனர். இது தொடர்பான பத்திரிகை விளம்பரங்களைத் தொகுக்கின்றார்கள்.<br>❖ மனிதநேயம் குறித்து உரையாற்றுவதற்கான குறிப்புகளும் கட்டுரைகளும் தயாரிக்கின்றனர். | ✦ எல்லா மனிதர்களிடமும் மனிதநேயம் காட்ட வேண்டுமென்ற மனநிலையைப் பெறுதல். பழந்த மிழிலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயப் பண்புகளை நாமும் பின்பற்ற வேண்டுமென்ற மனநிலையைப் பறுதல். |

## சொற்பொழிவு தயார்செய்தல்

மாணவர்கள் அவர்கள் அறிந்த ஒருமைப்பாடு குறித்த கருத்துகளைக் குறிப்பேட்டில் எழுதச் செய்தல் வேண்டும். சிந்தனை ஒன்றுடையாள் என்ற கட்டுரையை வாசிக்கச் செய்து, அதிலிடம்பெறும் கருத்துகளை வரிசைப்படுத்தி எழுதச்செய்த பின் அதுகுறித்த கலந்துரையாடல் நிகழ்த்தட்டும். கட்டுரையில் இடம்பெறும், மனிதகுல மேம்பாட்டிற்கு மனிநேயமும் மன ஒற்றுமையும் அவசியம் என்பதை உணர்த்தும் முகமாகச் சொற்பொழிவு உரை எழுதச் செய்தல்.

---

### துணைக்கருவிகள்

- ◗ சிந்தனை ஒன்றுடையாள் என்ற கட்டுரை
- ◗ பாரத சமுதாயம் – என்ற கவிதை

வளப்பகுதியில் உள்ள சமயமும் மனிதகுல மேம்பாடும் – என்ற கட்டுரையும் சர்தார் வல்லபாய் படேல் குறித்த குறிப்பும் கவியரசு கண்ணதாசன் பார்வையில் மனிதன் – கட்டுரை சுருக்கம்.

---

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மனிதகுல மேம்பாடு குறித்த கருத்தரங்கில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை தயாரிக்கின்றார்கள். | ✦ மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்த சான்றோர்கள் குறித்து அறிதல்.<br>✦ தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை உய்த்துணர்தல். |

## குறிப்பு தயார்செய்தல்

மனிதநேயம் குறித்து இருவேறு குழுக்களாகப் பிரிந்து விவாதம் செய்கின்றார்கள். இது குறிந்த கலந்துரையாடல்களை பலமுறை செய்து அனுபவம் மாணவர்களுக்கு உண்டு. பட்டுக்கோட்டைப் பாடல்களில் மனிதநேயச் சிந்தனைகளை இடம்பெறச் செய்துள்ளமையை பாடப்பகுதி வழி அறிந்து, குறிப்புகளாக அவரவர் குறிப்பேட்டில் குறித்துவைத்துள்ளனர். அவற்றைக் குழு விவாதமாக்கிய பின் குழுவில் ஒருவர் வகுப்பில் வாசிக்கின்றார்.

## நேர்காணலுக்கான வினாநிரல் தயார்செய்தல்

நேர்காணல் நடத்துவதற்கு அந்தத்துறை சார்ந்த அறிவு மிகவும் அவசியம். மாணவர் மனிதகுல மேம்பாடு குறித்த கருத்துகளைக் கலந்துரையாடுதல், குறிப்பு எழுதுதல், கட்டுரை எழுதுதல் மூலம் பெற்றுள்ளார். மாணவனுக்குரிய வினாக்கள் கேட்கும் திறனை வளர்க்க ஆசிரியரும் சில வினாக்களைக் கூறித் தெளிவடையச் செய்யலாம். செய்தித்தாள்களிலும் இதழ்களிலும் வந்துள்ள நேர்முகங்களைக் காட்டி மாணவர்களது வினாகேட்கும் திறனை வளர்க்கலாம். நேர்காணலுக்குரிய வினாக்கள் மேலோட்டமாக இல்லாமல் துறைசார்ந்த தனது அறிவை வெளிக்காட்டுவதாக அமைதல் வேண்டும். மாணவர்களை ஏதேனும் ஒரு கவிஞரைப் பேட்டி காணும் விதமாக

வினாக்கள் எழுதச் செய்து, அதனை ஆசிரியர் சரிசெய்து கொடுத்துநிறை, குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பட்டுக்கோட்டை பாடல்களில் மனிதநேயம் - கட்டுரை

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் மனிதநேயச் செய்திகளை அறிந்து அவற்றைத்தாமும் பின் பற்றும் மனநிலையைப் பெறுதல்.<br>❖ அவரவர் திறமைக்கேற்பப் படைப்பாக்கம் செய்யும் மனநிலையைப் பெறுதல். | ✦ மனிதநேயப் பண்பாளர்களைச் சந்திக்கவும், அவர்களிடம் உரையாடவும் திறன் பெறுதல். |

## புதுக்கவிதை திரட்டுதல்

பாடப்பகுதியை வாசிக்கச் செய்து அதனைக் குறித்த விளக்கங்களை ஆசிரியர் விளக்கிக் கூற வேண்டும். மனிதநேயத்தை வலியுறுத்தும் கவிதைகளை நாளிதழ், நூற்கள், மாதஇதழ் வழி திரட்டிக்கொண்டுவருமாறு மாணவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக நூலகம் மற்றும் இணையம் போன்றவற்றின் பயன்பாடு குறித்தும் அறிவுறுத்தப்பட வேண்டும். மேலும் மனிதநேயம் குறித்த விழிப்புணர்வு ஏற்பட, வளப்பகுதியில் இடம்? பெற்றுள்ள அப்துல் ரகுமானின் கவிதைகளில் மனிநேயத்தை வலியுறுத்திக் கூறியுள்ள கருத்துகளைக் குறித்தும் விளக்கிக் கூறலாம்.

**துணைக்கருவிகள்**

- வளப்பகுதி - அப்துல் ரகுமானின் கவிதைகளில் மனிதநேயக் கருத்துகள் என்ற கட்டுரைப் பகுதி

## கவிதை வரைதல்

மனிதநேயம் குறித்து பாடப்பகுதி கொண்டும் திரட்டிய மனிதநேயக் கவிதைகள் கொண்டும், வளப்பகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் கொண்டும் கிடைத்த அனுபவங்களின் மூலம் கவிதை வரையுமாறு கூற வேண்டும். ஆசிரியரும் கவிதை வரைதலின் நுட்பங்கள் மற்றும் வடிவங்கள் குறித்து மாணவர்களுக்குக் கூறி ஆர்வம் ஏற்பட வழிவகுக்க வேண்டும். வரைந்த கவிதைகளை ஆசிரியர் மதிப்பீடு செய்து நிறை குறைகளைக் கூறித் திறனை மேம்படச் செய்ய வேண்டும்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கவிதைகளைத் திரட்டவும் அதனைப் போன்ற கவிதை படைக்கவும் திறன் பெறுகிறார்கள். | ✦ மாணவர்கள் அவரவர்கள் திறமைக்கேற்பப் படைப்பாக்கம் செய்யும் மனநிலையைப் பெறுதல். |

## மதிப்பீட்டுமுறைகள்

வலைச்சட்டத்தில் இடம்பெற்றுள்ள செயல்பாடுகள் அனைத்திற்கும் மதிப்பீட்டுக் குறிப்புகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. அதனடிப்படையில் மாணவர்களின் திறனை அடிப்படையாக வைத்து ஆசிரியர் மதிப்பீடு செய்து தமது பதிவேட்டில் குறித்து வைக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் நிறை, குறைகளைச் சுட்டிக் காட்டி மாணவர்களின் திறனை மேம்பாடு அடையச்செய்ய வேண்டும். இவ்வலகில் இடம்பெறும் குழு மற்றும் தனிநபர் மதிப்பீடுகளை அறிய வேண்டும்.

## குழுமதிப்பீடு / செயல்பாடுகள்

நடைபெறும்போது அவற்றை மதிப்பிட்டு மதிப்பெண்கள் அளிக்கப்பட வேண்டும்.

- கலந்துரையாடல்
- விவாதம் செய்தல்
- தொகுத்தல் / திரட்டுதல்
- ஒப்பிடுதல்

போன்றவை குழுமதிப்பீடாக மதிப்பிட வேண்டும்.

## தனிநபர் மதிப்பீடு / செயல்பாடு

வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும் ஆசிரியர் மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனின் வளர்ச்சித் திறனையும் மேம்பாடு செய்ய வேண்டுமெனில் தனிக்கவனம் செலுத்துவது அவசிய மாகும். மாற்றுத்திறனாளி மாணவர்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

- குறிப்பு எழுதுதல்
- கட்டுரை எழுதுதல்
- கவிதை வரைதல்
- கடிதம் எழுதுதல்

இவை மூலம் தனிநபர் செயல்பாடுகளை மதிப்பிட வேண்டும்.

## பருவ மதிப்பீடு

பருவ மதிப்பீட்டிற்குத் தனிநபர் செயல்பாடுகள், குறிப்பேட்டில் எழுதியுள்ளவைகள், குழுச்செயல்பாடுகளில் திரட்டியும் தொகுத்த செய்திகள், படைப்பாக்கங்கள் போன்றவை எல்லாவற்றையும் உட்படுத்த வேண்டும்.

- குறிப்புகள்
- கட்டுரைகள்
- உரைக்குறிப்புகள்
- கடிதம் எழுதுதல்
- வினாநிரல் தயாரித்தல்
- கவிதை வரைதல்

போன்ற திறன்கள் மூலம் ஆசிரியர் தொடர்மதிப்பீட்டை நிகழ்த்த இயலும்.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**இலக்கியங்கள் காட்டும் மனித நேயச் செய்திகளைச் சேகரிக்கிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறியவர்

அ) திருவள்ளுவர் ஆ) இளங்கோ
இ) கணியன் பூங்குன்றனார் ஈ) திருமூலர்

2. ' அரவான்' என்ற நாடகநூலுக்காக விருது பெற்றவர்

அ) எஸ். இராதாகிருஷ்ணன் ஆ) எம். சாலன்
இ) யோகி சுத்தானந்த பாரதி ஈ) கவிமணி

3. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்- என வீரமுழக்கம் புரிந்தவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கம்பர் ஈ) கண்ணதாசன்

### மூன்று மதிப்பெண்கள்

4. பாரத சமுதாயம் - என்ற கவிதை காட்டும் ஒற்றுமையை உறுதி மொழியாக எழுதுங்கள்

5. " பேப்பர்ல உதவி தேவைன்னு விளம்பரம் கொடுத்தால் கண்ணா நம்மளை மாதிரி நாலுபேரு படிப்பாங்க உதவி செய்வாங்கன்னு நம்பித்தானே" அன்பின் விதைகளில் மனிதநேயத்துடன் வெளிப்படும் பூமிநாதனின் பாத்திரப் படைப்பை ஆராய்ந்து எழுதுங்கள்.

6. மனித நேயம் எப்படியெல்லாம் வெளிப்படலாம்? பட்டியலிடுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

7. இலக்கியங்கள் எப்போதுமே சமூக அக்கறையுடன் உருவாக்கப்பட்டவையே- கருத்தரங்கில் பேசுவதற்காகச் சான்றுகளுடன் கட்டுரை எழுதுங்கள்.

8. " மனமே கோவில் மனிதனே தேவன் " அன்பைப் போதிக்கும் மதங்களின் கருத்து மறக்கப்படுகிறது. மத ஒற்றுமையை வலியுறுத்தி ஓணப் பண்டிகை விழாவில் உரையாற்றச் சொற்பொழிவு ஒன்றைத் தயார் செய்யுங்கள்.

### எட்டு மதிப்பெண்

9. இலக்கிய இதழில் வெளியிட உலக அமைதி எனும் கருத்தினை வெளிப்படுத்தும் கவிதை ஒன்றை வரைந்து தலைப்பிடுங்கள்.

10. முதியோர் இல்லம் ஒன்றிற்குச் சென்று வந்த உங்கள் மனதில் ஏற்பட்ட எண்ணங்களை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.

4

# மொழியும் சமூகமும்

## அலகு அறிமுகம்

மனித வாழ்வில் அடிப்படைக் கூறுகளுள் ஒன்று மொழி. மொழி உலகில் எங்கே எப்போது தோன்றியது என்று கூறுவது கடினம். இன்றைய சமூகத்தில் நாம் காணும் அனைத்து முன்னேற்றங்களுக்கும் அடிப்படைக் காரணம் மொழி என்று கூறலாம். அந்த அளவுக்கு மொழியும் சமூகமும் ஒன்றிற்கு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது. இக்கருத்துகளை வலியுறுத்தும் வண்ணம் இவ்வலகு மொழி வளர்ச்சி, மொழிப்பற்று மற்றும் மொழி இழப்பு என மூன்று கருத்தலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மொழி வளர்ச்சி என்னும் கருத்தலகில் தமிழ் வளர்ச்சி என்ற பாரதிதாசனின் பாடலும், ரா. பி. சேதுப் பிள்ளையின் தமிழும் மலையாளமும் எனும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. தலைமுறை தலைமுறையாகத் தமிழ் வளர்த்தோம் என்று கூறிகிறோமே ஒழிய தமிழின் குறைபாடுகளை நாம் களையவில்லை என்று பாரதிதாசன் ஆதங்கப்படுவதோடு தமிழ்மொழி இனி எந்தெந்தத் துறைகளிலெல்லாம் வளர்ச்சியடைய வேண்டுமென்று மாணவர்களுக்கு அறிவுறுத்துகின்றனர். தமிழும் மலையாளமும் எனும் கட்டுரை மலையாள மொழிச்சொற்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துரைக்கிறது.

மொழிப்பற்று எனும் கருத்தலகில் தமிழ்மொழி மீது மக்கள் மிகுந்த பற்றுகொள்ள வேண்டும் என்பதோடு தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் செய்ய வேண்டிய கடமைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்து தமிழைக் கற்றுத் தனது உயிர்மூச்சாகத் தமிழைக் கருதிப் பல்வேறு தமிழ்நூற்களைப் படைத்து அரும்பணியாற்றிய வீரமாமுனிவரின் வாழ்க்கைச் சுருக்கம் அடுத்ததாக இடம் பெற்றுள்ளது.

மொழி இழப்பு எனும் பிரிவில் இன்று உலகில் நலிந்து வரும் மொழிகளைப் பற்றிய கண்ணோட்டம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு மொழி பேசும் சமூகம் உலகிலிருந்து எவ்வாறு இல்லாமல் போகிறது என்று கூறி மொழி அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால் தலைமுறையினர் மொழியைத் தவறாமல் கற்றுத் தரவேண்டும் என்று இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

ஒரு தாய்மொழி மடிகிறது எனும் கட்டுரை இன்று உலகியல் வழக்கிலிருந்து மாய்ந்துகொண்டிருக்கும் மொழிகள் குறித்தும் அவற்றை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதைக் குறித்தும் விளக்குகிறது. தாய்மொழியைப் போற்றவும் பிறமொழிகளை மதிக்கவும் இவ்வலகு துணைபுரிகிறது.

## கற்றல் அடைவுகள்

- ✦ அடிப்படை மொழியியல் கூறுகளை அறிகிறார்கள். குறிப்பு எழுதுகிறார்கள்.
- ✦ தாய்மொழிக் கல்வியின் தேவை குறித்து விவாதிக்கிறார்கள். விவாதக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- ✦ மொழியும் சமூகமும் பற்றிச் சிந்திக்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.
- ✦ மெய்ப்புத் திருத்தம் செய்கிறார்கள்.
- ✦ அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தமிழ் மலையாளச் சொற்களைத் தொகுத்து அகராதி தயாரிக்கிறார்கள்.
- ✦ சிற்றிலக்கியங்களில் பாடுபொருள் குறித்துச் சிறு கட்டுரை எழுதுகிறார்கள்.
- ✦ தமிழ்மொழிக்குத் தொண்டு செய்த பிற நாட்டவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்களும்

- ▲ தாய்மொழியைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலை அடைதல்.
- ▲ உலக மொழிக் குடும்பங்களில் தற்போதைய நிலை அறிதல், பாதுகாத்தல்.
- ▲ தாய்மொழியை மட்டும் கற்றால்போதாது பிறமொழியையும் கற்க வேண்டும் என்ற மனப்பான்மை பெறுதல்.
- ▲ ஒரு மொழி பாதுகாக்கப்படும்போது ஒரு சமூகமே பாதுகாக்கப்படுகிறது.
- ▲ மொழியினைப் பாதுகாப்பதுடந் மொழிவளர்ச்சிக்காக தத்தம் பங்களிப்பை வெளிப்படுத்தும் மனிநிலையைப் பெறுதல்.
- ▲ தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களை அறியும் மனநிலையைப் பெறுதல்.

**பார்வை நூல்கள்**

1. மொழியியல்- கைல் வின்ஸ் - ஆங்கிலக்கட்டுரையின் தமிழாக்கம் (ரா. சுப்பிரமணியன்) . முத்துச் சண்முகம், 2. மொழியியல்- கி. கருணாகரன்& வ. ஜெயா, 3. மொழி வரலாறு- தெ. பா. மீனாட்சி சுந்தரம், 4. பாரதியார் கவிதைகள் 5. மொழி வரலாறு- சு. சக்திவேல், 6. தமிழ் இலக்கிய வரலாறு- சு. சக்திவேல், 8.தமிழ் விடு தூது, பாரதிதாசன் கவிதை, ராபி. சேதுப்பிள்ளை கட்டுரை, இராசேந்திரசோழன் கட்டுரை, ராஜலட்சுமி சிவலிங்கம் கட்டுரை, வ. ஞானசுந்தரம் கட்டுரை.

அலகுச்சட்டம் (வேர்வைத்துளிகள்) அலகு 1

### கருத்துகள்/திறன்கள்

மொழியின் வளர்ச்சி அது வழங்கும் சமூகத்தின் பயன்பாட்டைப் பொறுத்து அமைகிறது.

தாய்மொழிப்பற்று என்பது பிற மொழி வெறுப்பன்று.

தமிழ்மொழி வீழ்ச்சியடையத் துவங்கிய காலகட்டத்தில் சிற்றிலக்கியங்கள் தமிழ்மொழியைக் கைபிடித்து உயர்த்தின.

பிற நாட்டறிஞர்களும் தமிழ்மொழிக்கு அரும் தொண்டாற்றினர்.

உலக மொழிகள் பல இன்று இழப்பிற்கு உள்ளாகி வருகின்றன.

பத்திரிகை மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பங்கள் பெருகும் போது சிறுபான்மை மொழிகள் படுகொலை செய்யப்படுகின்றன.

### கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு

**பட்டியல் தயாரித்தல்**

நூலகம் / இணையத்தின் உதவியுடன் உலகில் வழங்கப்பட்டு வரும் தொன்மையான மொழிகளின் பட்டியல் தயாரிக்கச் சொல்லுதல்– குழுச்செயல்பாடு ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.

**கலந்துரையாடல் குழுச்செயல்பாடு**

தமிழ்மொழியின் சிறப்புகளையும் இன்றைய ஆங்கில ஆதிக்க காலகட்டத்தில் தமிழ்மொழி எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடல். கலந்துரையாடலின் மூலம் கிடைத்த செய்திகளுடன் பாடப் பகுதியிலுள்ள பாரதிதாசனின் ‘ தமிழ் வளர்ச்சி ’ பாடப்பகுதியையும் வகுப்பில் வாசித்தல். மொழித் தொடர்பான கட்டுரை எழுதுவதற்கான குறிப்புகள் தயாரிக்கிறார்கள். குழுச் செயல்பாட்டின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

தமிழ்மொழியின் தொன்மை, சிறப்புகள், இலக்கிய வளம், எதிர்பார்க்கும் பிரச்சினைகள்

**ஒப்புமைப்படுத்துதல்**

தமிழ்– மலையாள மொழிகளுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிக் கலந்துரையாடல். தமிழ் மலையாளச் சொற்களைப் பகுப்பாய்வு செய்தல். உறவுமுறைப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், ஊர்ப்பெயர்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல். தனிநபர் மதிப்பீடு

**அகராதி தயாரித்தல்**

பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ‘தமிழும் மலையாளமும்’ எனும் பாடப் பகுதியை வகுப்பறையில் படித்தல். கட்டுரையிலுள்ள தமிழ்சொற்களையும்– மலையாளச் சொற்களையும் மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து அகராதி தயாரிக்கச் செய்தல். குழு மதிப்பீடு

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

சொற்கள், பொருள்தருதல், அகரவரிசைப்படுத்துதல்.

### கற்றல் அடைவுகள்

தமிழ் மொழியின் சிறப்புகளையும் அது இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் குறித்துக் கட்டுரை எழுதுகின்றனர்.

அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தமிழ் மலையாளச் சொற்களைத் தொகுக்கின்றனர். அகராதி தயாரிக்கின்றனர்.

தாய்மொழி வழிக்கல்வியின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வண்ணம் சொற்பொழிவு தயாரிக்கின்றார்கள்.

சிற்றிலக்கியங்களின் பாடுபொருளையும் அது தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டு குறித்தும் சிறுகட்டுரை எழுதுகின்றனர்.

தமிழ்மொழிக்குத் தொண்டு செய்த பிற நாட்டவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர்.

மொழிகள் அழிவதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாத இதழுக்குச் சிறப்புக் கட்டுரை எழுதுகின்றனர்.

மொழியைப் பாதுகாப்பதில் சமூகத்தின் பங்கு எனும் தலைப்பில் விமர்சனக் கட்டுரை எழுதுதல்.

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| | **சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்தல்**<br>குழு விவாதம். மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துத் தாய்மொழி வாயிலாகப் பாடங்களைப் படிப்பதன் நன்மைகளையும், தீமைகளையும் குறித்துக் குழு விவாதம் நடத்தச் செய்ய வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துகள், நன்மைகள், தீமைகள், ஆசிரியரின் தொகுப்புரை<br>மொழிப்பற்று எனும் பாடப் பகுதியை வகுப்பறையில் வாசித்தல். சொற்பொழிவு உரை தயாரிப்பதற்கான குறிப்புகள் எடுத்தல்.<br>**குழு விவாதம் செய்தல்.**<br>மாணவர்களிடம் தமிழ் இலக்கியங்களை அவை எழுந்த காலகட்டங்களின் அடிப்படையில் பிரிக்கச் சொல்ல வேண்டும். நாயக்கர் காலகட்டத்தில் தமிழ் இலக்கிய நிலை குறித்து விவாதித்தல் “ சிற்றிலக்கியங்கள்” எனும் பாடப் பகுதியை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். பாடுபொருள் குறித்துக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.<br>**பட்டியல் தயாரித்தல்**<br>தமிழ் இலக்கிய வரலாற்றின் உதவியுடன் வெளிநாட்டிலிருந்து தமிழகம் வந்து தமிழ்மொழிக்குத் தொண்டாற்றிய பெரியோர்களைப் பற்றிய பட்டியல் தயார் செய்யச் சொல்லுதல். வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை வகுப்பறையில் வாசித்தல். பிற தமிழ் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றையும் குழு அடிப்படையில் தொகுக்கச் செய்தல். குழு மதிப்பீடு.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>ஆசிரியரின் பெயர்கள், தமிழ் மொழிப்பற்று, படைப்புகள், பிற தொண்டுகள்.<br>**கலந்துரையாடல்**<br>‘மொழி இழப்பு’ எனும் பாடப்பகுதியை வகுப்பறையில் வாசிக்கச் செய்து கலந்துரையாடல் நடத்துதல். கலந்துரையாடலின் மூலம் கிடைத்த குறிப்புகளின் அடிப்படையில் மாத இதழுக்குச் சிறப்புக் கட்டுரை எழுதத் தயார் செய்தல். ஆசிரியர் மதிப்பீடு.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துகள், மொழிகளின் அழிவு, மொழிகளின் ஆயுட்காலம், மொழி பாதுகாப்பு வழிகள். | |

## அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

மாணவர்களிடம் இணையம்/ நூலகத்தின் துணையுடன் உலகில் வழங்கிவரும் தொன்மையான மொழிகளைப் பட்டியலிடச் செய்ய வேண்டும். உலகில் இன்று வழக்கிலிருக்கும் தொன்மையான செம்மொழிகளில் முதன்மையானது தமிழ் போன்ற செய்திகளைக் கலந்துரையாட வேண்டும்.

**கலந்துரையாடலில் இடம்பெற வேண்டியவை**

மொழி என்பது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளப்பயன்படும் ஆற்றல் வாய்ந்த ஊடகம்.

உலகை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வருவது மொழி

### கட்டுரை எழுதுதல்

தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்துப் பாரதியார், பாரதிதாசன் போன்றோரது பாடல்களையும் தமிழ்விடு தூது கூறும் தமிழின் சிறப்புகளையும் வகுப்பறையில் வாசிக்கச் செய்ய வேண்டும். குழு அடிப்படையில் குறிப்புகள் தயார் செய்து தமிழ்மொழியின் சிறப்புகளையும் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டிக் கட்டுரை எழுதச் செய்தல். ஆசிரியர் வலைச்சட்டத்தில் கூறப்பட்ட மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- தமிழின் சிறப்புப் பற்றிப் பாரதியார் பாடல், தமிழ்விடு தூது.

### அகராதி தயாரித்தல்

தமிழ்மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள மொழிகள் குறித்துக் கலந்துரையாட வேண்டும். தமிழ்நாட்டின் ஒரு அங்கமாகத் திகழ்ந்த சேரநாட்டில் வழங்கப்படும் மொழியான மலையாள மொழியே தமிழுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது எனும் கருத்திற்கு வருதல்.

கலந்துரையாடலில் இடம் பெற வேண்டியவை

- உறவுப் பெயர்கள்
- எண்ணுப் பெயர்கள்
- இடப்பெயர்கள்

தமிழ் மலையாள மொழிகளைப் பற்றிச் சிறப்பாக ஆராய்ந்து பல்வேறு நூல்கள் படைத்த ரா. பி. சேதுப்பிள்ளையின் தமிழும் மலையாளமும் எனும் கட்டுரையை வகுப்பறையில் வாசிக்கச் செய்ய வேண்டும். பாடப் பகுதியில் கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்துக் குறிப்புகள் எடுக்கச் செய்தல். பாடப்பகுதியில் கிடைத்த தமிழ் மலையாளச் சொற்களையும் நடைமுறையில் வழங்கப்படும் சொற்களையும் சேர்த்து ஒரு அகராதி உருவாக்கச் செய்தல்.

**துணைக்கருவிகள்**

- தமிழ் ஆங்கில அகராதி
- ஆங்கிலம் மலையாளம் அகராதி

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தமிழ்மொழியின் தொன்மை. சிறப்பு போன்ற வற்றைக் குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.<br>❖ தமிழ் மலையாள மொழிகளின் உறவினைத் தெரிந்து அகராதி உருவாக்குகிறார்கள். | ✦ தமிழ்மொழியைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலை. |

## சொற்பொழிவு தயாரித்தல்

ஆசிரியர் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து தாய்மொழி வழிக் கற்பதன் நன்மை தீமைகளை விவாதிக்கச் சொல்லவும்.

விவாதக் குறிப்புகள்

- 2- ம் வகுப்பு வரை தமிழ்க் கல்வி உயர்கல்வி ஆங்கிலம்.
- தமிழிலுள்ள பிறமொழிச் சொற்கள்
- தொழில்நுட்ப வளர்ச்சியும் தமிழ்மொழியும்
- தமிழிலேயே தலைப்பு, பெயர் கையொப்பம் இடுதல்.

மொழிப்பற்று பாடப்பகுதியையும் வகுப்பில் வாசிக்கச் செய்தல். குறிப்புகள் எடுத்தல், தாய்மொழிக் கல்வியின் நன்மை தீமைகளை எடுத்துரைக்கும் வண்ணம் சொற்பொழிவு உரை தயாரித்தல். குழு மதிப்பீடு

## சிறுகட்டுரை எழுதுதல்

நூலகத்தின் உதவியுடன் மாணவர்களைத் தமிழ் இலக்கிய கால கட்டங்களைப் பட்டியலிட்டு வரச் சொல்ல வேண்டும். நாயக்கர் காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தின் நிலை குறித்து விவாதித்தல். பேரிலக்கியங்கள் படைக்கப்படாததன் காரணத்தையும் சிற்றிலக்கியங்கள் எழுந்ததன் சூழலையும் எடுத்துரைத்தல். சிற்றிலக்கியங்கள் பாடப் பகுதியை வகுப்பறையில் வாசித்துக் குறிப்புகள் எடுத்தல். சிற்றிலக்கியங்களில் பாடுபொருள் என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுதல்

### துணைக்கருவிகள்

- தமிழ் இலக்கிய வரலாறு
- நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்கள்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தாய் மொழி வழிக் கல்வியின் சிறப்புகளையும் பிரச்சினைகளையும் முன்வைத்துச் சொற்பொழிவு உரை எழுதுதல்.<br>❖ சிற்றிலக்கியங்கள் குறித்துச் சிறு கட்டுரை எழுதுகின்றனர். | ✦ தமிழ் மொழிக்குத் தமிழர்கள் மட்டுமன்றிப் பிற நாட்டவர்களும் தொண்டு செய்துள்ளனர் என்ற உணர்வு எழல். |

## கருத்தரங்கக் கட்டுரை எழுதுதல்

தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய வெளிநாட்டவர்கள் பற்றிய கலந்துரையாடல். இணையம்/ நூலகத்தின் உதவியுடன் அவர்களைப் பற்றிய சிறுகுறிப்பு தயார் செய்யச் சொல்ல வேண்டும்.

- கால்டுவெல்

- போப் ஐயர்
- வீரமாமுனிவர்

பாடப்பகுதியிலுள்ள வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். மாணவர்கள் தயாரித்த பிற பெரியவர்களைப் பற்றிய குறிப்புகள் சேர்த்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதச் செய்தல். வலைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மதிப்பீடு நடைபெற வேண்டும்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தமிழுக்குத் தொண்டு செய்த பிற நாட்டவர்கள் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுகின்றனர். | ✦ தாய்மொழிப் பற்று என்பது பிறமொழி வெறுப்பன்று என்ற மனநிலை |

**துணைக்கருவிகள்**

- தமிழ் இலக்கிய வரலாறு
- வெளிநாட்டவர் தமிழ்த்தொண்டு

## சிறப்புக் கட்டுரை எழுதுதல்

இவ்வலகிலிருந்து சில குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த மக்கள் முற்றிலும் அழிந்து போவதற்கான காரணங்களைப் பற்றிக் கலந்துரையாடல். சுனாமி, நிலநடுக்கம், இனப்படுகொலை போன்ற காரணங்களால் ஒரு சமூகம் முற்றிலும் அழிதல். ஒரு குறிப்பிட்ட மொழியையப் பேசும் மக்கள் அழிந்து விட்டால் அந்த மொழியும் இவ்வுலகிலிருந்து மறைந்து போகிறது எனும் கருத்திற்கு வருதல்.

மொழிஇழப்பு எனும் பாடப்பகுதியை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். மொழி இழப்பிற்கான காரண காரியங்களைப் பற்றி விவாதித்தல், குறிப்புகள் எடுத்தல். மாணவர்கள் எடுத்த குறிப்புகளின் அடிப்படையில் மாத இதழுக்கு ஒரு சிறந்த கட்டுரை எழுதுதல். வலைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு.

**துணைக்கருவிகள்**

- க. வேழவேந்தனின் தாய்த் தமிழின் சிறப்பு பற்றிய கடிதம்.

## கடிதம் எழுதுதல்

வளப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கடிதத்தின் உட்பொருளை மாணவர்களுக்கு உணரச் செய்யும் விதம் ஒரு கலந்துரையாடல் நடத்துதல். கடித இலக்கியத்தின் கூறுகளை எடுத்துரைத்தல். மொழி என்பது நமது முன்னோர் நமக்குத் தந்த சொத்து, அதனை வரும் தலைமுறையினருக்கு அப்படியே கைமாற வேண்டும் என்பதனை உணர்த்தும் விதம் ஒரு கடிதம் எழுதுதல்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மொழிகள் அழிவதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாத இதழுக்குச் சிறப்புக் கட்டுரை எழுதுகின்றனர்.<br>❖ வரும் தலைமுறையினருக்கு மொழியை கைமாற வேண்டியதன் அவசியம் குறித்து கடிதம் எழுதுதல். | ✦ மொழி இழப்பின் விளைவுகளைப் பிறர் அறிய படைப்புகளாக வெளியிட எண்ணுகிறார்கள். |

### தலையங்கம் எழுதுதல்

'ஒரு தாய் மொழி மடிகிறது' எனும் கட்டுரையை வகுப்பறையில் வாசித்து விவாதம் நடத்துதல்.

விவாதக் குறிப்புகள்

- இன்று குழந்தைகள் கற்க விரும்பும் மொழி
- மொழிப் பண்பாட்டைப் பேணுதல்
- மொழி வளர்ச்சி குறித்து ஆராய்தல்
- மொழியின் மறைவிற்குரிய காரணங்கள்.

விவாதத்தின் மூலம் பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் மொழியைப் பேணுவதன் அவசியம் குறித்து ஒரு பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதச் சொல்ல வேண்டும்.

வலைச்சட்டத்திலுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு நடத்துதல்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தாய்மொழியைப் பேணுவதன் தேவை குறித்து தலையங்கம் தயாரிக்கின்றனர். | ✦ இழப்பின் விளிம்பில் இருக்கும் மொழிகளைப் பாதுகாக்க வேண்டும் எனும் மனநிலை அடைதல். |

## வளப்பகுதி

### மொழியும் சமூகமும்

பண்பாட்டின் உயிர்நிலை மொழி. இனத்தின் துல்லியமான அடையாளம் அது. ஒரு இனம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நீண்டு பரந்து கிடக்கும் தன் வரலாற்றில் உழைத்துத் திரட்டிக்கொண்ட அறிவும் உணர்வும், ஆன்மிகமான அனைத்தும் சமூக ' ஜீன்' களாக வடிவமைந்து கிடப்பது மொழியில் தான். மொழி என்பது இனத்தின் தொடர்பு சாதனம் மட்டுமல்ல: மனிதனுக்குள்ளும், மனிதனுக்கு வெளியே சமூகத்துக்குள்ளும். மனிதனின் எல்லாவிதமான படைப்புகளுக்குள்ளும் நீக்கமற நிறைந்து உயிர்த்துடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் சமூக உயிர் அது. மொழித் தொடர்பு நீங்கிய பொருள்கள் சாரமற்றுச் சடமாகிப் போகும். உழைப்பும் கூட்டு வாழ்க்கையும் மொழியைத் தோற்றுவித்தன என்றால், மொழியே இனத்தைத் தோற்றுவித்தது. அழகைத் தோற்றுவித்தது, ஏன் ஆண்டவனைத் தோற்றுவித்ததே அது தான். இதன் மறுதலையாகத்தான் நம்மவர்கள் மொழியை இறைவன் படைத்ததாகச் சொல்லிப் பரவசப்படுகிறார்கள்.

மனித உடம்பு எப்படி நம் சொந்த மண்ணோடும் சுற்றுச் சூழலோடும் பின்னிப்பிணைந்து வளர்கிறதோ, நம் நரம்பு மண்டலம் நம் உழைப்போடும் சிந்தனையோடும் எப்படிப் பின்னிப் பிணைந்து வளர்கிறதோ, அது போலவே மூளையானது தாய்மொழியோடு பின்னிப் பிணைந்தே வளர்கிறது. வரலாற்றின் வழியே மனித முகம் வடிவமைக்கப்பட பல அம்சங்கள் பங்களிப்புச் செய்திருந்தாலும், ஒரு இனத்தின் முகத்தை வடிவமைப்பதில் மொழிக்கு முக்கியமான ஒரு பங்கு உண்டு.

மொழி என்பது அகராதியின் பக்கங்களில் அடுக்கப்பட்டு பொருள் விளக்கப்படும் சொற்களும் சொற்றொடர்களும்தான் என்று பலர் நினைக்கிறார்கள். அப்படி அல்ல. இனத்தின் நாவில் இடைவிடாமல் இயங்கிக்கொண்டிருக்கும் உயிரும் ஒளியும் தொனியும், நுட்பமும் கொண்ட ' வாழும் பொருள்' மொழி. சமூக இயக்கத்துக்கு ஆதாரமாக, மனித மனதின் மூலாதாரத்தில் கோடான கோடி நாதவிந்துக்களாகச் சலித்துக் கொண்டிருப்பது மொழி. மனித குலத்தின் கோடானுகோடிப் படைப்புகளின் பதிவுகளாக, புனைவுகளின் வெளிப்பாடுகளாக, பிரபஞ்சத்தின் அனைத்துக் குறிகளாக, உள்ளும் புறமும் நிறைந்து கிடப்பது மொழி.

மொழி ஆழமானது. பிரபஞ்சம் போல் விசாலமானது. பேசும் இனத்தின் ஆசைகளையும் தேவைகளையும், சாதனைகளையும் இயக்கங்களையும் காலத்தோடு திரட்டிக் கொண்டே வளர்வது அது. எழுத்தில் அடங்காத நுட்பமான ஒலிகள், தொனிகள், உணர்வுகள் இவற்றின் நெளிவு சுளிவுகள், குறுக்கல் நீட்டல்கள் என மொழியின் இழைகளும் பிசிறுகளும் கூட மொழியிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை. காலங்காலமாக மொழியில் சேரும் தொன்மங்கள், சொலவடைகள், பழமொழிகள், அறிவுரைகள், வட்டாரச் சிறப்பு வழக்குகள் இப்படி மொழி மாற்றம் செய்ய எளிதில் வசப்படாத உயிர்கூறுகள் வாழும் மொழியில் ஏராளம் ஏராளம் உண்டு. இந்த உயிர்க் கூறுகளைத் தின்று செரித்துத் தன்வழிப் படுத்தாத மூளையால் மொழியைத் திறமையாகக் கையாள இயலாது. மொழிபெயர்ப்பு மொழி என்பது ஆயிரம் மூலிகைகளை அலசிப்பிழிந்து நூறு வகை மண்களில் புரண்டு, அவற்றின் ஆற்றல்களை உண்டு, ஆறாக இறங்கிப் பூமியின் உள்ளும் புறமும் இயங்கி, நமக்கு கிடைக்கும் இயற்கை நீர்.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**மொழியும் சமூகமும் பற்றிச் சிந்திக்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. பண்டை இலக்கியங்களை எழுதி வைக்கப் பயன்பட்டது

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) ஓலைச்சுவடிகள் ஈ) காகிதச் சுருள்கள்

2. கோ என்ற சொல்லின் பொருள்

அ) யானை ஆ) பசு
இ) மன்னன் ஈ) வீரன்

3. வீரமாமுனிவரின் இயற்பெயர்

அ) தைரியநாதன் ஆ) கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி
இ) சூரிய நாராயண சாஸ்த்ரி ஈ) ஜி.யு. போப்

### மூன்று மதிப்பெண்

4. வீரமாமுனிவரின் வாழ்க்கைக் குறிப்பைச் சுருக்கமாக எழுதுங்கள்.
5. மொழிகளின் சிறப்பினைக் கூறும் இலக்கிய இதழுக்கு ஒரு நூல் அறிமுகவுரை எழுதுங்கள்
6. பல்வகை மொழிகளை அறிந்து கொள்வதன் நன்மைகளைப் பட்டியலிடுங்கள்

### ஐந்து மதிப்பெண்

7. தாய்மொழி வழிக் கல்வி எனும் தலைப்பில் நடக்கும் கருத்தரங்க நிகழ்விற்காக " பல்வேறு தாய்மொழிகள் மடிகின்றன " என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று தயார் செய்யுங்கள்.
8. மொழிபெயர்ப்பால் இலக்கியங்களின் வளர்ச்சி பெருகுகிறது/ குறைகிறது என்னும் தலைப்பில் நடைபெற இருக்கும் பட்டிமன்றத்தில் கலந்து கொள்ள விரும்பும் நீங்கள் ஏதேனும் ஒரு தலைப்பில் விவாதக் குறிப்புகள் தயார் செய்யுங்கள்.

### எட்டு மதிப்பெண்கள்

9. " மொழி வளர்ச்சி சமூக வளர்ச்சியே" பாரதி பிறந்த நாள் விழாவில் பேசிட சொற்பொழிவு உரை ஒன்றை தயார் செய்யுங்கள்.
10. " அன்றாடம் வளர்ந்த தமிழ்மொழி" அன்று வரை இன்று வரை ஒரு கண்ணோட்டம் இலக்கிய இதழில் வெளியிட இலக்கியச் சான்றுகளுடன் சுவையான கட்டுரை எழுதுங்கள்.

# 5

# அறிவின் வாயில்கள்

**அலகு அறிமுகம்**

நாளுக்கு நாள் வேகமான வளர்ச்சிப்படியில் உலகம், மாற்றங்களையும் வசதிகளையும் வாய்ப்புகளையும் வாரி வழங்கிக் கொண்டே போகின்றது. இவ்வாய்ப்புகள் ஊடகங்களாக நமக்குள் ஊடுருவிச் சென்று கொண்டே போகின்றது. நொடிக்குள் தகவல்களின் குவியல்கள். கண்முன் வந்து கொண்டே இருக்கும் அனைத்தையும் நம்மால், பகுத்தறிவுடன் சிந்திக்க இவ்வலகு பயன்படும்

ஊடகங்களில் விமர்சனக் குறிப்புகளை வெளியிடும் திறன் பெறவும், எழுதும் கலையில் அறிவு பெறவும் எழுதும் கலை எனும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. தலையங்கம், குறிப்பு, நேர்காணல் போன்றவற்றை சரியான முறையில் வெளியிடும் அறிவும், புரிதலும் எழுதும் கலையும் இதழியல் உத்திகளும் என்ற கட்டுரையால் கிடைக்கும். எடிட் செய்பவன் என்ற கவிதை திருத்தமாக, தெளிவாக எழுதிடும் வழியைப் புதுமையாய் எடுத்துரைக்கின்றது.

வலைப்பூக்கள் என்ற அலகுப் பிரிவின் கீழ் தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள், டிஜிட்டல் சூழலும் சினிமாவின் எதிர்காலமும் என்னும் இரு கட்டுரைகள் உட்படுத்தப்பட்டுள்ளன. இணையதளத்தின் பல்வேறு முகங்களை நமக்குக் காட்டித் தமிழ் மேலும் வளர்ந்திட உலகம் எப்படி இணையத்தில் ஒன்று சேர முடியும் என்ற வழி காட்டுதலையும் இக்கட்டுரைகள் வழங்குகின்றன. மட்டுமன்றி ஊடகத்துறையில் உச்சகட்ட வளர்ச்சி பெற்று விளங்கும் திரைத்துறையில் மின்னல் வேகத்தில் வந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் அத்துறையை எங்கு கொண்டு சேர்க்கின்றன என்பதையும் இப்பிரிவில் உணரலாம்.

ஒளியும் இருளும் என்னும் பிரிவில் கண்ணுக்குத் தெரியாத எதிரி திரை வழி நுழையும் வன் கொடுமை என்ற இரு விமர்சனக் கட்டுரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஊடகம் என்ற தொடர்புக்கருவியால் நமக்கு ஏற்படும் ஆபத்துகளும் நம்மை அறியாமலே நாம் சென்று வீழக்கூடிய படுகுழியும் நம் அறிவுக்கு எட்டும் வகையில் சொல்லப்பட்டுள்ளன.

குழந்தைப் பருவத்தைக் கடந்து முதிர்ச்சிப் பருவத்தை அடையும் வயதில் இருக்கும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டுதலாகவும், பயன்பாடாகவும் இவ்வலகு அமைந்துள்ளது. ஆர்வத்திற்கேற்ப ஊடகத்துறையின் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து பணிவாய்ப்புப் பெறவும் ஆசிரியர் வழிகாட்டலாம்.

அறிவின் வாயில்களாக விளங்கும் ஊடகங்கள் அழிவின் வாயில்களாக மாணவர்களை விழுங்கி விடக் கூடாது என்பதால் அதனை ஒரு கலையாகப் பயின்று தனித்திறனைக் காட்டி வெல்லலாம். ஒளிக்குப்பின் பதுங்கி இருக்கும் இருளையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்ற புரிதலை இவ்வலகு அளிக்கும்.

## கற்றல் அடைவுகள்

- ✦ காலந்தோறும் ஊடகங்களின் வளர்ச்சியை அறிகிறார்கள். அதுகுறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- ✦ அச்சு ஊடகங்களின் அமைப்பை அறிகிறார்கள், தயாரிக்கிறார்கள்.
- ✦ குறும்படங்கள் தயாரிக்கிறார்கள், வெளியிடுகிறார்கள்.
- ✦ இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கங்கள் குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- ✦ தேவையான செய்திகளைத் திரட்டிப் பட்டியலிடுகின்றனர்.
- ✦ பிரபலமானவர்களை நேர்காணல் நடத்துகிறார்கள்.
- ✦ சமூகச் சூழலால் ஊடகங்களில் ஏற்படும் மாற்றங்களை அறிகிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்களும்

- ▲ ஊடகத்துறையின் நுாட்பங்களை அறிந்து அத்துறையில் ஈடுபடும் மனநிலையைப் பெறுதல்.
- ▲ இணையத்தின் பயன்பாடுகளை அறிந்து அவற்றின் மூலம் தன் கற்கும் திறனை வளர்க்கும் மன நிலையைப் பெறுதல்.
- ▲ திரைத்துறையின் நவீன தொழில்நுாட்பங்களின்
- ▲ நன்மை, தீமைகளை உய்த்துணரும் மனநிலையைப்பெறுதல்.
- ▲ சமூகவலைத்தளங்களைக் குறித்து தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனநிலையைப் பெறுதல்.

**பார்வை நூல்கள்**

பத்மன் கட்டுரை, தேனி எம். சுப்பிரமணியின் குறிப்பு, கோலாகல ஸ்ரீநிவாஸ் கவிதை, துரை மணிகண்டன் கட்டுரை, எம். சிமகுமார் கட்டுரை, மாலதி மைத்ரி கட்டுரை.

<table>
<tr><th colspan="2">அலகுச்சட்டம் (அறிவின் வாயில்கள்)</th><th>அலகு 1</th></tr>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr><td></td><td>கலந்துரையாடல்<br>ஊடகங்கள் என்றால் என்ன என்பது குறித்தும், அதனால் வரும் நன்மை தீமைகளைக் குறித்தும் விவாதிக்கின்றனர்.<br>பட்டியலிடுதல்<br>பத்திரிகைத்துறை இன்று பிடித்துள்ள இடத்தையும், எழுதும் உத்தியால் உலகில் மேலாண்மை செலுத்தும் விதத்தையும் உரையாடுகின்றனர். பல்வேறு பத்திரிகைத் தலைப்புச் செய்திகளைத் திரட்டிப் பட்டியலிடுகின்றனர்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>பல்வகையான சேகரிப்பு, ஒழுங்கு, பயன்பாடு</td><td>ஊடகங்கள் குறித்த தேவையான செய்திகளைத் திரட்டவும், பட்டியலிடவும் செய்கிறார்கள்.</td></tr>
<tr><td></td><td>நேர்காணல் நடத்துதல், திட்டமிடல்<br>பிரபலமானவர்களைக் கண்டு அவர்களின் வளர்ச்சித் தொடர்பான செய்தி களை இதழ்களில் வெளியிடத் தகுந்த வண்ணம் நேர்காணல் நடத்தத் திட்ட மிட வேண்டும். இந்நேர்காணலுக்கு முன் மாணவர்கள் முன்திட்டமிடலை தயார் செய்திட வேண்டும்<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>வரிசை ஒழுங்கு, தகவல் சேகரிப்பு, மொழிநடை, நேர் அளவு</td><td>பிரபலமானவர்களுடன் நேர்காணல் நடத்தி எழுத்து வடிவில் வெளியிடுகின்றனர்.</td></tr>
<tr><td></td><td>மேம்படுத்தல்<br>சிறந்த முறையில் மேம்படுத்தல் செய்யப்படாத பத்திரிகைச் செய்தியினையோ தாமே தயாராக்கிய பகுதியினையோ மேம்படுத்தச் செய்ய வேண்டும்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>பிழைத்திருத்தல், நிறுத்தற்குறிகள், சுருக்குதல்</td><td>படைப்புகளில் பிழைதிருத்தி மேம்படுத்துகிறார்கள்.<br>பதிவு செய்யப்பட்ட எழுதுத்துப் பதிப்புகளை மேம்படுத்தி வெளியிடுகின்றனர்.</td></tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | **கட்டுரைக் குறிப்புத் தயாரித்தல்**<br>தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள் என்னும் கட்டுரையை வாசித்துத் தமிழை வளர்ப்பதில் வலைத்தளத்தில் என்னென்ன வசதிகள் உண்டென்பதை குழுக்களாகக் கூடிக் குறிப்புகள் தயாரிக்கச் செய்தல், குறிப்புகளின் உதவியுடன் தமிழில் வலைப்பூக்களின் வளர்ச்சியும் பயன்பாடும் எனும் தலைப்பில் கட்டுரை எழுதிடச் சொல்லுதல். முதல் தமிழ் வலைப்பூ பற்றி சிறுகுறிப்பு வரைக எனும் செயல்பாட்டினையும் இத்துடன் இணைத்தே கொடுக்கலாம். | காலந்தோறும் ஊடகங்களின் வளர்ச்சியை அறிகிறார்கள். இவை குறித்தான கட்டுரைகள் எழுதுகிறார்கள். |
| | **மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தொடர்பு, பயன்பாடு, மொழிநடை, தலைப்புடன் ஒட்டிய தகவல்திரட்டல் | |
| | **பெட்டிச் செய்தி தயார் செய்தல்**<br>செய்திகளைச் சுருக்கமாகவும், பயனுள்ளதாகவும், தெளிவாகவும் சொல்லும் திறனை மாணவர்களிடம் உருவாக்க வேண்டும். அவ்வகையில் பெட்டிச் செய்தி தயாராக்கும் செயல்பாடு மாணவர்களிடம் சுருங்கக் கூறும் பண்பினை வளர்க்கிறது.<br>வலைப்பூக்கள் பற்றிய பெட்டிச் செய்தி எழுதும் திறனை வளர்க்கும்.<br>சுருங்கக் கூறல், மொழிநடை, தெளிவான கருத்து விளக்கம் | செய்திகளைச் சுருக்கமாக தெளிவாகச் சுவையாக வெளிப்படுத்துகின்றனர். |
| | **துணுக்குச் செய்தி எழுதுதல்**<br>பெட்டிச் செய்தி போலவே சுருங்கக் கூறலின் வடிவமே துணுக்குச் செய்திகள். சுவையாகக் கூறுவதே இதன் நோக்கம். பெட்டிச் செய்தியின் மதிப்பீட்டுக் குறிப்புகள் இதற்குப் பொருந்தும். | |
| | **சிறுகட்டுரை எழுதுதல்**<br>டிஜிட்டல் சூழலும் சினிமாவின் எதிர்காலமும் என்னும் கட்டுரையை வாசித்தும், முன் செயல்பாடுகளில் குறிப்புகள் பயன்படுத்திக் கட்டுரை எழுதியும் பழகிய மாணவர்களுக்கு அச்சு ஊடகம், திரைப்படங்கள் போன்றவற்றின் எதிர்காலம், தொழில் நுட்பகங்களில் இன்று எதிர்கொள்ளும் நன்மை / தீமைகளைப் | சமூக சூழலால் ஊடகங்களுக்கு ஏற்படும் மாற்றங்களைக் கட்டுரையாக வெளிப்படுத்துகின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | பட்டியலிடச் சொல்லி, அக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை வரைந்திடச் சொல்லுதல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்து, வடிவம், மொழிநடை, தெளிவு<br>**தலையங்கம் எழுதுதல்**<br>ஒளியும் இருளும் என்ற பிரிவில் அமைந்துள்ள கண்ணுக்குத் தெரியாத எதிரி கட்டுரை வாசித்துத் தலையங்கம் தயார் செய்திடச் செய்தல். வாட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்களால் ஏற்படும் பாதிப்பை நேர் நோக்கில் கண்டு தலையங்கம் எழுதிடச் செய்ய வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>தலையங்கத்தின் வடிவம், நேர்நோக்குப் பார்வை, விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்து , மொழிநடை, அறிவுறுத்தல், தலைப்பு<br>**விமர்சனக் குறிப்புகள் எழுதுதல்**<br>திரைவழியும் வன்கொடுமை எனும் மாலதி மைத்ரியின் கட்டுரையைக் கலந்துரையாடல் மூலம் விமர்சனம் செய்கின்றனர். அக்கட்டுரை குறிப்பிடும் திரைப்படம் தொலைக்காட்சி போன்றவைகளைச் சித்தரிக்கும் விளம்பரங்களின் நிலைகுறித்து விமர்சிக்கின்றனர், குறிப்புகள் எழுதுகின்றனர்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தொடர்பு, சமூக அக்கறை, விழிப்புணர்வு, மொழிநடை, சான்றுகள்<br>**குறும்படம் தயாரித்தல்**<br>ஊடகங்களால் ஏற்படும் விளைவுகளில் ஏதேனும் ஒன்றைக் குறும்படமாகத் தயாரிக்கத் திட்டமிடுகின்றனர். அறிவின் வாயில்கள் எனும் அலகில் அமைந்துள்ள செயல்பாடுகளின் வழி முகநூல் / வாட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்களால் ஏற்படும் ஆபத்தைச் சுட்டிக்காட்டிப் படிப்படியாகத் திட்டமிட்டுக் குறும்படம் தயாரிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர் போதுமான வசதிகள் செய்தி கொடுக்க வேண்டும். குழுச் செயல்பாடாக இச்செயல்பாட்டை வழங்கிட வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கதைக்கரு, திட்டமிடல், தரம், நடிப்பாற்றல் | இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கம் குறித்து அறிகின்றனர்.<br><br>ஊடகங்களால் ஏற்படும் விளைவுகளை சமூக அக்கறையுடன் அசைகி தீர்வு காணமுயல்கின்றனர். |

## அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

பல்வேறு விதமான பத்திரிகைச் செய்திகளை வகுப்பில் வாசித்தல். அச்செய்திகள் மக்களிடம் ஏற்படுத்தும் மாறுதல்கள் எத்தகையது என்பதைக் கலந்துரையாடல். ஊடகங்கள் உலகையே மாற்றிடும் வல்லமைப் படைத்தவை என்பதை விவாதித்தல்.

### பட்டியலிடுதல்

பத்திரிகைத் துறையில் என்னென்ன பணிகள் உண்டு. பத்திரிகைத் துறை இன்று எந்த இடத்தைப் பிடித்துள்ளது. என்பதை உரையாடிப் பல்வேறு பத்திரிகைப் பெயர்கள். உலகை உலுக்கிய தலைப்புச் செய்திகள் போன்றவற்றைத் திரட்டச் செய்து பட்டியலிடச் செய்ய வேண்டும். ஒப்படைப்பாக இச்செயல்பாட்டினை அளித்து வகுப்பில் கலந்துரையாடிச் சிறந்தவற்றைத் தொகுக்க உதவ வேண்டும்.

### கவனிக்க

எழுதும் கலை எனும் பாடத்தொடர்புடன் உரையாடலை நடத்த வேண்டும். மொழிநடைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். யாரையும் புண்படுத்தாத செய்திகளைத் தொகுக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பாடப்பகுதி, பத்திரிகைச் செய்திகள், இணையதளக் குறிப்புகள்.

### நேர்காணல் நடத்துதல், திட்டமிடல்

நேர்காணலுக்கான வினாக்கள் தயார் செய்து முன்வகுப்பு அனுபவம் பெற்றுள்ளனர். ஆனால் ஒரு நேர்காணலை நடத்த என்னென்ன முன் திட்டமிடல் வேண்டும் என்பதை மாணவன் அறிந்திருக்க வேண்டும். எழுதும் கலையை வளப்படுத்த நேர்காணல்கள் உதவும். நேர்காணல் நடத்தும் முன் திட்டமிட வேண்டியதை வரிசைப்படுத்துமாறு குழுக்கள் பிரித்து செயல்பாடுகள் அளிக்கட வேண்டும். சில நேர்காணலின் மாதிரிகள் (பத்திரிகையில் வெளிவந்தவை) குழுக்களுக்கு அளித்து நன்று.

**துணைக்கருவிகள்**

- திட்டமிடல் வரைவு, அனுபவக் குறிப்புகள், பத்திரிகை நேர்காணல் பேட்டிகள் மாதிரி வடிவம்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பிரபலமானவர்களுடன் நேர்காணல் நடத்தி எழுத்து வடிவில் வெளியிடுகிறார்கள். | ✦ வாழ்வில் உயர்நிலை அடைந்தவர்களைப் போன்று தாமும் உயர வேண்டும் என்று எண்ணுதல். |

### மேம்படுத்தல்

எடிட் செய்பவன் என்ற கவிதையினை வாசித்தும், எழுதும் கலை கட்டுரையின் மூலமும் எழுதும் கலையின் சிறப்பினை மாணவர்களுக்கு அளித்துள்ள எழுத்து இடம் மாறிப்போனாலோ, நிறுத்தற்குறிகள் பயன்படுத்தாமல் இருந்தாலோ பொருள் மாறும் என்பதை மேம்படுத்தல் என்ற செயல்பாட்டின் மூலம் புரிய வைக்க வேண்டும். பிழைகளுடனான ஒரு பத்தியை நிறுத்தற்குறிகள் இல்லாமல் அளித்து மேம்படுத்தச் சொல்ல வேண்டும். தனிநபர் செயல்பாடாக இச் செயல்பாட்டினை அளிக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பத்திரிகைச் செய்திகள், தமிழ் அகராதி, இலக்கணநூல்

### கட்டுரைக் குறிப்புகள் தயாரித்தல்

'தமிழில் வலைப்பூக்களும் வளர்ச்சியும் பண்பாடும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவதற்காகச் சிறு குறிப்புகள் தயாரிக்கச் சொல்லுதல், பலகுழுக்களாகப் பிரித்து செய்திகள் திரட்டி ஒன்றுபடுத்த வேண்டும்.

### பெட்டிச் செய்தி தயாரித்தல்

வலைப்பூவிற்கு Blog என்று பெயர் வரக் காரணம் என்ன என்பது பற்றிப் பெட்டிச் செய்தி தயாரிக்கச் சொல்லுதல். பெட்டிச் செய்திகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமையக் கவனிக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பெட்டிச் செய்தி மாதிரிகள்
- பாடநூல், வளப்பகுதி
- பல்வேறு பத்திரிகைச் செய்திகள்.

### துணுக்குச் செய்தி எழுதுதல்

துணுக்கு என்பது சிறிது, துண்டு என்பது பொருள். செய்திகளைச் சிறு வாக்கியங்களைச் சுவையாக எழுதிடச் செய்ய வேண்டும். நீண்ட கட்டுரைகளின் பக்கங்களிலோ அல்லது ஒரு பக்கத்திலேயோ பல்வேறு துணுக்குகளை அடுக்கடுக்காகவோ அமைக்கலாம். இதழியல் கலையில் ஒன்றே துணுக்குச் செய்தி எழுதுதலும். மாணவர்கள் கருத்தினை சுவையாக வெளியிடும் வாய்ப்பு இதனால் உருவாகும். பெட்டிச் செய்தி போலவே இது ஒரு வகை சுருங்கக் கூறலே.

**துணைக்கருவிகள்**

- பல்வேறு இதழ்களில் வெளியாகும் துணுக்குச் செய்தி ( மாதிரிகள்)

### சிறு கட்டுரை எழுதுதல்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ செய்திகளைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்துகின்றனர். | ✦ படைப்புகளில் கருத்துகளை வெளியிட்டு மகிழ்கிறான். |

கட்டுரைகள் எழுதும் முன் அது குறித்தான கலந்துரையாடல் நடத்தவும் புதுப்புது அறிவை மாணவனுக்கு வழங்கிடவும் ஆசிரியர் முயல வேண்டும். ஊடகக் கல்வியில் பலவற்றைக் குறித்தான நிகழ்கால அறிவை மாணவனுக்கு அளிப்பதில் ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். ஊடகங்களால் ஏற்படும் நன்மை, தீமை சமூகத்தில் ஊடகங்களின் இன்றியமையாமை பற்றித் தெளிவான அறிவை ஏற்படுத்தக் குறிப்புகள் எடுத்திடக் கூற வேண்டும். கட்டுரை தொடர்பான மிகத் தேவையான பயனுள்ள செய்திகளை மட்டும் எழுதிடச் சொல்லிப் பழக்க வேண்டும். முன் செயல்பாடுகளில் ( குறிப்பெழுதல்) அளித்ததுபோல் குழுச் செயல்பாடுகள் கொடுத்துப் பின் தனிநபராக கட்டுரைகளை உருவாக்கிடச் செய்ய வேண்டும். சிறு கட்டுரையின் அளவு, வடிவம், தெளிவு, மொழிநடை தலைப்பு போன்றவற்றை விளக்கினால் தேர்வுகளில் அதைப் பின்பற்ற மாணவனரால் இயலும்.

### துணைக்கருவிகள்

- பாடப் பகுதியில்- டிஜிட்டல் சூழலும் சினிமாவின் எதிர்காலமும்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ சமூகச் சூழலால் ஊடகங்களுக்கு ஏற்படும் மாற்றங்களைக் கட்டுரையாக வெளிப்படுத்து கின்றனர். | ✦ ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படும் தீமைகளுக்கு எதிராகச் செயல்பட நினைக்கின்றனர். |

### தலையங்கம் எழுதுதல்

"சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் ஒரு பக்கம் சாராமையே " தலையங்கத்தின் இலக்கணம். சமூகத்தில் நிகழும் தற்காலப் பிரச்சினையை மையமாகக் கொண்டு சமூக அக்கறை, காரண காரியத் தொடர்பு, விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்றவை தலையங்கத்தின் நோக்கமாகும். தலைப்பு, சிறு தலைப்பு, பத்திரிகை பெயர் போன்றவை தலையங்கத்தில் இடம் பெற வேண்டும். ஒளியும் இருளும் பாடப்பகுதியுடன் இணைந்து அளிக்கும் இச்செயல்பாடு ' வாட்ஸ் அப்' போன்ற சமூக வலைத்தளம் ஏற்படுத்தும் பாதிப்பினை விளக்கிடும் வண்ணம் அமைக்க உதவ வேண்டும்.

'வலைதளங்கள் விரிக்கும் வலை' என்ற தலைப்பில் கட்டுரை எழுதும் செயல்பாட்டினை அளித்துத் தொடர் மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தலாம்.

### துணைக்கருவிகள்

- பல்வேறு குறும்படங்கள்
- சமூக வலைத்தள அவலங்கள் பற்றிய செய்திகள்
- விழிப்புணர்வு பேட்டிகள்- காவல்துறை/ அரசாங்க எச்சரிக்கைகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கம் குறித்துத் தலையங்கமாகவும், கட்டுரையாகவும் வெளியிடுகின்றனர். | ✦ வலைத்தளப் பயன்பாட்டின் தீமைகளை உணர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த முயல்கின்றனர். |

### விமர்சனக் குறிப்புகள் எழுதுதல்

இன்று புறக்கணிக்கப்பட்டவர்களில் பெண்களும் உட்படுகின்றனர். ஊடக வளர்ச்சி எனும் நிலையில் பல பொழுதுபோக்கு நாடகங்கள், திரைப்படங்கள், விளம்பரங்கள் பெண்களை மிக மோசமாக சித்தரிக்கின்றன. உணர்வுகளை சீண்டிப் பார்க்கின்றன. ' திரைவழி நுழையும் வன்கொடுமை' என்ற மாலதி மைத்ரியின் கட்டுரை தெளிவாகப் புரிய வைக்கிறது.

இக்கட்டுரை திரைவழி நுழையும் செய்திகள் பெண்களை எந்ததெந்த முறையில் இழிவுபடுத்துகின்றனர் என்பதைப்புரியவைக்கிறது. இவ்வாறு உணர்த்தும் செய்தியை சமூகச் சூழலுடன் இணைத்து விமர்சிக்கும் ஆற்றல் மாணவரைச் சமூக விழிப்புணர்வு உள்ளவனாக மாற்றும். எனவே அதற்கு ஏற்றாற்போல் விமர்சனக் குறிப்புகள் எழுதிடச் செய்தல் வேண்டும்.

### துணைக்கருவிகள்

- பாடப்பகுதி
- தொலைக் காட்சித் தொடர்கள் மாதிரிகள்
- விளம்பரங்கள்
- திரைப்படப் பகுதிகள்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
| --- | --- |
| ❖ சமூக அக்கறையுடன் ஊடகங்களின் வளர்ச்சியின் மறுபக்கத்தை விமர்சித்துக் குறிப்புகளாக வெளிப்படுத்துகின்றனர். | ✦ பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணம் உருவாகிறது. |

## குறும்படம் தயாரித்தல்

இவ்வலகில் ஊடகங்களின் பல்வேறு முகங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எழுதும் கலையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு செயல்பாடுகள் வழி ஊடகத்தின் வாயிலாக ஏற்படும் அவலங்களை விவாதிக்கும் மாணவன், தன்சார்பாக சமூகத்திற்கு ஏதேனும் செய்திட விளைய வேண்டும். ஆசிரியர் உதவியுடன் ஒரு குறும்படம் தயாரிக்க மாணவர்களைத் தயார் செய்ய வேண்டும்.

குறும்படம் தயாரிக்க ஒரு முன் திட்டமிடல் நடத்திட வேண்டும். குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குறும்படம் தயாரித்தலின் பல்வேறு பொறுப்புகள் வழங்கிட வேண்டும். தேவையான கருவிகள், சூழல், கதாப்பாத்திரங்கள் ஆசிரியர் உதவியுடன் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்குறும்படம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் வெளியிட்டு அதை சமூக வலைதளங்களுக்கும் பகிர்ந்திட வேண்டும்.

### துணைக்கருவிகள்

- குறும்படம் எடுக்கத் தேவையான கருவிகள்
- கதைகள்
- செய்திகள்
- குறும்படங்கள்
- எச்சரிக்கைகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
| --- | --- |
| ❖ சமூக விழிப்புணர்வு ஏற்படும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கின்றனர். | ✦ குறும்படங்களை சமூக விழிப்புணர்விற்காகப் பயன்படுத்தும் எண்ணம் கொள்கின்றனர். |

# வளப்பகுதி

## எழுதும் திறன்

எழுதும் திறன் என்பது பல்வேறு வாழ்க்கைத் திறன்களில் ஒன்றாகும். இந்தத் திறனை ஒருவர் எக்காலத்தி லும் வளர்த்துக் கொள்ளலாம். இளமைப் பருவத்திலும் எழுதும் திறன் வளரும்; முதுமைப் பருவத்திலும் வயது ஒரு தடையல்ல எழுத வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும். எதை எழுத வேண்டும் என்ற தெளிவு வேண்டும். யாருக்காக எழுதுகிறோம் என்ற புரிதல் வேண்டும்.

வருவாயை மட்டுமே நோக்கமாகக் கொண்டு எழுதுபவர்களும் இருக்கிறார்கள். சமூக நோக்கிற்காக எழுது பவர்களும் இருக்கிறார்கள். எந்த ஒரு செயலிலும் பொது நலம் சேரும் போது அந்தச் செயல் மேலும் உயர்ந்த செயலாகி விடுகிறது.

எழுத்து வருவாயைத் தரும்: புகழைத் தரும்: சமூகத்திற்கு வழிகாட்டும்: அநீதியை முறியடிக்க உதவும். புதிய மாற்றத்திற்கு வழிவகுக்கும். ஒரு வித்தையை பயிலுவது போல எழுதும் கலையையும் கற்றுக் கொள்ள முடியும்.

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் எழுதும் திறனில் வளர்ச்சி காண முடியும். உழைப்பின்றி உயர்வில்லை. மீண்டும் மீண்டும் எழுதிப் பழக வேண்டும். எழுதியதில் உள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை நீக்க வேண்டும். மிகச் சிறந்த படைப்பை நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்கள் என்றால் அதில் ஏராளமான குறைகளைக் கண்டுபிடித்து சரி செய்திருக்கிறீர்கள் என்று பொருளாகும்.

எழுதும் கலை என்பது ஒருவரது படைப்பாற்றலுடன் தொடர்புடையது. ஒருவரது எழுத்து வளரும் போது படைப்பாற்றல் வளர்கிறது. படைப்பாற்றலின் ஒரு பகுதியாக எழுதும் திறனும் அமைந்துள்ளது.

நேரில் கண்ட ஒரு நிகழ்வைக் கட்டுரையாகவும் எழுதலாம்: கதையாகவும் எழுதலாம்: நாடகமாகவும் ஆக் கலாம்: ஏன் கவிதையாகவும் கூட எழுதலாம்.

மனதில் தோன்றிய எண்ணங்களைக் காட்சிப் படிமங்களை உணர்ச்சிகளை எழுத்து வடிவில் கொண்டு வருவது ஒரு கலை. அதற்குத் தனித் திறமை இருக்க வேண்டும்.

எழுத்து ஒரு வலிமையான ஆயுதம். சமூக அநீதியை எதிர்த்துப் போராடவும் மக்களைத் திரட்டவும் பய னுள்ள ஆயுதம் அது!

எழுத்தில் வெளிப்படும் கருத்து தனிநபரிடமோ மக்கள் குழுவினரிடமோ சென்றடையும் போது அவர்கள் மனதில் பொருள் வகை சக்தியாக மாறுகிறது. அதனால் தான் வாள்முனையை விட பேனா முனை வலிமை வாய்ந்தது என்றார்கள்.

எழுத முடியும் என்ற எண்ணம், உங்களை எழுத வைக்கும்! நீங்களும் எழுத்தாளர் ஆகலாம்! அது கடின மானது என்ற அச்சம் தவிர்ப்பது நல்லது. அதே சமயம் ரொம்பவும் சுலபமானது என்ற அலட்சியமும் கூடாது.

சித்திரமும் கைப்பழக்கம் என்பது போல் எழுத எழுத எழுத்து வரும். எழுத்தால் உயர்வு வரும். எழுத்து வித்தையைப் பயிலப்போவது உங்கள் விரல்கள் மட்டுமல்ல: மனமும்தான்! உங்களுக்கு எழுதும் திறன் இருந் தால் போதும், உங்கள் விரல்கள் வெட்டப்பட்டிருந்தாலும் எழுத முடியாமல் கட்டப்பட்டிருந்தாலும் வாய்ச் சொற் களில் எழுத்து மலர்கள் பூக்கும்!

இழந்த சொர்க்கம் எழுதிய போது மில்டனுக்குப் பார்வை இல்லை. விழிகள் பழுதானாலும் அவரது எழுத் துக்கள் பழுதாகவில்லை. அவருடைய அருமை மகளின் உதவியோடு ‘ இழந்த சொர்க்கம் ’ தோன்றியது.

எழுதும் திறன்தான் முக்கியம். பார்வையற்றோர்களும் இன்றைக்கு எழுத்தாளர்களாக இருக்கிறார்கள். நீங்களும் எழுத்தாளராகலாம். பார்வைக் குறைபாடு ஒரு தடையாக இருக்க முடியாது.

எழுத்தாளராக வேண்டும் என்பதற்கான மனநிலையை உருவாக்கிக் கொண்டு பயிற்சியில் ஈடுபட்டால் எழுதும் திறன் உங்களோடு உறவாகும்!

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**காலந்தோறும் ஊடகங்களின் வளர்ச்சியை அறிகிறார்கள். அது குறித்துக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. வலைப்பூக்கள் என்பது
   அ) face book ஆ) blog
   இ) e- mail ஈ) இணையம்

2. வெண்மையாக்கும் கிரீம்கள் விற்பனை அதிகரிப்பதன் காரணம்.
   அ) போலி விளம்பரங்களால் ஆ) வெளித்தோற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதால்
   இ) கறுப்பு நிறம் வெறுக்கப்படுவதால் ஈ) பயன்படுத்தி பலன் காண்பதால்

### மூன்று மதிப்பெண்கள்

4. வாய்மொழி எழுதும் போது ஏற்படும் எழுத்துப்பிழைகளும், பொருள் மாறுபாடும் மூன்று எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள்,
5. பத்திரிக்கைத் துறைக்கு உதவி ஆசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கும் நீங்கள் ஊடக வளர்ச்சியின் பாதிப்பு என்னும் தலைப்பில் தலையங்கம் ஒன்றை எழுதுங்கள்.
6. ‘ திரைவழியும் கொடுமை ’ என்ற மாலதி மைத்ரியின் கட்டுரை சுட்டும் செய்திகளை மகளிர் தினத்தில் பேசிட உரைக்குறிப்புத் தயார் செய்யுங்கள்.

### ஐந்து மதிப்பெண்கள்

7. தலைப்புகளில் செய்திகளைக் கவர்ச்சிகரமாக்க முடியும்- பெண்களின் விழிப்புணர்வு முகாம் நடைபெறுவதை பத்திரிகையில் வெளியிட ஐந்து வகையாகத் தலைப்புகள் உருவாக்குங்கள்.
8. தொலைக்காட்சியில் வெளிவரும் தொடர்கள் பெண்களின் உணர்வுகளை மதிப்பதில்லை, தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ஒரு விமர்சனக் கடிதம் எழுதுங்கள்.
9. “கொம்பு முளைத்தவைகளின் திமிர்
   பொட்டு வைத்தவைகளின் நாணம்
   கால் வாங்கப் போனால்
   கையூன்றும் சாகசம்
   இடம் மாறிப் போனால் பொருள் மாறிப்போகும்
   ரெண்டு சுழியும் மூன்று சுழியுமான
   ‘ன’ ‘ ண‘ க்கள்
   எழுத்துப் பிழைகளால் ஏற்படும் பிழைகள்- கவிதையினை பொருள் நயம் பாராட்டி, எடுத்துக்காட்டுகளுடன் விளக்கக் கட்டுரை எழுதுங்கள்.
10. கணினி வளர்ச்சியில் தமிழ்மொழி வளரும். கணினிப் பயன்பாட்டில் இன்னும் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம்- தெளிவான திட்டமிடல் அறிக்கை ஒன்றைத் தயார் செய்யுங்கள்.